உ

# ஆய்வு நோக்கில் சொக்கனின் முன்னீச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்




செல்வி.அ.திவ்யகலா. B.F.A (Hons)
ஆய்வாளர்



ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்
சிலாபம், இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆய்வு நோக்கில் சொக்கனின்
# முன்னீச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்

ஆய்வாளர்
செல்வி.அ.திவ்யகலா, *B.F.A.(Hons)*
(வீணை)
முன்னேஸ்வரம்

பதிப்பாசிரியர்
பிரம்மஸ்ரீ.ச.பத்மநாபன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சம்ஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெளியீடு :
ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம்
முன்னேஸ்வரம்
சிலாபம்
2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஆய்வு நோக்கில் சொக்கனின் முன்னீச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் |
| ஆய்வாளர் | : | செல்வி.அ.திவ்யகலா,B.F.A.(Hons) (வீணை) |
| பதிப்பாசிரியர் | : | பிரம்மஸ்ரீ.ச.பத்மநாபன்,<br>சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>சம்ஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2019 |
| பிரதிகள் | : | 300 |
| வெளியீடு | : | ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம்<br>முன்னேஸ்வரம் சிலாபம் |
| ISBN | : | 978-955-0877-71-3 |
| அச்சுப்பதிப்பு | : | மதி கலர்ஸ் பிறிண்டேர்ஸ்<br>இல.10 முருகேசர் ஒழுங்கை,<br>நல்லூர், யாழ்ப்பாணம். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இலங்கையின் புராதன சிவஸ்தலங்களுள் ஒன்றாக முன்னேஸ்வரம் விளங்குகின்றது. இராமாயணக் கதைமரபுடன் தொடர்புடையதும்; ஸ்ரீ ராமபிரான் வழிபட்ட சிறப்புமுடையதும் முன்னேஸ்வரம். இம் முன்னேஸ் வரஸ்தலத்தின் வடிவாம்பிகை அம்பாளின் பெருமை கூறும் நூலாக முன்னீச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் விளங்குகிறது. இந்நூல் நாயன்மார்கட்டு திரு.க.சொக்கலிங்கம் அவர்களால் 1999ல் இயற்றப்பட்டு முதற்பதிப்பாக வெளியிடப்பட்டது. அந்நூலின் பிரதிகள் இல்லாத காரணத் தினால் மீண்டும் மறுபதிப்பாக 2012ல் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

காலத்திற்கு காலம் அருகிவருவதும் பாதுகாக்கப்பட வேண்டியதுமான பழமையான நூல்கள் அழிந்து போகாமல் இருக்க வேண்டும் எனும் உயர் நோக்கோடு இந்நூல் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது. புதிய திருத்தங் களுடனும், அண்மைக்கால நிகழ்வுகள் வரையானதுமான வரலாற்று நிகழ்வு களுடன் ஒன்று சேர்க்கப்பட்ட புதிய பதிப்பு மிக விரைவில் வெளிவருவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் மற்றைய வடிவம் இசை வடிவமாக்குதல் ஆகும்.

முன்னீச்சரத்து தலத்திற்கான தமிழ்ப்பிரபந்தங்கள் பல காணப்படு கின்றன. அவை தொகுதியாகவும் 2018ல் வெளியிடப்பட்டன. முன்னேச்சரத்து வடி வாம்பிகை மீது பல தமிழ்ப்பிரபந்தங்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் ஒன்றே முன்னீச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் ஆகும். இந்நூலில் உள்ளடக் கம்பற்றிய ஆய்வை வெளிக்கொணருவதே இவ் வெளியீடு ஆகும்.

**ஆய்வுநோக்கில் சொக்கனின் முன்னீச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்** எனும் இவ் ஆய்வு நூல் முன்னேஸ்வரத்தைச்சேர்ந்த யாழ்ப் பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறையில் வீணையைச் சிறப்புப் பாடமாகக் கற்றுக்கொண்ட செல்வி.அ.திவ்யகலா என்பவரால் மேற்கொள்ளப்பட்டதாகும். இவர் இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியெய்தியவர் ஆவார். இவரது முயற்சி பாராட்டத்தக்கது. இது போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று ஆய்வுகள் பல காலந்தோறும் வெளிவரு வதனை வரவேற்கின் றோம். இந் நூலாசிரியர் மேன் மேலும் பல ஆய்வுகளை மேற்கொள்ள வேண் டும் என வடிவாம்பிகையின் திருவருளை முன்னிட்டு பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான வெளியீடாக வெளிவரும் இந்நூலை அனைவரும் பயனுடையதாக பாதுகாக்க வேண்டும் என கேட்டுக் கொள் கின்றோம்.

ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னநாத சுவாமியின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
இறைபணியில்
பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்
பிரதம குருவும், தர்மகர்த்தாவும்.

சிரேஷ்ட விரிவுரையாளர்,
சம்ஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

காரிய கலாமந்திரம்,
ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம்,
சிலாபம்.
14.04.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

முன்னேச்சரம் ஸ்ரீ வடிவாம்பிகை அம்பாள் மீது எழுந்த முன்னேச்சரம் ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் எனும் நூல் யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு திருவாளர் க.சொக்கலிங்கம் அவர்களால் 1999ல் இயற்றப்பட்டதாகும். இப்பிரபந்தம்பற்றிய ஆய்வே இந்நூல். இந்நூலை தமிழ்ப்பிரபந்த மரபில் எத்தகைய தனித்துவமும் சிறப்புமுடையது என்பதனை வெளிப்படுத்தும் வகையில் அதனை ஆய்வு செய்து வெளிப்படுத்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

இலங்கையின் புராதன ஈச்சரங்களுள் ஒன்றான முன்னேச்சரத்தின் இறைவியே ஸ்ரீவடிவாம்பிகை அம்பாள் இறைவன் ஸ்ரீ முன்னைநாதப் பெருமான் முன்னேச்சரத்தின் இறைவிமீது எழுந்த பலவகை இலக்கியங்களுள் செந்தமிழ்ச் செழுமைமிக்க இலக்கியமே இந்நூலாகும்.

முன்னேச்சரத்தின் ஸ்ரீ வடிவாம்பிகை அம்பாள் இப்பிரதேசத்தினதும், இலங்கையில் சக்தி வழிபாட்டு மரபிலும் மிகுந்த முக்கிய தத்துவயதாகும். இலங்கையில் சாக்த வழிபாட்டு மரபில் முக்கியத்துவம்பெறும் தனித்துவத்தையும் சிறப்பையும் விளங்கிக் கூறும் நிலையில் இப்பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னேச்சரத்துத் தமிழ்ப் பிரபந்தங்கள் பலவற்றின் வரிசையில் முன்னேச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை மீது எழுந்த சிறப்பும், இலங்கையில் பெண் தெய்வங்கள் மீது எழுந்த பிரபந்தங்களுள் முக்கியத்துவமுடையதாகும். இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தோற்றம்பெற்ற இந்நூலை ஆய்வு செய்வதனூடாக, பரந்த பண்பாட்டம்சங்கள் பல காணப்பட்டமை அவதானிக்கப் பட்டது.

முன்னேஸ்வர வரலாற்றுடன் இணைந்த பண்பாட்டம்சங்களும் அம்பிகையின் வரலாறுசார்ந்த பெருமைகளும், வழிபாட்டு மரபுகளும் இப்பிரபந்தத்தில் சிறப்புடன் ஆவணமாக்கப்பட்டுள்ளது. அழகின் வடிவமாக விளங்கும் ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவாம்பிகையின் பெருமை எவ்வளவு தூரம் இப்பிள்ளைத்தமிழ் பிரபந்தத்தில் காணப்படுகின்றது என்பதனை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

இவ் வாய்வை ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம் பதிப்பித்து வெளி யிடுகின்றமையை பெருமிதத்துடன் எமது நன்றியறிதலைத் தெரிவிக் கின்றேன்.

காலந்தோறும் தோன்றிய முன்னேச்சரப் பிரபந்தங்கள் பல காலத்தால் அழியாததன்மை பெறுவதோடு இசை வடிவம் பெறுவதனூடாக மக்கள் மயப் படும் என்பது எமது பேரவா வாகும்.

இந்நூலை முன்னேச்சரம் ஸ்ரீ வடிவாம்பிகை அம்பாளின் பொற்பாதங் களில் திருகரண சுத்தியுடன் சமர்ப்பிக்றேன்.

அ. திவ்யகலா
ஆய்வாளர்

**2ம் மைல்கல்**
**குருணாகல் வீதி,**
**முன்னேஸ்வரம்,**
**சிலாபம்.**
**14.04.2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான வரலாற்றுப்பின்னணி

**கோயிலின் சூழலும் எல்லைகளும்**

இந்து சமுத்திரத்தின் மரகதத்தீவு எனப் போற்றப்படுகின்ற ஈழ நாட்டிலே சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற, பழம் பெருமைகள் புதைந்து கிடக்கின்ற பல்வேறு சிவஸ் தலங்களுள் முதன்மை பெறுவது ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம் ஆகும். ஆதியும் அந்தமும் இல்லாப் பரம்பொருளை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு விசேட இறை சான்னித்தியம் பெற்று இவ்வாலயம் விளங்குகின்றது. இஷ்டசித்திப் பிரசாத அனுக்கிரக ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதப் பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் இம் முன்னேஸ்வர தேவஸ்தானம் இலங்கையின் மேற்குப்பகுதியில் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் நகரிற்கு கிழக்காக இரண்டு கிலோமீற்றர் தொலைவில் சிலாபம் - குருணாகல் வீதியில் அமைந்துள்ளது.

கற்பக விருட்சமெனப்படும் தென்னை மரங்கள் ஏராளமாக வளரும் இப்பகுதியில் இயற்கைக் காட்சிகளையும், பல்வண்ணப் புல்லினங்களையும் காற்றோட்டம், செழுமையான மண்வளம், நீரைத் தேக்கித் தேவையான வேளைகளில் நீரை நல்கும் வண்ணம் பரந்து காணப்படும் குளங்கள் எனச் சிறந்து விளங்கும் இவ்வூர், முன்னேஸ்வரம் கோயிலை மையமாகக் கொண்டே இத்துணை சிறப்புக்கள் காணப்படுகின்றன. முன்னேஸ்வரம் எனப் பெயர் வரக்காரணம் பற்றி நோக்கும்போது,"முன்னேஸ்வரம் எனும் பெயர் முன்தோன்றிய ஈஸ்வரம் எனும் பெருமையாலும்; பெயரறியா முனிவர்கள் வழிபட்டமையாலும் ; முனிவர்க்கெல்லாம் பெரு முனியாம் சிவபெருமானின் ஈஸ்வரம் என்பதாலும்; பிரம்மாவினால் முன்பு பூஜிக்கப்பட்டமையினாலும்; சிறப்பு மிக்க தாகப் போற்றப்படும் பஞ்ச ஈஸ்வரங்களான இராமேஸ்வரம், கேதீஸ்வரம், கோணேஸ்வரம், நகுலேஸ்வரம் எனும் நான்கு ஈஸ்வரங்களுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தால் முற்பட்டது எனும் பொருளுணர்த்தும் வகையில் முன்னேஸ்வரம் எனவும்," அழைக்கப்பட்டு சிறப்புப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவ் ஆலயத்தின் சிறப்புக்களில் "ஸ்ரீ சிவபுராணத்தில் சனத்குமார சம்ஹிதையில் அளகேஸ்வரம் என்ற பெயரில் குறிப்பிடப்படுகின்றதும், அறுபத்து நான்கு சக்தி பீடங் களில் ஒன்றாக விளங்குவதும், இம் முன்னேஸ்வர க்ஷேத்திரமாகும்"

ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானத்தின் ஆலய அமைப்பு முறைபற்றி நோக்கும்போது, சிவாகம விதிக்கமைய கிழக்கு நோக்கியதும், நான்கு வாயில்களை உடையதாகவும் விளங்கும் இவ்ஆலயத்தின் கருவறை மிகவும் பிரமாண்டமானதும், அற்பு தமான கலையழகுமிக்கதுமாகும். இவ் ஆலயக் கருவறையில் ஸ்ரீ முன்னைநாதப் பெருமானாக சிவலிங்கத் திருமேனி வடிவில் சிவனும், ஸ்ரீ வடிவாம்பிகை அம்பாளான சக்தியும் ஐக்கியமாக வீற்றிருக்கின்றனர். விநாயகர் முதல் சண்டேஸ்வரர் ஈறாகப் பரிவாரத் தெய்வங்களும் காணப்படுகின்றன.

பெரிய கோயில் எனப்படும் முன்னைநாதர் கோவிலைச் சுற்றி பல சிறிய கோயில்கள் அமையப்பெற்றுள்ளன. கோயிலின் தென்கிழக்குத் திசையில், வேட்டைத் திருமடமெனப்படும் விநாயகர் ஆலயமும், கோயிலின் மூன்றாம் வீதியின் வடமேற்கு மூலையில் ஐயனார் கோயிலும், தேரோடும் வீதியின் வடக்குத் திசையில் காளி கோயிலும், கோயிலின் புறத்தே, தென்திசையில் களத்துப் பிள்ளையார் என்று அழைக்கப்படும் விநாயகர் ஆலயமும் அமைந்து இச்சிற்றூரின் ஆத்மீக வாழ்விற்கு ஒளி வீசுவதனைக் காணலாம்.

சுற்று வட்டாரத்தில் அறுபத்து நான்கு கிராமங்களைக் கொண்ட முன்னேஸ்வரக் கோயிலுக்குச் சொந்தமான காணிகளின் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளாக கிழக்குத் திசையில் செனானம் **(Xenanam)** என்ற கிராமமும், மேற்குத் திசையில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஓர் ஆலமரமும், வட திசையில் குசலை என்ற கிராமமும், தென்திசையில் சைரதலோ**(Syratalo)** வாவியுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையப் பெற்றிருக்கின்றன.[1] மேலும் கலிகால சர்வக்ஞ பண்டிதன் என்ற பட்டத்தைக் கொண்ட ஒன்பதாம் பராக்கிரமபாகு (கி. பி. 1509 – 1528) என்ற மன்னன் இக்கோயிலுக்கு மானியமாகச் சில கிராமங்களை அளித்து, அதனை உறுதிப்படுத்தும் வகையில் செப்புப் பட்டயமும் எழுதிக் கொடுத்தான்.[2]

இக் கோயில் போத்துக்கீசர் காலத்தில் நூற்றியாறு கிராமங் களைக் கொண்டிருந்தது எனக் கூறப்பட்டுள்ளது.[3] எனினும் இன்று இந்நிலப்பரப்பு மிகக் குறைந்தளவிலேயே காணப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### பௌராணிகச் சிறப்பு

புராதன வரலாற்றுச் சிறப்பும், இலக்கியச் சிறப்பும் பெற்று விளங்கும் இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக வடிவாம்பிகையுடன் உறையும் முன்னைநாதப் பெருமானையும் அடியவர்கள் போற்றி வழிபாடு செய்கின்றனர். தீர்த்தமாக சித்தாமிருத கூபம் முதல் சிவதீர்த்தம் வரையான எண் தீர்த்தங்களினால் சூழப்பெற்றதும், மாயவனாறு (தெதுறு ஓயா) எனும் ஆற்றினை வடக்குத் திசையில் கொண்டும் அமைந்துள்ளது. தல விருக்ஷமாக அரசமரம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### ஸ்ரீ முன்னேஸ்வரத் திருக்கோயிலுடன் தொடர்புடைய இதிகாச புராண வரலாறுகளும் கர்ணபரம்பரைக் கதைகளும்

ஸ்ரீ முன்னேஸ்வரம் ஆலயம் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களுடன் தொடர்புடையதென்பதனை தக்ஷிண கைலாச மகாத்மியம் கூறுவதில் இருந்து அறியலாம். இராமாய ணத்தின் கதாநாயகனான இராமன் இலங்கைக்கு வந்து இராவண னைச் சம்ஹாரம் செய்தபோது அவரை பிரம்மஹத்தி தோஷம் பீடித்தது. அவர் பாரதநாட்டிற்குத் தன் பரிவாரங்களுடன் திரும்பிச் சென்ற பொழுது, முன்னேஸ்வரத்தைக் கடக்க நேர்ந்தது. அப்பொழுது அவரைப் பீடித்திருந்த பிரம்மஹத்திதோஷம்அகன்று விட்டதை உணர்ந்து இந்தப் புண்ணிய ஸ்தலத்தின் மகிமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்து சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசைகள் நடாத்தினார் என தஷிண கைலாச மகாத்மியம் கூறுகின்றது.[4] மேலும் இராமபிரான் இராவணனை சம்ஹாரம் செய்யச் சென்ற பொழுது இந்த ஸ்தலத்தில் வழிபட்டார்[5].

மகாபாரதக் கதையோடு முன்னேஸ்வரத்திற்கு எவ்வித நேரடித் தொடர்பும் இல்லாதபோதும் மகாபாரதக் கதையை எழுதிய வியாசர், காசியில் விஸ்வநாதப் பெருமானது சந்நிதியில் செய்த பாவம் முன்னேஸ்வரத்தில் நீங்கப் பெற்றமையும், வியாசர் முன்னைநாதரைத் துதித்தமை பற்றியும், தக்ஷிண கைலாச மகாத்மியத்தின் பதினாறாம் அத்தியாயம் “ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திர வைபவ கதனம்”எனச் சிறப்பித்துக் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக் கோயில் பற்றியதான கர்ணபரம்பரைக் கதை ஒன்று உள்ளது. முன்னொரு காலத்தில் செம்படவன் ஒருவன், முன்னேஸ்வரம் கோயிலுக்குச் சில மைல் தொலைவில் மீன்பிடிக்கச் சென்றபோது, சிறுவனொருவன் அழகான சிறுமி ஒருத்தியுடன் விளையாடிக் கொண்டிருந்தான். செம்படவனைக் கண்ட சிறுவர்கள் உடனே மாயமாக மறைந்து போனார்கள். இதைக்கண்ட செம்படவன் வியப்புற்று மறுநாள், பற்றை மறைவில் ஒளிந்திருந்து மாயமாக மறைந்து போகும் சிறுவர்களைப் பிடிக்க முயன்றான். எனினும் சிறுமியை மட்டுமே பிடிப்பதில் வெற்றி கண்டான். சிறுவனோ தண்ணீரில் மாயமாக மறைந்து விட்டான். செம்படவனால் கைப்பற்றப்பட்ட சிறுமியோ அதிசயிக்கத் தக்கவாறு தங்கமயமானதொரு சிறு விக்கிரமமாக மாறிவிட்டாள். இச் செய்தி காட்டுத்தீயைப்போல நாடெங்கும் பரவியது.

அப்போது ஈழநாட்டை ஆண்ட மன்னன் உண்மையை அறியும் பொருட்டு குறிப்பிட்ட விக்கிரகத்தைப் போன்று பல விக்கிரகங்கள் செய்வித்து இதனுடன் செம்படவன் கைப்பற்றிய மாய விக்கிரகத்தை அடையாளம் காட்டுமாறு அவனையே பணித்தான். செய்வதறியாது திகைத்த செம்படவன் துயில் கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் அவனுடைய கனவில் அம்மன் உருவம் தோன்றி "நீ அடையாளம் காட்டும்பொழுது எந்த விக்கிரகத்தின் வலது கால் சிறிது அசைந்து கொடுக்கின்றதோ அதுவே நீ அடையாளம் காட்டப்பட வேண்டிய விக்கிரகம்" எனக் கூறியது. மறுநாள் செம்படவன் மிகத் துல்லியமாக மாய விக்கிரகத்தை அடையாளம் காட்டி, நள்ளிரவு தான் கண்ட கனவைப்பற்றியும், மன்னனிடம் கூறினான். இதன் பிறகு அவ்விக் கிரகத்தை ராஜோபசாரத்துடன் முன்னேஸ்வரம் கோயிலுக்குக் கொண்டு வந்து வைத்து வழிபாடு செய்தான் மன்னன்.

அந்த அம்மன் விக்கிரகத்தை இன்றும் கர்ப்பக் கிரகத்தில் வைத்து வழிபாடு செய்வதனைக் காணலாம்.[6]

**ஈழத்து மன்னர்கள் திருப்பணி**

**குளக்கோட்டு மன்னன் பணிகள்**

மனுநீதி கண்ட சோழன் வம்சத்தில் சூரிய குலோத்துங்க ஸ்ரீ வரராமதேவராசனின் மைந்தனான, குளக்கோட்டு மன்னன், ஸ்ரீ கோணேசர் ஆலயத்தையும், ஸ்ரீ முன்னேஸ்வரத்தில் பழம் பெருமைகளை இழந்து, அழிவுற்றுச் சிதைந்த நிலையில் இருந்த திருக்கோவிலையும் சீர்திருத்தத் திருப்பணிகளை யெல்லாம், குறைவறச் செய்வித்து மகாகும்பாபிஷேகத்தையும் செய்து முடித்தான்.[7]

இம் மன்னனுடைய அரிய முயற்சியினால் இவ்வாலயம் மீண்டும் பெருங்கீர்த்தியுடனும், மங்காப்புகழுடனும் விளங்க லாயிற்று. இவன் தென் இந்தியாவின் சோழநாட்டில் இருந்து மக்களை வரவழைத்து முன்னேஸ்வரத்தில் குடியமர்த்தி ஆலயக் கிரியைகளைக் குறைவின்றி நடாத்த உதவினான். இதற்காக தனியுண்ணப்பூபாலன்என்பவன் அதிகாரியாக நியமிக்கப்பட்டான். இவன் ஏவலின்கீழ் ஆலய உள்மண்டபத்தில் ஆயிரம் நெய் விளக்குகள் ஏற்றி, தசாங்க தூப கலசங்களை வைத்து, பன்னீர், புனுகு போன்ற வாசனைத் திரவியங்களைக் கலந்து தெளித்து நவரத்தின கசித தங்கத் தாம்பாளங்களிலும், கிண்ணங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சம்பாவமுது, அறுசுவை கறி வகைகள், பசும்பால், பணிகார வகைகள், கற்கண்டு, வெல்லம், சர்க்கரை, கிழங்கு வகை போன்றவற்றை நிவேதனமாக அர்ப்பணித்து அலங்காரத் தீபாராதனை யாவற்றையும் சிறப்புறச் செய்வித்து வந்தான்.

மன்னன் ஆணையின்படி, முன்னேஸ்வர ஆலய பூமி அறுபத்துநான்கு கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இடுகுறி,காரணப் பெயர்கள் இடப்பட்டன. பிராமணர்கள் வாழும் இடம் "பிராஹ்மண யாகமம்" எனப்பட்டது. மேலும் வங்காதனி, கரவெட்டி, பண்டாரியா மூலைபோன்ற கிராமங்களின் பெயர்களைக் குறிப்பிடலாம். காலப்போக்கில் இக் கிராமங்களின் பெயர்களில் பல உருமாறலாயின. உதாரணமாக, "தீர்த்தக்கரை" என்னும் கிராமம் "தித்தக்கட" எனவும்,"மூங்கில் வெட்டுவான்" எனும் கிராமம் "முக்குனுவட்டவன"எனவும் மாறின. குளக்கோட்டு மன்னனின் அயராத பணியினால் இக் கோயில் புதுப்பொலிவுடனும்,பெருங்கீர்த்தியுடனும் விளங்குகின்றது. இம் மன்னன் இக்கோவிலைப் புணருத்தாரணம் செய்தமை கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு எனவும், கி.பி. 367 எனவும், கி. பி. 434ல் இருந்து 479 வரை எனவும் இலக்கியங்கள் பலவாறு கூறுகின்றன.

**ஆறாவது பராக்கிரமபாகு மன்னன் பணிகள் (கி.பி 1410 – 1462 வரை)**

இலங்கைத் தீவின் மாமன்னர்களில் ஒருவரான ஸ்ரீ சங்கபோதி மகாராஜாவின் வழித்தோன்றலிலே உதித்த ஸ்ரீ பராக்கிரமபாகு எனப்படும் ஆறாவது பராக்கிரமபாகு மன்னன் கி.பி. 1448ம் வருடம் இவ் ஆலயத்திற்குத் தலயாத்திரை ஒன்றை மேற்கொண்டான் என்ற செய்தி உள்ளது. இம் முன்னேஸ்வரத்தின் இடிந்த, பழுதுபட்ட பகுதிகளைத் திருத்தி, திருப்பணிகள் செய்து, பல கிராமங்களை மானியமாக அளித்து அச் செய்தியைக் கல்வெட்டுச் சாதனமாக அறிவித்தான். இக் கோவில் கர்ப்பக்கிருகச் சுவரில் இதனைக் காணலாம்.

இக் கல்வெட்டுச் சாசனத்தை மன்னன் கையளித்த போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலகண்டன் என்பவர் இவ்வாலயத்தின் பிரதம குருவாகவும், அவருடைய சகோதரர் பரிபாலன கர்த்தாவாகவும் விளங்கினார் என இக்கோயில் பழைய ஏடு ஒன்று சான்று பகருகின்றது. இக் கல்வெட்டுச் சாசனம் நிலமட்டத்திலிருந்து சுமார் நான்கு அடி உயரத்தில் நான்கு வரிகளாக கிட்டத்தட்ட நாற்பது அடி நீளத்திற்கு செதுக்கப்பட்டுள்ளது. இதிலுள்ளவற்றை வாசித் தறிவது மிகவும் சிரமமான காரியம். இதன் ஆங்கில மொழி பெயர்ப்பை பௌவர் என்பவர் எழுதியுள்ளார்.

**ஒன்பதாவது பராக்கிரமபாகு பணிகள் (கி.பி 1509 – 1528 வரை)**

கலிகால சர்வக்ஞ பண்டிதன் என்ற பட்டத்தையுடைய ஒன்பதாவது பராக்கிரமபாகு மன்னன் முன்னேஸ்வர ஆலயத்திற்கு வந்து ஸ்ரீ மகாவிஷ்ணுவை வழிபட்டு கோவிலுக்குப் பல கிராமங்களை கி.பி. 1517ம் வருடம் (புத்த வருடம் 2060) சர்வமானியமாகத் தாமிரசாசனம் செய்தான்.[8] இந்நிலப்பரப்பு கிழக்கில் மல் எலஎன்னும் நீரோட்டத்தையும், தென்புறத்தில் மாதம்பை என்ற ஊரில் நிறுத்தப்பட்ட எல்லைக் கற்களையும், மேற்கில் மானமான் தொட்ட என்ற நீர்த்துறையையும், வடதிசையில் முன்னேஸ்வரத்துள் பாயும் நீரோட்டத்தையும் எல்லையாகக் கொண்டிருந்தது. இவ்வாறு இம்மன்னனின் பணி சிறப்பானதாகும்.

**கீர்த்தி ஸ்ரீ ராஜராஜசிங்க மன்னன் பணிகள் (கி.பி 1747 – 1782வரை)**

கீர்த்தி ஸ்ரீ ராஜராஜசிங்க மன்னன் என்பவன் கி.பி. 1747 – கி.பி. 1782 வரையான காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்தான். இக்காலப்பகுதியில் இலங்கைமீது போர்த்துக்கேயர் படையெடுத்து சைவசமயக் கோவில்கள் யாவற்றையும் இடித்து அழித்தனர். இதன்போது மிக உன்னதமான நிலையில் இருந்த முன்னேஸ்வரம் கோயிலை அடிக்கடி சின்னாபின்னப்படுத்தி அதற்குச் சொந்தமான செல்வத்தை யெல்லாம் கொள்ளை யடித்தனர். “போர்த்துக் கேயரினால் கி.பி. 1578ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேஸ்வரம் தேவாலயம் தரைமட்டமாக்கப்பட்டது."[9]

கீர்த்தி ஸ்ரீ இராஜராஜசிங்க மன்னன், போர்த்துக்கீசரால் சின்னாபின்னப்படுத்தப்பட்டிருந்த முன்னேஸ்வரம் கோயிலை இந்தியாவில் இருந்து சிற்பாசிரியர்களை அழைப்பித்து வந்து திருப்பணிகளை நிறைவேற்றி 1753ம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தையும் சிறப்பாக நடாத்தி வைத்தான்.

கோவிலின் நித்திய, நைமித்தியக் கடமைகள் குறைவின்றி செவ்வனே நடைபெற ஏற்பாடுகளைச் செய்து, குருக்களுக்கு முப்பத்திரண்டு அவண நெல் விளைநிலங்களை சாலி வாகன சகாப்தம் ஆயிரத்தறுநூற்றெழுபத்தைந்து செல்லா நின்ற ஸ்ரீமுக வருடம் ஆவணி மாதம் பதின்னான்காம் திகதி கி.பி. 1753ல் செப்புப்பட்டயம் எழுதிக் கொடுத்தார்.[10]

மேலும் மலையாள தேசத்தை அரசாண்ட பழைய மன்னர் ஒருவர் ஆறுமுகக் கடவுளின் சிலை ஒன்றினை முன்னேஸ்வரம் கோயிலுக்கு அளித்து பிரதிஷ்டை செய்வித்தார்.

**பூஜை வழிபாடுகள்**

**நித்திய பூஜைகள்**

ஸ்ரீ முன்னேஸ்வர ஆலயத்தில் ஆறுகால நித்திய பூஜைகள் ஆகம சாஸ்திர முறைப்படி நடைபெற்று வருகின்றன.

**உஷக்கால பூஜை**

திருவனந்தல் என்ற பெயரால் சூரியோதயத்தின் முன் ஐந்தரை மணிக்கு நடைபெறும் பூஜை இதுவாகும். முதலில் பைரவருக்கு கர்ப்பக்கிருகக் கதவுகளின் திறவுகோலை முன்வைத்து பூஜை நடைபெறும். திறவுகோலை அங்குச முத்திரையோடு கூடிய விரல்களினால் எடுத்து பின் அம்பாள் சன்னிதானத்திலும் கடைசியாக மூலவருக்கும் பசும்பால், நெற்பொரி, நிவேதனத்துடன் பூஜை நடைபெறும். இது இரவில் நடைபெறும் கடைசிப் பூஜையாகிய அர்த்தசாமப் பூஜையின்பின் நோக்கி நடைபெறும் பூஜையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காலை சந்திப் பூஜை

சூரியோதயத்தின் பின் ஏழரை மணிக்கு நடைபெறும் பூஜையாகும். இதன்போது கோவிலிலுள்ள சிலா விக்கிரகங்கள் அனைத்திற்கும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். காலை சந்திப் பூஜையில் சூரிய பூஜையே முதலில் நடாத்தப்படும். பின்னர் மூலவருக்கும், பரிவார தெய்வங்களுக்கும் செஞ்சம்பாவமுதினை நிவேதனம் செய்து விரிவான பூஜைகள் இடம்பெறும். அருகே காணப்படும் வேட்டைத் திருமடம் விநாயகர் ஆலயத்திற்கும் அர்ச்சகர் சென்று அங்கும் அபிஷேக ஆராதனைகளை நடாத்துவதுடன் காலைசந்திப் பூஜை முடிவுறும்.

### உச்சிக்காலப் பூஜை

நடுப்பகலில் நடைபெறும் பூஜையின்போது ஆதார சக்தி முதல் மானசாபிஷேகம் வரை அர்ச்சித்து மூலவருக்கும் அம்பாளுக்கும் ஆராதனைகள் நடைபெறும். முதலில் கதவுகள் மூடப்படும்.

### சாயரட்சைப் பூஜை

அந்திசாயும் நேரம் சூரிய அஸ்தமனத்தின் முன் நடைபெறும் பூஜை இதுவாகும். பூஜையின் முன் ஆவாஹனம், அபிஷேகம், அலங்காரம், தீப ஆராதனை, தோத்திரம், நிருத்தியம் போன்ற அம்சங்கள் சுவாமி சன்னிதானத்திலும், அம்பாள் சன்னிதானத் திலும் விரிவாக நடைபெறுவது வழக்கம்.

### இரண்டாங்காலப் பூஜை

இரவு ஏழரை மணியளவில் பூஜஜ இடம்பெறும். பூஜை வழி பாட்டின் முன் சில விக்கிரகங்கள் அனைத்திற்கும், அபிஷே கங்களும், அலங்காரங்களும் நடைபெறும். இதன்பின் மூல மூர்த்திக்கும், பரிவாரத் தெய்வங்களுக்கும் செஞ்சம்பாவ முதினை நிவேதனமாகக் கொண்ட பூஜை நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அர்த்தசாமப் பூஜை

இரவு எட்டரை மணியளவில் இப்பூஜை இடம்பெறும். சுவாமி, அம்பாள், பைரவர் ஆகிய மூர்த்திகளுக்கு பாயசத்தை நிவேதித்து நடைபெறும் பூஜை இதுவாகும். இப் பூஜையின் நிறைவில் கதவுகள் பூட்டப்படுவதுடன் ஒரு நாளுக்குரிய நித்தியபூஜை வழிபாடுகள் இனிதே நிறைவு பெறும்.

உஷத்காலப் பூஜை சூரியன் உதயமாவதற்கு முன்னரே முக்கால் நாழிகைகளுக்கு முன்பாகவும், காலசந்திப்பூஜை சூரியோதயத்திற்கு பின் ஏழரை நாழிகைகளுக்கு முன்பாகவும், உச்சிக்காலப்பூஜை நடுப்பகலிலும், சாயரட்டைப் பூஜை சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னரே முக்கால் நாழிகைகளுக்கு முன்னும், இரண்டாங்காலப் பூஜை சாயரட்சைப் பூஜை நடைபெற்ற பொழுதிலிருந்து மூன்றே முக்கால் நாழிகைக்குள்ளும், அர்த்தசாமப்பூஜை இரண்டாங்காலப் பூஜைப் பொழுதிலிருந்து மூன்றே முக்கால் நாழிகைவரையிலும் நடைபெறலாம் என்பது விதி. இவ் ஆகம விதிமுறைகளுக்கு அமைவாகவே ஸ்ரீ முன்னேஸ்வர தேவாலயத்தில் நித்திய பூஜைகள் சிறப்புற நடைபெறுவதனைக் காணலாம்.

### நைமித்திய பூஜைகள்

பொதுவாக ஆலயங்களில் இடம்பெறும் பூஜைகள் நித்திய பூஜை, நைமித்திய பூஜை என இரண்டு வகைப்படும். அந்த வகையில் ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானத்தின் நைமித்திய பூஜைகள் பற்றி நோக்கும்போது, பிரதோஷம் எனப்படும் கிருஷ்ண, சுக்ல பட்சங்கள் (வளர்பிறை, தேய்பிறை) எனப்படுகின்ற இரு பட்சங்களின் பதின்மூன்றாம் நாளின் மாலைப்பொழுதைப் பொதுவாகப் பிரதோஷ காலம் என்பர். முன்னொரு காலத்தில் தேவர்களும், அசுரர்களும் ஒன்றிணைந்து மந்திர மலையை மத்தாகவும், சந்திரனை அடை தூணாகவும், வாசுகி என்னும் பாம்மை நாணாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது திருமால் ஆமை ரூபமாக வந்து மந்தரமலை சரிந்தும், ஆழ்ந்தும் போகாமல் நிலை நிறுத்திக் கொண்டார். அப்பொழுது பாம்பின் வாயிலிருந்து வெளிவந்த ஆலகால விஷத்தை எல்லாம் வல்ல எம்பிரான் பிரதோஷகாலத்தில் உண்டு ஆன்மாக்களைக் காத்தருளினார் என்பது புராணக்கதை. எனவே பிரதோஷ காலங்களில் பக்தர்கள் தம் நன்றியுணர்ச்சியைத் தெரிவிக்கும் வண்ணம் இறைவனை வழிபடுவதையே பிரதோஷம்என ஆகமங்கள் விதித்துள்ளன.

முன்னேஸ்வர ஆலயத்தில் பிரதோஷ பூஜை கிரமமாக நடைபெறுவது வழக்கம். விநாயகர், ஆறுமுகசாமி, நந்திகேசுவரர், மூலமூர்த்தி, அம்பாள், சண்டிகேசுவரர் ஆகிய விக்கிரகங்களுக்கு அபிஷேக, ஆராதணை பூஜைகள் யாவும் நடைபெற்று ஆலிங்கன மூர்த்த நிலையிலுள்ள சந்திரசேகரருக்கு விசேட பூஜைகள் நடைபெற்று இறுதியாகப் பூஜை நிறைவு பெறும்.

முன்னேஸ்வர சிவதலத்தில் இடம்பெறுகின்ற இன்னொரு முக்கிய பூஜை பர்வயந்திர பூஜை ஆகும். ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் அந்திப்பொழுதில் நடைபெறும் விசேட ஸ்ரீ சக்கர பூஜையே பர்வயந்திர பூஜைஎனப் பெயர் பெறும். சிவசக்தி ஐக்கியரூபமாக உள்ள ஸ்ரீ சக்கரத்தினை (மேரு யந்திரத்தினை) ஈழநாட்டில் முன்னேஸ்வரம் கோவிலில் மட்டுமே காணலாம். சுமார் இரண்டரை அடி உயரங் கொண்ட ஸ்ரீ சக்கர திருவுருவிற்கு அபிஷேகங்கள் நடைபெற்று மாலையில் சந்திரோதயத்தின் பொழுது ஸ்ரீ சக்கர பூஜை நடைபெறும். இவ் விசேட பூஜை பூத சுத்தி, அந்தர்யாஜன, பஞ்சாயதன பூஜை, குரு பாதுகா பூஜை, ஆவாகன பூஜை, சதுஷ்ஷஷ்டி பூஜை, உபகார பூஜை, நவமாரண பூஜை, லலிதா திரிசதி பூஜை, குங்கும நாமார்ச்சணை, ஸ்தோத்திரார்சணை முதலியவற்றினை விசேட அம்சமாகக் கொண்ட வழிபாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உற்சவங்கள்**

உற்சவம் என்பது இறைவனின் ஐந்தொழில்களில் ஒன்றான படைத்தலைக் குறிக்கின்றது. ஆகமங்கள் நான்கு வகையான உற்சவங்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. மாங்கலியம், சாந்திகம், பாவனம், சாகல்யம்என்பனவாகும். இவற்றிலே மங்களகரமான நிகழ்ச்சிகள் ஒரே நாளில் செய்து முடிக்கப்பெறும். உற்சவத்தினை மாங்கல்யவிழா என்றும், நாட்டின் சமாதானம், அமைதியின் பொருட்டு யாகம், பலி போன்றன இடம்பெறும். உற்சவத்தினை சாந்திகவிழா எனவும், நல்ல எண்ணம், தூயசிந்தனை போன்ற வற்றை மக்கள் மனதில் விதைப்பதற்காக பலி, ஹோமம் போன்றன நடைபெறுவது பாவன உற்சவம் எனவும், இறைவனின் ஐந்தொழிலை விளக்க வேள்வி, பலி போன்றவற்றுடன் கொடி யேற்ற வைபவங்களுடனும் நடைபெறும் விழாவினை மஹோற்சவம் எனவும் குறிப்பிடுவர்.

அந்த வகையில் ஆண்டுக்கு ஒருமுறை இடம்பெறும் பெருந்திருவிழா பிரம்மோற்சவம் எனப்படும். முன்னேஸ்வர தேவாலயத்தில் இடம்பெறும் திருவிழா (மகோற்சவம்) இருபத்தேழு தினங்கள் நடைபெற்று, ஆவணி மாதப் பௌர்ணமி தினத்தன்று தீர்த்தோற்சவத்தை இறுதியாகக் கொண்டதாக அமைந்துள்ளது. கொடியேற்றத் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம். கர்ப்பக்கிரகத்திற்கு எதிராகவுள்ள நந்திக்குப் பின்புறமாக உள்ள கொடிமரத்தில் ஏற்றப்படுவதற்காக நீண்ட தொரு வெண்துகிலில் விருஷப வாகனத்தில் சூலாயுதத்தையும், மங்கலப் பொருட்களையும் ஓவியமாகத்தீட்டி அதற்கு விசேட பூஜைகள் இடம்பெற்று, பின் யாகங்கள், பிரதிஷ்டைகள் போன்ற கிரியைகள் நடாத்தப்படும். பின் உற்சவ மூர்த்தியையும், கொடிச் சீலையையும் கோஷங்கள் முழங்க வீதிவலம் வரச்செய்து சமஸ்த தேவதா வாகனம் என்னும் கிரியயினை முடித்துக் கொடிச் சீலையை சகலவிதமான மங்கல ஓசைகளும் முழங்க கொடி மரத்தில் ஏற்றும் வைபவமும், இதன்பின் தர்ப்பைப் புல்லினாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு வஸ்திரத்தினாலும் கொடிமரத்தின் அடியை அலங்கரித்து அபிஷேக ஆராதனை, பலி முதலிய கிரியைகள் இடம்பெறும். திருவிழாவின்போது ஒவ்வொரு நாளும் காலையில் விநாயகர், முருகன்,ஆறுமுகன், சோமாஸ்கந்தர், அம்மன் ஆகியோருடைய திருவுருவங்களைக் கொண்ட திருவுலாக்காட்சியும் நடைபெறும்.

முன்னேஸ்வரத்தில் நடைபெறும் மகோற்சவத்தில் பக்தோற் சவம், பிக்ஷாடனோற்சவம், நடராஜ உற்சவம், வேட்டைத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பன சிறப்பு மிக்க வையாகும். இலங்கையில் அறுபத்துமூன்று நாயன்மார்களின் எழுந்தருளிய செப்புப் படிமங்களை முன்னேஸ்வரத்தில் மட்டுமே காணலாம். கலை எழில் சொரியும் வண்ணம் பார்ப்பவர் உள்ளத்தைக் கவர்ந்து இழுக்கும் வகையில் அவை காட்சிய ளிக்கின்றன. பக்தோற்சவ (சிவனடியார் திருவிழா) தினத்தன்று விசேட அபிஷேகங்கள், ஆராதனைகள் இடம்பெற்று மாலையில் சுவாமி திருவுலாக் காட்சியளிக்கும்போது சுவாமியையும் அறுபத்துமூன்று நாயன்மார்களின் திருவுருவங்களையும் தாங்கிய ரதம் பவனி வருவதைக் காண்பவர் தான் இப்பிறவிப் பயனை அன்று தான் உணரும் வகையில் அமைந்திருப்பதனைக் காணலாம்.

எங்கும் நிறைந்திருக்கும் எம்பிரான் பிச்சைக்காரக் கோலம்பூண்டு தாருகா வனத்திற்குள் புகுந்து யாகத்தினை மேலானதெனக் கருதி ஈசனை மதிக்காமல் அகம்பாவத்துடன் இருந்த முனிவர்களை அடக்கி, அறியாமை இருளை அகற்ற இறைவன் எடுத்த கோலமே பிக்ஷாடன மூர்த்தமாகும். முன்னேஸ்வரம் கோயிலிலுள்ள பிக்ஷாடன மூர்த்தி சுமார் ஐந்தரை அடி உயரமும், இலங்கை, இந்தியாவிலுமுள்ள கோவில்களில் வேறு எங்குமே இல்லாத கலை அழகுடன், சிற்ப சாஸ்திரத்திற்கே ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இது ஓர் அற்புத அபூர்வ படிமம் ஆகும். பிக்ஷாடனோற்சவ தினத்தன்று மூர்த்திக்குக் காலையில் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திசாயும் நேரம் கபாலமேந்தி அவிழ்த்துவிட்ட நீண்ட சடை கொண்ட சடாமுடியுடன் அதி அற்புத அலங்காரங்களுடன் திருவிழா இடம்பெறும். இக் காட்சி உண்மையிலேயே இறைவன் பிச்சை ஏந்தும் கோலம் கொண்டு இருப்பதையே உணர்த்தும். சாத்துப்படியில் நிபுணத்துவம் பெற்ற இக்கோயில் அந்தணர்கள் சிறந்த வகையில் அலங்காரம் செய்வதனைக் காணலாம்.

"குனித்த புருவமும் கொவ்வை செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே"

என்று அப்பர் சுவாமிகள் போற்றிப்பாடிய அந்த நடராஜப் பெருமானுக்கு காலைப்பொழுதில் ஆனந்த சபையிலே அபிஷேகங்கள், ஆராதனைகள் இடம்பெற்று சில நூறு வருடங்க ளுக்கு முன்னர் இக் கோவில் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட நடராஜ விக்கிரகம் சூரியனின் பொற்கிரகணக் கதிரொளிபட்டு ஒளி வீச வீதிவலம் வரும் கண்கொள்ளாக் காட்சியை ஆண்டுக்கு ஒரு முறையே தரிசிக்க முடியும்.

தேர்த்திருவிழா தினத்தன்று காலையில் வசந்த மண்டபத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள், அலங்காரங்கள் இடம்பெற்று பத்துமணியளவில் வடிவாம்பிகா தேவியையும், சோமாஸ்கந்த மூர்த்தியையும் கோவிலின் வடகிழக்கு மூலையில் அலங்கரிக்கப்பட்டிருக்கும் தேர்களுக்கு எழுந்தருளச் செய்வர். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள், இலட்சக்கணக்கான தேங்காய் களை உடைத்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர். ஆலய வெளிப்பிரகாரத்தினை தேர் சுற்றி வந்ததும், சுவாமி பச்சை சார்த்தப்பட்டு கோவிலுக்குள் எழுந்தருளிச் செல்லும் காட்சி பார்ப்போரை மெய்சிலிர்க்க வைப்பதாக அமையும். மாலை வேளைகளில் வாணவேடிக்கை, கரகாட்டம், தீப்பந்த ஆட்டம், காவடியாட்டம் போன்றனவும் இடம்பெறுவதனைக் காணலாம். தீர்த்தத் திருவிழா தினத்தன்று கோயிலுக்குச் சற்றுத் தொலைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் மாயவனாற்றிற்கு (தெதுறு ஓயா) எழுந்தருளச் செய்து மூர்த்தி தீர்த்தமாடுவதையும், பின் வடிவழகியம்மனுக்கு தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தீர்த்தத் திருமடத்தில் அம்மடாதிபதிகளால் நடாத்தப்படும் பூஜைகள், ஆராதனைகள் இடம்பெறுவதனைக் காணலாம்.

**விரதங்களும் பண்டிகைகளும்**

வருடத்தில் வசந்த நவராத்திரி, சாரதா நவராத்திரி என இரண்டு நவராத்திரிகள் முக்கியம் பெறும்போதும், முன்னேஸ்வர ஆலயத்தில் சாரதா நவராத்திரியே சிறப்பானதாகும். புரட்டாதி மாத பூர்வபட்சத்து பிரதமை தொடக்கம் நவமி வரையுள்ள ஒன்பது நாட்கள் நடாத்தப்படும். இவ்விழாவின்போது ஒவ்வொரு நாள் காலையிலும் நூற்றி எட்டுச் சங்குகளைக் கொண்ட சங்க பூஜையும், கும்ப பூஜையும் பிரதமகுருவினால் நிகழ்த்தப்படும். ஒவ்வொரு சங்கிலும் ஒவ்வொரு விதமான மூலிகைகள் போடப்பட்டு அபிஷேகம் நடாத்தப் பெறுவதால் முன்னேஸ்வர ஆலய நவராத்திரி தீர்த்தம் மிகச் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. பிரதமகுருக்கள் தேவியின் முன் வீற்றிருக்க மற்றைய குருமார் மாலா மந்திரத்தை பக்தியுடன் சோபித்து பஞ்சாராத்திரிகையை ஆராதிப்பதுடன் காலையில் வடிவாம்பிகா தேவிக்கு நடைபெறும் விரிவான விசேட அபிஷேகம் இதுவாகும்.

நல்லெண்ணெய்க் காப்பிட்டு அரிசிமா, மஞ்சள்மா, நெல்லிமா முதலியவற்றினாலும், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், தேன், கரும்பு, நீர், பல்வேறு பழரசங்கள், செவ்விளநீர் போன்றவற்றினாலும் நறுமணமான வெண்சந்தணம், குங்குமம், வெண்சங்க ஔஷத நீர் போன்றவற்றினால் தேவியின் திருவுள்ளத்தினை அபிஷேகம் செய்து அபிஷேகத் தீர்த்தத்தினை அடியவர்களுக்கு வழங்கு வதனைக் காணலாம். பூஜையின்போது தசாங்க தூபதீபம், அடுக்குத் தீபம், நட்சத்திரதீபம், நாகதீபம், பஞ்சமுக தீபம், சதுர்முக தீபம், வில்ப தீபம், விருஷப தீபம், புருஷாமிருக தீபம், மயூர தீபம், கூர்ம தீபம், கும்ப தீபம்,கற்பூர தீபம், பஞ்சாரத்திரிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றனவும் கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, கொடி, ஆலவட்டம் போன்ற உபசாரப் பொருட்களாலும், சுவர்ணமய சிம்மாசனத்தில் கொலுவீற்றிருக்கும் தேவியை ஆராதனை செய்வர். நவராத்திரியின்போது ஒவ்வொரு நாளும் "மஹாஷோ டான்னியாச பூர்வக கிரியா கலாப சதுஷ்ஷஷ்டியுபசார மகாபூஜை" இடம்பெறுவதனைக் காணலாம்.

மாசி மாதத்து கிருஷ்ணபட்சத்து சதுர்த்தசியில் நடைபெறும் மகாசிவராத்திரி சிறப்பானது ஆகும். முன்னேஸ்வரர் கோவிலில் சிவராத்திரி நான்கு யாமங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு யாமத்திலும் நூற்றியெட்டுச் சங்குகளைக் கொண்ட சங்கு பூஜையும், அபிஷேகங்கள், தீபாராதனைகள், பஞ்சமுகசகஸ்ர நாமார்ச்சனை போன்றனவும் இடம்பெறும். கடைசிக்காலப் பூஜையின் இறுதிக்கட்டத்தில் உதயசூரியனின் கதிர்கள் மூலவரின் மீது பட்டுத் தெறிப்படைகின்றமை குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

மேலும் முன்னேஸ்வர திருக்கோவிலில் இலட்சார்ச் சனை, திருக்கார்த்திகை, திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, தீபாவளி, சகஸ்ர சங்காபிஷேகம், தைப்பொங்கல் போன்ற பல்வேறு பூஜைகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

**முன்னேஸ்வர கோவிலும் சமூகமும்**

முன்னேஸ்வர கோவில் இப்பகுதி மக்களின் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. இக் கோவிலுக்குச் சிங்கள மக்கள் பெரும் கூட்டத்தினராகவந்து வழிபடுகின்றனர். பௌத்தர்கள், கிறீஸ்தவர்கள், முகம்மதியர் போன்ற பல்வேறு சமயத்தவர்களும் எவ்வித பேதங்களுமின்றி இங்கு வந்து வழிபாடு செய்கின்றனர்.[11] சாதி, சமய பேதமின்றி எல்லோரும் மகாமண்டபம் வரை சென்று வழிபடும் மரபு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. தொன்று தொட்டு வரும் வழக்கம் இதுவாகும். தாம் நினைத்த காரியம் நிறைவேற நேர்த்தி செய்வதும், அது நிறைவேறிய பிற்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த உலோகத்தினால் செய்யப்பட்ட பொருட்களைக் காணிக்கை செலுத்துவதனையும் காணலாம். பிள்ளைவரம் வேண்டித் தென்னம்பிள்ளைகளையும், சரும வியாதிகளுக்குத் தூண்டாமணி விளக்கின் எண்ணெயை இன்றும் பக்தர்கள் பாவிப்பதனையும் காணலாம். மனப்பயம் நீங்க மக்கள் மஞ்சள்கயிறு கட்டுவித்துக் கொள்வார்கள். இக் கோயிலின் பிரதம குரு ஒருவர் ஆயுள்வேத வைத்தியராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கு நடைபெறும் பெருந்திருவிழாவில் அதிகமான உற்சவங்களைத் தனிமனிதர்களாகச் செய்யாமல் கிராமத்தவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து செய்வதனைக் காணலாம். இதனால் கிராமத்தவரிடையே ஒற்றுமைப்பண்பு மேலோங்கும். திருவிழாவின் ஒவ்வொரு நாளும் கூத்து, நாடகம் போன்றவை இடம்பெறுவதுடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என எமது பண்பாடுசார் விழுமியங்களில் எவ்வித தாக்கத்தினையும் ஏற்படுத்தாது ஒற்றுமையாக ஊர்கூடி இடம்பெறுவதனை அவதானிக்கலாம். அடியவர்கள் வந்து தங்குவதற்கென பெரிய மடங்கள் கட்டப் பட்டுக் கொண்டிருக்கின்றமையைக் காணலாம். முன்னேஸ்வரம் கிராமத்தில் யாராவது இறந்துவிட்டால் பூதவுடல் ஊரைத்தாண்டும் வரை கோயில் கதவுகள் பூட்டியே இருக்கும். ஆயினும் இன்று இவ்வெல்லைக் கோவிலைச் சுற்றிய வீதிகள் என குறைக்கப்பட்டு இருக்கின்றன.

இக் கோயில் சுகாதாரத்தினை முன்நிறுத்திக் கட்டப்பட் டுள்ளமையினைக் காணலாம். ஊரின் உயர்ந்த காற்றோட்டம் உள்ள இடத்தில் காற்றுப்போய் வரக்கூடிய அகன்ற பெரிய வாயில்கள், தாழ்வாரங்களுக்கிடையே பெரிய திறந்த இடை வெளிகள் என விளங்குகின்றது. மிளகு, நெய் என நோய் தீர்க்கும் பொருட்களுடன் கூடிய பிரசாத உணவு வழங்கப்ப டுகின்றது. கோயில் கிணறுகள் ஊரின் குடிநீர்ப் பிரச்சினையை இல்லாமல் செய்து விடுகின்றன. பின்புறம் இருக்கும் நந்தவனம் ஆலயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குப் பூக்களைக் கொடுப்பதுடன் நறுமணத்தையும், மூலிகைகளையும் கொண்ட ஒரு தோட்டமாக விளங்குகின்றது. கோயில் மண்டபம், திருக்குளங்கள் எல்லாம் இவ்வூர் மக்களின் சமுதாய, சமய வாழ்க்கையில் தர்மத்தினைப் போதிக்கும் நிலைக்களனாக விளங்குவதனைக் காணலாம்.

### ஆலய பிரதம குருக்களும் தர்மகர்த்தாவும்

முன்னேஸ்வர தேவஸ்தானத்தில் இதுவரை பலர் பிரதான குருக்களாக தங்கள் இறைபணியினை அருமையாகச் செய்து முடித்துள்ளனர். அந்தவகையில் நோக்குகையில்,

1. பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் (கி. பி. 1819 – 1912)
2. சோமாஸ்கந்தக் குருக்கள் (கி. பி. 1886 – 1940)
3. பாலசுப்பிரமணியக் குருக்கள் ( – 1968)
4. பிரம்மஸ்ரீ ஸ்ரீ இரத்தின கைலாசநாதக் குருக்கள் (கி. பி. 1926 – 2005)

போன்ற விற்பன்னர்கள் ஆலய பரிபாலனத்தை சிறந்த வகையில் நடாத்தி வந்துள்ளமையினைக் காணலாம். இன்று இவ்வாலய பிரதம குருக்களாக ச. பத்மநாபக்குருக்கள் அவர்கள் திறம்படச் செயலாற்றி வருவதுடன் ஆலயம்சார் சான்றுப் பொருள்களை எதிர்காலச் சந்ததிகளுக்குச் சிறந்தவகையில் கையளிப்பதற்கான பல்வேறு ஆவணங்களினையும், ஆவணப்படுத்துகின்ற நடவடிக்கைகளினையும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### அடிக்குறிப்புக்கள்

1. PIERIS LITT.D, P.E., (1893), **"THE CEYLONLittoral"**P. 4
2. WILHEIM GEIGER, (1930), **"THE CULAVAMSA"**,II.
3. FARNANDO. E. A., **"CATHOLIC CHILAW"**, P. 10.
4. ஸ்ரீ தக்ஷிண கைலாச மகாத்மியம்,பதினைந்தாம் அத்தியாயம்.
5. ARUNACHALAM. P., **"SKETCHES OF CEYLON**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**HISTORY"**, P. 7.

6. வைத்திலிங்கம்.அ., (1924),"முனிசுரவந்தாதி", பக். 3 – 4.
7. சோமாஸ்கந்தக் குருக்கள். மு., (1927),"முன்னேஸ்வர மாண்மியம்", ப. 10.
8. WILHEIM GEIGER., (1930), IBID, P.24.
9. CODRINGTON. H.W., (1947), **"A SHOT HISTORY OF CEYLON"**, P.130.
10. சோமாஸ்கந்தக் குருக்கள். மு., (1927), மு.கு.நூல், ப. 10.
11. KAILASANATHA KURUKKAL. K., (1957), **"A STUDY OF SAIVISM OF THE EPIC AND PURANIC PERIODS"**.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமுன்னீச்சரத்து ஸ்ரீவடிவாம்பிகை மீதெழுந்த பிரபந்தங்கள்

### தமிழ் பிரபந்தம் – அறிமுகம்

தமிழ் இலக்கியப்பரப்பில் பிரபந்தங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. "பிரபந்தம்" எனும் சொல் வடமொழிச் சொல்லாகும். இதனை இலக்கியம் என்றும் தமிழில் பொருள் கொள்ளுவர். வைணவ பிரபந்த வகையில் நாலாயிரம் திவ்ய பிரபந்தம் எனப் பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றது. நம்பியாண்டார் நம்பி தொகுத்த பதினொராம் திருமுறை பிரபந்தமாலை என்றே அழைக்கப்படுகின்றது.[1] தமிழ் இலக்கிய மரபில் பேரிலக்கியம் சிற்றிலக்கியம் எனும் பாகுபாட்டில் பேரிலக்கியம் என்பது காவியம் அல்லது பெரும்காப்பியம் என்றும் சிற்றிலக்கியம் பிரபந்தம் என்றும் அழைக்கப்படுகின்றது.

தமிழ் இலக்கிய மரபில் தமிழில் எழுந்த சிற்றிலக்கிய மரபே "பிரபந்தம்" என்று அழைக்கப்படுகின்றது.

தமிழில் செய்யுள் வகைகளைக் கூறும் இலக்கண நூல்களாகப் பாட்டியல் நூல்கள் விளங்குகின்றன. பிரபந்தங்கள் கூறும் இப்பாட்டியல் நூல்களாயமைந்த பிரபந்தத்தை "பாட்டு" எனும் பொருளிலேயே பொருள்கொள்ளப்படுகின்றது. எனவே, பல்வேறு செய்யுள் வகைகளால் இலக்கியங்களைச் சுட்டி நிற்கும் இலக்கியச்சட்டகமே பிரபந்தம் எனலாம். பாட்டியல் நூல்களின் தோற்றத்தின் பின்னரே "பிரபந்தம்" எனும் பெயரும் அவைகளின் வகை தொண்ணூற்றாறு என்றும் அவற்றிற்கான இலக்கணமும் இயற்றப்பட்டன.

தமிழிலக்கிய வரலாற்று மரபில் சங்ககாலம் முதலாக தனிநிலைப்பாடலாகவும், தொடர்நிலைப்பாடலாகவும் விளங்குகின்றன. இம்மரபில் காப்பியங்களும் தோன்றின. அகம்,புறம் என காதலையும் வீரத்தையும் போற்றிய மரபின் படிநிலை வளர்ச்சியில் பக்திப்பாசுரங்கள் தோன்றத் தலைப்பட்டன. அம்மரபில் திருமுறுகாற்றுப்படை முதலாகவும், காரைக்காலம்மையாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திப்பாசுரங்கள் முதலான பக்தி இலக்கிய மரபு தோன்றியது. பக்திப்பாடல் மரபை பக்தி இயக்கம் என்றும் அழைப்பர். சமய மரபை மக்களிடையே எழுச்சியுடன் பரப்புவதற்கு நாயன்மார் களும், ஆழ்வார்களும் முற்பட்டனர். இலக்கியத்தில் பல்வேறு வகைகளை காணும்முயற்சி ஏற்பட்டது. இலக்கியம் எனும் கருவியூடாக மக்களைக் கவரத்தக்கவகையில் சமயத்தைப்பரப்பும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. இசையோடு இணைதல், நாட்டுப்புற வடிவங்களை ஏற்றுதல், பல்வேறு விதமான பாவடிவங்களை உருவாக்குதல் போன்ற மாற்றங்கள் அதனால் ஏற்பட்டன.[2] இதனடிப்படையில் பக்தி இயக்கமே பிரபந்தங்கள் பெருகக் காரணமாய் அமைந்தது.

காரைக்காலம்மையாரின் திருவிரட்டைமணிமாலை முதற் தோன்றிய பக்திப்பதிகமாகவும், பிரபந்தவகையுள் ஒன்றாகவும் காணப்பட்டது. பெரியாழ்வாரின் பாடல்கள் கண்ணனைப் பிள்ளைப்பருவத்தில் பாடும் மரபின் பெரும் ஈடுபாடானது பிள்ளைத்தமிழ் உருவாவதற்கு காரணமாயமைந்தது. அம்மானை, ஊசல், தூது, சாதகம், கேசாதிபாதம், உலா போன்ற பிரபந்தவகைகளில் பெரும்பான்மையானவை சமயச்சார்புடையன வாகவும், தெய்வங்களின் பெருமைகளையும், திருக்கோவில் மரபுகளையும் கூறுவனவாகவும் அமைந்து காணப்படுகின்றன.

சங்ககாலத்தையடுத்து தமிழில் "தொடர்நிலைச் செய்யுள் மரபு" ஒன்று உருவாகியது. தொடர்நிலைச் செய்யுள் என்பது செய்யுளில் ஒரு கதை தொடர்ச்சியாக வருவதைக் குறிப்பதாகும். சங்க இலக்கியப் பாடல்களை இதனோடு ஒப்பிடுகையில் தொடர் நிலையின் எதிரான தொகைநிலையாகக் காணப்படுகின்றது. அதாவது தனித்தனிப் பாடல்களின் தொகுதியாக அமைந்துள்ளன. இதில் ஒரு கதை தொடர்ச்சி கிடையாது.

தண்டியாசிரியர் தமது தண்டியலங்காரத்தில் செய்யுட்களுக்கு அணியிலக்கணத்தைக் கூறவிழையும் வேளை தொடக்கத்தில் செய்யுட்களின் வகைகளைப் பின்வருமாறு கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் என்பதைத் தெளிவுற விரிப்பின்
முத்தகம் குளகம் தொகை தொடர் நிலையென
எத்திறத் தளவும் ஈரிரண் டாடும்.[3]

செய்யுள் என்பதை தெளிவுற விரிப்பின் முத்தகம் குளகம் தொகை தொடர் நிலையென எத்திறந் தனவும் ஈரிரண்டாகும். (தண்டியலங்காரம்)

என நான்கு வகைகளாகக் கூறியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இவ்வகையுள் நான்காவதாக அமையும் தொடர்நிலைச் செய்யுள் என்பது பெரும் காப்பியமும் சிறுகாப்பியமும் உள்ள இலக்கியங்களாகும்.[4]

தண்டியலங்கார உரை சிறுகாப்பியமும் சிற்றிலக்கியமும் ஒன்றுடையதன்மையாகவே கருதப்படுவதாக நா.செயராமன் கருதுகின்றார்.[5]

தமிழ் இலக்கிய மரபில் செய்யுட்களே இலக்கியத்தர முடைய தன்மைகளைப் பேணிவந்தன. அம்மரபில் சங்ககால இலக்கியங்கள் தனிநிலைச்செய்யுள் மரபாக விளங்க அம்மரபின் வளர்ச்சி தொடர்நிலைச் செய்யுள் மரபு என மாற்றமுற்று வளர்ச்சி பெற்றதன் விளைவாகக் காலக்கிரமத்தில் பிரபந்தங்கள் தோன்றவும் தலைப்பட்டன. பிரபந்தங்கள் தொடர்நிலைச் செய்யுள் மரபையே பேணிவருகின்றன.

பிரபந்தங்கள் சொற்றொடர்நிலைச் செய்யுள், பொருட் டொடர் நிலைச்செய்யுள் என இருவகைகளில் ஆக்கப் பெறுகின்றன. அந்தாதி சொற்றொடர் நிலைச்செய்யுள்வகையாகும். கோவை, புராணம் என்பன பொருட்டொடர்நிலைச் செய்யுள் வகையாகும். பதிகம், பிள்ளைத்தமிழ் போன்றவை புறப்பொருள் தழுவி இயற்றப்படுவன. இப் பிரபந்தங்கள் ஒரு பொருளைப் பலபடப் புனைந்தும் ஒரு பொருளைப் பல உபதலைப்புக்களிற் புகழ்ந்து பாடுபவைகளாகவும் காணப்படுகின்றன. ஒரு பொருளை பல உபதலைப்புக்களிற் பாடுவதற்கு பிள்ளைத்தமிழ் உதாரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்காப்பியம் கூறும் எண்வகை வனப்புக்களான அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைவு என்பவற்றைப் பிரபந்தங்கள் தத்தம் பண்புகளுக்கேற்ற வனப்புக்களைக் கொண்டு விளங்குகின்றன.

**தமிழிலக்கிய வரலாற்றில் பிரபந்தம்**

தமிழ் இலக்கியம் சங்ககாலத்து எட்டுத்தொகை, பத்துப்பாட்டு தொடக்கம் இன்று வரையான வளர்ச்சிப்போக்கைக் கொண்டதாக விளங்குகின்றது. கைக்கிளை, கையறுநிலை, இயன்மொழி வாழ்த்து, பெருமங்கலம், ஆற்றுப்படை, வாயுறைவாழ்த்து, செவியறிவு, புறநிலைவாழ்த்து என்பன சங்ககாலத்தில் தோன்றியவையாகும். எனினும் அக்காலத்தில் அவை பிரபந்தம் எனும் பெயரைப் பெற்றிருக்கவில்லை

அறநெறிக்காலத்தில் அறநூல்கள் பெருந்தொகையாகத் தோன்றின. பக்தி இயக்கத்திற்கு வித்திட்ட காரைக்காலம்மையார் திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி திருவாலங்காட்டு, மூத்ததிருப்பதிகம் போன்ற நூல்களையும் முதலாழ்வார்கள் மூவரும் மூன்று திருவந்தாதிகளையும் இயற்றினர். இவை கட்டளைக்கலித்துறை, விருத்தப்பா,வெண்பா போன்ற யாப்புக்களைப் பயன்படுத்திப் பாடப்பட்ட பிரபந்தவகைகளாகும்.

பல்லவர் காலத்தில் தெய்வத்தைப் பாடுபொருளாகக் கொண்ட பக்திஇலக்கியங்கள் பல தோன்றின. தேவாரத் திருமுறைகள் திருவாசகம், திருக்கோவையார், திவ்வியப்பிரபந்தப் பாசுரங்கள் போன்றன தோன்றின. அதேவேளை அரசர்களின் வீரச் செயல்களைப் போற்றும் "பொன்வண்ணத்தந்தாதி" "திருக்கைலாய ஞானஉலா" போன்றவையும் சிற்றளவில் தோன்றின.

சோழர் காலத்தில் கம்பராமாயணம் போன்ற பேரிலக்கியங்கள் மாத்திரமன்றி பெரியபுராணம், கந்தபுராணம் போன்ற புராண நூல்களும்; கலிங்கத்துப்பபரணி, தக்கயாகப்பரணி, குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் போன்ற பிரபந்தவகைகளும் இயற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றன. இக்காலத்திலேயே பிரபந்தம் எனும் சொல்லாட்சி தமிழ்இலக்கியத்தில் செல்வாக்குப்பெறத் தொடங்குகின்றது.

விஜய நகர நாயக்கர் காலத்தில் சமயச் சார்பும், தத்துவச்சார்பும், வித்துவத்திறனும் கொண்ட பல இலக்கிய வடிவங்கள் தோற்றம் பெற்றன. உலகியல் விடயங்களைப் பாடுவதற்கு முன்னர் கையாளப்பட்ட இலக்கிய வடிவங்களுக்கு சமயக்கருத்துக்களைப்புகுத்திக்காட்டுவதற்கு இக்காலப்புலவர்கள் முனைந்தனர்.[6] எனும் சி.தில்லைநாதனின் கூற்று விஜயநகர நாயக்கர் காலத்தில் பிரபந்தங்கள் பெருவாரியாக எழுந்தமை யையும் அவை சமயச்சார்புடையனவாக விளங்கியதையும் காட்டுகின்றன. இக்காலகட்டம் "பிரபந்தகாலம்" எனும் பெயருடன் விளங்குவதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இவ்வாறான பின்னணிக்கு அரசியல், சமுதாய, பண்பாட்டு சூழ்நிலைகளே காரணமாயமைந்தன எனலாம். பரணி, உலா, பிள்ளைத்தமிழ், மாலை, புராணம், மான்மியம், தூது, கோவை, அந்தாதி, பள்ளு, முதலிய பிரபந்த இலக்கியங்கள் இக்காலத்தில் பெருமளவில் எழுந்தன.

ஐரோப்பியர் காலத்தில் இஸ்லாமிய சமயநூல்களும், வைதிகசமயநூல்களைப் பின்பற்றியெழுந்தமைக்கு முகைதீன் புராணம்,நாகையந்தாதி ஆகிய பிரபந்தங்கள் உதாரணங்களாகும்.

புலவர்களதும் கவிஞர்களதும் மனதில் ஏற்பட்ட சஞ்சலம், சலிப்பு, துன்பம், முதலியன நீங்கவும், புறச்சூழலின் எதிரான தாக்கத்தினால் உந்தப்பட்ட மனஎண்ணங்கள் சமயச்சார்பு கொண்ட பிரபந்தங்கள் தோன்றக் காரணமாக அமைந்தன. இவ்வாறான காரணிகள் பிரபந்த வடிவங்கள் பல்வேறு பரிணாமத்தில் தோற்றம் பெறுவதற்கு ஏதுவாகின என்பது புலனாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள்**

தமிழில் உள்ள பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு எனக் கொள்ளப்படுகின்றது. இதனை பிரபந்ததீபிகை எனும் நூல் பின்வருமாறு கூறுகின்றது.

"பதினாறு யாறிற் பெருக்கி பிரபந்ததாதி
பலவகை எடுத்துரைக்கின்..."[7]

அதேவேளை பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு எனக் கொள்ளப்படுகின்றது. இதனை பிரபந்த மரபியல் எனும் நூல்

"பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாந்
தொண்ணூற்றாறு என்னும் தொகையதாம்"[8]
எனக் கூறுகிறது

பாட்டியல் நூல்களில் பிரபந்தங்களின் எண்ணிக்கை தொண்ணூற்றாறு எனும் வரையறை காணப்படவில்லை. வீரமாமுனிவரின் சதுரகராதி எனும் நூல் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் எவையெவை, அவற்றின் இலக்கணம் என்ன? என்பதனை முதன்முதலில் தெளிவுபடக்கூறுகின்றது.[9] படிக்காசுப் புலவரின் சிவந்தெழுந்த பல்லவராயன் உலா எனும் நூலில்,

"தொண்ணூற்றாறு கோள பிரபந்தங்கள் கொண்ட பிரான்"
(செயராமன் ந.வீ, (1967) மு.கு.நூ ப.16)

எனும் தொடர் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்பதனை தெரிவிக்கின்றது.

பாட்டியல் நூல்களில் பிரபந்தங்களின் வகைகள் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வகைகளாகவே கூறப்பட்டுள்ளன. இதனைகீழ்வருமாறு நோக்கலாம் நூல்காலம் பிரபந்த வகைகள் 1பன்னிருபாட்டியல்கி.பி.12ம் நூ.ஆ 612வெண்பாட்டியல்கி.பி.12ம் நூ. ஆ553நவநீதபாட்டியல்கி.பி.14ம் நூ.ஆ444 சிதம்பர பாட்டியல் கி.பி.16ம் நூ.ஆ635 இலக்கணவிளக்கப் பாட்டியல்கி.பி17ம் நூ.ஆ63

பல்வேறு காலகட்டங்களில் எழுந்த பாட்டியல் நூல்களில் பிரபந்த இலக்கணம் கூறப்பட்டாலும், அவற்றின் எண்ணிக்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொழுங்கு இருக்கவில்லை. பாட்டியல் நூல்கள் கூறும் இலக்கிய வகையெல்லாம் தொகுத்து நோக்கின் தொண்ணூற்றாறு வகையென்பது பொருந்துமாறில்லை

சாதகம் முதல் காப்பியம் ஈறாகப் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு எனவும், பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறு எனவும் வெவ்வேறு விதமான இலக்கிய வரையறைகள் பாட்டியல் நூல்களிடையே கருத்து வேறுபடக் கூறப்படுகின்றமையை அவதானிக்கமுடிகின்றது. இவ்வகையீட்டினுள் அடங்காத குடை, மங்கலம், தேவயாணி, மறம், யானைத்தொழில், இன்னிசைத்தொகை முதலிய பிரபந்த வகைகளுக்கும் சில பாட்டியல் நூல்கள் இலக்கணம் கூறுகின்றன.

பிரபந்தங்கள் எனும் இலக்கியவகையின் பண்புகள் தொண்ணூற்றாறு என வகையீடு செய்வது பொருத்தமற்றதாகக் காணப்படும் அதேவேளை வளர்ந்து வரும் இலக்கிய வகைகளை இம்மரபினுள்ளடக்கிப் பல்வேறுபட்ட புதிய வகைப் பிரபந்தங்கள் இன்றுவரை வளம் பெற்றுவரும் நிலையில் எல்லையிட்டுக்கூறுவது பொருத்தமற்றதாகவே அமைந்து காணப்படுகின்றது.

**முன்னேச்சரத்து வடிவாம்பிகை மீதெழுந்த பிரபந்தங்கள்– அறிமுகம்**

இலங்கையின் மேற்குக் கரையோரம் விளங்கும் புராதன சிவத்தலம் முன்னேச்சரம்ஆகும். இவ்வாலயம் முன்னேஸ்வரம், முனீசுவரம், முனீசுரம், முன்னேச்சரம், முன்னீச்சரம் என்றெல்லாம் பல்வேறு பெயர்மரபுகளில் அழைக்கப்படுகின்றன. இச் சிவத் தலத்தில் இறைவனாக விளங்குபவர். முன்னநாதர். இவரை முன்னேஸ்வரர் முன்னைநாதஸ்வாமி, முனீஸ்வரநாதர் எனப் பலவாறாக அழைப்பர். இவ்வாலயத்தின் இறைவியின் பெயர் வடிவாம்பிகை ஆவார். இவ் அம்பிகை வடிவழகி,வடிவாம்பாள், வடிவாம்பிகா, வடிவழகிஅம்மை, வடிவாம்பிகாதேவி எனப் பல பெயர் கொண்டு அழைப்பர்.

சிவனுக்கு நிகராக அழகும், வசீகரணத்தோற்றமும், கலை வனப்பும், தெவிட்டாதஅழகும், புதுமைப்பொலிவும், புன்சிரிப்பும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்ந்தகம்பீரமான தோற்றமும், வசீகரம்மிக்க பார்வையும், புன்சிரிப்பும் கொண்ட தோற்றப் பொலிவுடன் இரு கரமும் உடையவர்களாகத்திபங்கியாகத் தோற்றமளித்து விளங்கும் அம்பிகையே வடிவாம்பிகை அம்பாள் ஆவாள். இவளது தோற்றம்

"கறுத்த நிறத்தவளும் இரு கண்களையுடையவளும், இரு தோள்களும், த்ரிபங்கவளைவும், இடதுகால் நேராகவும், வலதுகை கடக ஹஸ்தமாகவும் இடதுகை வம்பஹஸ்தமாகவும் விளங்கும்தோற்றமுடையவளே"[10]

எனத்தியான சுலோகம் கூறுகின்றது. அத்தகைய தியான சுலோக அமைதியும் அதற்குமேலாகிய அழகிய வனப்பு முடையவளே வடிவாம்பிகை ஆவாள். பஞ்ச லோகவிக்கிரகமாக விளங்கும் இவளது அழகினை குல.சபாநாதன் சிதம்பரம் நடராஜ வடிவத்துக்கு நிகரானதன்மையது என வருணிக்கின்றார்.[11]

இவ்வடிவழகி அம்பாளின் சிறப்புக்குச் சிறுமியே அம்பிகை வடிவம் கொண்டாள் எனும் கதைமரபும் காணப்படுகின்றன.[12]

இத்தகைய சியப்புடைய வடிவாம்பிகை முன்னநாத சுவாமி யுடன் இணைத்து இணைபிரியாது போற்றப்படும், துதிக்கப்படும் சிறப்புடையவளாவாள் இவ்வாம்பிகை சிவனுடன் இணைந்ததாக

1. ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதசுவாமி நவதுதி[13] (உடுவில் பண்டிதர் சி.மாணிக்கதியாகராஜக்குருக்கள்)
2. ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதசுவாமி பதிகம்[14] (நாயன்மார்க்கட்டு க.சொக்கலிங்கம்(சொக்கன்)
3. சிலாபம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதசுவாமி அந்தாதிக்கீர்த்தனைகள்[15](யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணிஜயர்)

ஆகியன காணப்படுகின்றன.

வடிவாம்பிகை மீது தனியான பிரபந்தங்கள் பலவும் காணப்படுகின்றன. அவற்றை நோக்குவாம்.

1. ஸ்ரீ முன்னநாதஸ்வாமி வடிவழகி அம்மன் திருவூஞ்சல்[16] (முன்னேஸ்வரம் பிரம்மஸ்ரீ சி.பாலசுப்பிரமணியக்குருக்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. முன்னேஸ்வரம் வடிவழகியம்மை ஆசிரியவிருத்தம்[17]
(கொக்குவில் ர.சபாரத்தின முதலியார்)
3. முன்னேஸ்வரம் வடிவழகியம்மை பதிற்றந்தாதி[18]
(கொக்குவில் சி.சிலம்புநாதப்பிள்ளை)
4. முன்னேஸ்வர வடிவழகி பதிகம்[19]
(புழுதிவயல் R.S.தம்பு)
5. முன்னேஸ்வர கோபுத்திர ஸ்ரீவடிவாம்பிகாதேவி அந்தாதி[20]
(நாயன்மார்கட்டு க.சொக்கலிங்கம்(சொக்கன்)
6. முன்னேஸ்வரம் வடிவாம்பாள் கும்மி[21]
(திரு.கா.பெரியசாமிப்பிள்ளை)
7. முன்னேஸ்வரம் வடிவழகி[22]
(கி.வா.ஜெகநாதன்)
8. முன்னேஸ்வரம் வடிவாம்பிகை[23]
(கி.வா.ஜெகநாதன்)
9. முன்னைநாதர் வடிவாம்பாள் திருக்கோலக்காட்சி திருக்கோலக்காப்புவிருத்தம்[24]
(திரு.கா.பெரியசாமிப்பிள்ளை)
10. வல்ல வடிவாம்பிகா மாலை[25]
(திருமதி செல்வம் கல்யாணசுந்தரம்)
11. ஸ்ரீ வடிவாம்பிகை நவரத்தினமாலை[26]
(பிரம்மஸ்ரீ. ப.சிவானந்தசர்மா)
12. முன்னேச்சரம் ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்[27]
13. (நாயன்மார்கட்டு க.சொக்கலிங்கம்(சொக்கன்)
14. அருள்நிறை வடிவாம்பிகை திருப்பதிகம்[28]
(முன்னேஸ்வரம் லெ.நடராஜா)

ஆகிய பிரபந்தங்கள் தமிழ் மொழியில் வடிவழகி அம்மை மீது பாடப்பட்ட பிரபந்தங்களாக அறியப்படுகின்றன. இவை பதிப்பிக் கப்பட்டும் உள்ளவை குறிப்பிடத்தக்கது[29]

சம்ஸ்கிருதமொழியில் வடிவழகி அம்மை மீது சில பிரபந்தங்கள் காணப்படுகின்றன. அவற்றினை தக்ஷிணகைலாச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணத்தில் வியாசர் துதித்தாகவும், இராமர் முன்னநாதருடன் அவ் வடிவழகம்மை துதித்ததாகவும் காணப்படும் அதே வேளை கா.கைலாசநாதக்குருக்களின் வடிவாம்பிகா பஞ்சரத்தினம் குறிப்பிடத்தக்கது. ச.பத்மநாபனின் பிரபந்தங்கள் சிலவும் வி.சிவகாமியின் கீர்த்தனைகளும் காணப்படுகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

### 01. முன்னேச்சரம் வடிவழகியம்மன் திருவூஞ்சல்

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையின் மரபில் பிறந்த பிரம்மஸ்ரீ சி.பாலசுப்ரமணியக்குருக்களே இப்பிரபந்தத்தின் ஆசிரியராவார். இவ்வாலய தர்மகர்த்தாவாக விளங்கிய இவர் 1965ல் இவ் ஊஞ்சல் பாவினைப் பாடியுள்ளார்.[30] தமிழ் பிரபந்த மரபில் ஊஞ்சல்பா பெறும் முக்கியத்துவத்தில் மரபுக்கவிதையாக பன்னிருபாடல்களில் காப்புமுதல மங்களம் வரையாக இடம் பெறுகின்றது.[31]

இவ்வாறாக முன்னேச்சரத்து வடிவாம்பிகை மீது எழுந்த பதின்மூன்று பிரபந்தங்கள் காணப்படுகின்றன.

### 02. முன்னேஸ்வரம் வடிவழகியம்மை ஆசிரியவிருத்தம்

இவ்வாசிரிய விருத்தப்பாடல் கொக்குவில் ச.சபாரத்தின முதலியார் அவர்களால் முன்னேஸ்வரம் வடிவழகியம்மை மீது இயற்றப்பட்ட ஒரு பாடலாகும். ச.சபாரத்தின முதலியார்(1858-1922) கொக்குவில் சபாபதிப்பிள்ளையின் மகனாவார். த.கைலாசப் பிள்ளை என்பவரிடமும் ஆறுமுகநாவலரிடமும் பாடம் கற்றவராவார்.[32] சைவசமய மரபில் "ஈச்சுர நிச்சயம்" எனும் நூலின் ஆசிரியருமாவார்.[33]

வடிவழகியம்மை ஆசிரியவிருத்தம் எனும் இப்பாடல் வடிவழகி அம்மையின் அழகையும், அலங்காரச்சிறப்பையும் உருவ அமைதியையும் அழகுற எடுத்துக்கூறுகின்றது. இவ்வழகினைத் தேர் உற்சவகாலத்தில் கண்டு தரிசிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 03. முன்னேஸ்வரம் வடிவழகியம்மை ஆசிரியவிருத்தம்

இப்பாடல் ஒரு ஆசிரியவிருத்தப்பாடலாகும். இப்பாடலை இயற்றியவர் கொக்குவில் சி.சிலம்புநாதப்பிள்ளை என்பவராவார். இவர் யாழ்ப்பாணத்துக்கொக்குவிலைப்பிறப்பிடமாகக் கொண்டவர். சின்னத்தம்பி என்பவரது புதல்வாரன இவர் யாழ்ப்பாணத்து வண்ணை நகர் ம.அமரசிங்க உபாத்தியாரிடம் கல்விகற்றார். "ஓமையந்தாதி" எனும் நூலின் ஆசிரியரான இவர் முன்னை நாதசுவாமி மீதும் வடிவழகியம்மை மீதும் பலபாடல்களையும் பிரபந்தங்களையும் பாடியவராவார். கி.பி.19ம் நூற்றாண்டைச் சேர்ந்த இவர் மிகுந்த சைவப்பற்றும் சைவசமய நூலறிவும் புலமையுமுடையவராவார்.

வடிவழகியம்மை ஆசிரியவிருத்தம் எனும் பாடல் அம்மையின் அழகுச்சிறப்பினை அழகுற ஆசியப்பாவில் எடுத்துக்கூறுகின்றது.[34]

### 04. முன்னேஸ்வரம் வடிவழகியம்மை பதிற்றந்தாதி

கொக்குவில் சி.சிலம்புநாதபிள்ளை எனும் ஆசிரியது பாடலான "முனீச்சுரம் வடிவழகியம்மை பதிற்றந்தாதி" எனும் பாடல் அந்தாதி மரபில் பத்துப் பாடல்களை உள்ளடக்கியது.

பராபரையாக விளங்கும் வடிவழகி அம்பிகையின் சிறப்புக் களை எடுத்துரைக்கும் அதேவேளை முனீச்சரத்தில் வடிவழகி அம்மையுறையும் சிறப்பினை

"மலராசனுந் திருமாலுந் தேவரு மாதவரும்
பலகாலுந் தேடியுங் காணாதேழித்த பராபரையே
தலமீது முனீசுரத்தில் பயர் தமது விழிப்
புலனாற்றெரிந்து தொடி நிற்றருள் செய் புராதனியே"[35]

(பாடல்.4)

எனும் பாடலின் மூலம் கேன உபநிடதத்தில்[36] சுட்டப்படும் செய்தியினைப் பிரதிபலித்துக்காட்டும் சிறப்புடன் அம்பிகையை வருணிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. முனீஸ்வர வடிவழகி பதிகம்

வேலணை சரவணை புழுதிவயலை சேர்ந்த தம்பு உபாத்தியார் (1863-1943) என்பவர் முனீஸ்வர வடிவழகி பதிகம் பாடியுள்ளார். புழுதிவயல் ஆர்.எஸ்.எஸ்.தம்பு எனும் இவ்வாசிரியர் வேலணை கந்தப்பிள்ளையிடம் கல்வி கற்றவராவார் புராணபடனம் செய்யுமிவர் வேறுபட பிரபந்தங்களையும் பாடியுள்ளார்.[37]

விநாயகர் வணக்கத்தினை வெண்பாவினும் பத்து பதிகத் தினையும் விருத்தப்பாவினுள் வடிவழகியின் சிறப்புக்களையும் மேன்மைகளையும் அடியவர்க்கு அருளும் திறனையும் போற்றித்துதிக்கின்றார்.[38]

பஞ்சு புலன் வழி மனமே செல்ல விட்டுப்
பாரினுள் பொருளி லெலாம் பற்று வைத்துக்
கொஞ்சமுமே மனச் சாந்தி கூடா னாகிக்
குவலத்தை விட்டொழிக்குங் கொள்கை யோனை
யஞ்ச லெனத் திருக்கரத்தா லணைந்து மாறா
அவல மெலாஞ் சிதைஞ் தொழிய வருளைக்காட்டு
மஞ்சு தமிழ் முனீஸ்வரத்தின் மருந்தே சீவ
மாமணி யுனை மறக்க மாட்டே னானே.[39]

(பாடல் 7) எனும் பாடல் சிறப்புற எடுத்துக்கூறுகின்றது.

## 06. ஸ்ரீ முன்னேஸ்வர கோடித்ர ஸ்ரீ வடிவாம்பிகாதேவி அந்தாதி

இவ்வந்தாதியினைப் பாடியவர் யாழ்ப்பாணத்து நாயன்மார் கட்டைச் சேர்ந்த திரு. க.சொக்கலிங்கம் எனும் பெயரையும் "சொக்கன்" எனும் புனைபெயருடையவர். வடிவழகியம்மை மீது மிகுந்த பக்தி கொண்டவர், பிள்ளைத்தமிழ் பிரபந்தத்தையும் பாடி மகிழ்ந்தவர்.

இவ் அந்தாதி விநாயருக்கான காப்புச்செய்யுளைத் தொடர்ந்து ஐம்பது பாடல்களில் துதிக்கின்றார்.

வடிவழகியம்மையின் பல்வேறு வடிவங்களையும் கண்டுதரிசிக்கும் சிறப்பும் மொழியழகும் கருத்தாளமும் சிறப்புடையன.[40]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவழகியம்மையின் திருவடிச்சிறப்பினைப் போற்றுகையில்:

எழிற்கொடி எம்முளத் தேபடர் வஞ்சி இளங்கொடியே!
அழற்பட முப்புரஞ்செற்றவன் பாகந்தணை கொடியே!
கழற்படு போரொளிக் கீடுசெய் நூபுரக் காற்கொடியே!
விழற்படு வாழ்வை விலக்கிட வேயருள்மேலவளே.[41]
(பாடல்3)

என்றும் வடிவழகியின் தோற்றத்திற்குரிய கர்ணபரம்பரைக் கதையினையுணர்த்தும் வகையில் மீனவர் கையிலகப்பட்ட சிறுமி எனும் செய்தியினை பின்வரும் பாடலில் போற்றுகின்றார்.

பசுங்கொடி பாலகி யாகினை மீனவன் பாங்கிலுற்று
நிசம் பெறு வார்க்கருள் நிடிய மன்னவன் நெஞ்சியுலுற்று
தசும்புறு நற்றன பாரத்தினாற்றளர் வாய்தனாரார்
விசும்புளர் மண்ணுளர் ஏத்திட முன்னை விளக்கெழியே.[42]
(பாடல் 27)

இவ்வாறாக பல்வேறு சிறப்புக்களையும் மேன்மைகளையு முள்ளடக்கி வடிவழகியம்மைக்கு சிறப்புற நடைபெற்ற வசந்த நவராத்திரி காலத்தில் சண்டீஹோமம் நடைபெறும் சிறப்பும் மேன்மையும் இவ்வந்தாதியில் பிரதிபலித்துக்காட்டுவதாக அமை கின்றது.

### 07. முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பாள் கும்மி

இலங்கையின் மலையகத்தைச்சேர்ந்த ஹிக்கொட உந்து கொடவைச் சேர்ந்தவரே கா.பெரியசாமிப்பிள்ளை என்பவராவார். இவர் மரபுப்பாடலான கும்மியினை வடிவழகியம்மை மீது பாடி யுள்ளார்.

இக்கும்மிப்பாடல் பாரம்பரிய கும்மி மரபினைப் பிரதிபலிப்பதா கவும் வடிவழகியின் மஹோத்சவகாலச் சிறப்பில் அறுபத்து மூன்று (63) கும்மிப்பாடல்கள் காணப்படுகின்றன.[43]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி மாதத்து மஹோற்சவ காலத்தில் சுவாமி உலாவரும் சிறப்புக்களையும், சமகாலத்தில் நிகழும் நிகழ்வுகளினையும் படம்பிடித்துக்காட்டும் தன்மையில் இக்கும்மி விளங்குகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

**08. முன்னேஸ்வரம் வடிவழகி**

தென்னிந்தியாவைச் சேர்ந்த பிரபல பேச்சாளரும், புலமையாளரும், தமிழறிஞரும்,"கலைமகள்" ஆசிரியருமாகிய வாசீசகலாநிதி கி.வா.ஜகநாதன் என்பவர் வடிவழகி அம்பிகை யைத் துதித்து பல்வேறு தனிப்பாடல்களைப் பாடியுள்ளார்.[44]

பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள் அவர்களுடனான உறவுகளில் கடிதங்களில் இடம்பெற்ற இப்பாடல்கள் கண்களினுள் கொள்ளை கொண்ட அழகினை வருணிக்கும் சிறப்பு தனித்து வமானதாகும்.

கண்படைத்த பயனென்னே எனக் கேட்பின்
யான் சொல்வேன் கருகிக் கேண்மின்
கண்படைத்த பொழிலிலங்கைத் தீபகத்தில்
முன்னேசுரம் தன்னிற் சென்று
விண்படைத்த இந்திரனும் தொழுகின்ற
திருக்கோயில் விரைந்து சென்று
பண்படைத்த புகழ் சான்ற வடிவழகு
திருமேனி பார்த்துய் வீரே![45]

எனப் பாடல்கள் பெற்ற பயன் என்பதைக் கூறுகின்றது. இதேபோல் அம்பிகையின் அழகினைப் பின்வருமாறு போற்று கின்றார்.

அடியின் அழகும் இடையழகும்அருளே பாலாச் சுரந்த முலைப்
படியும் அழகும் கையழகும்
பதும மனைய முகத்தழகும்
நெடிய விழியின் திருவழகும்
நிலவும் முடியின் பேரழகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவன்னை தன் பாற் கண்டார்
மற்றும் பிறவிப் பிணியடையார்.[46]

எனப் போற்றுகின்றார்.

**09. முன்னேஸ்வரம் வடிவாம்பிகை**

வடிவழகியம்மையின் சிறப்பினைக் கூறும் ஒரு பாடல் காணப்படுகின்றது. இப்பாடலைப் பாடிய புலவரின் பெயர் அறியப்படவில்லை.[47]

**10. முன்னைநாதர் வடிவாம்பாள் திருக்கோலக்காட்சி**

மலையகத்தின் ஹிக்கொட, உந்துகொடவைச் சேர்ந்த கா.பெரியசாமிப்பிள்ளையே இப்பாடல்களில் ஆசிரியராவார். கிராமியப்பாடல் மரபில் ஆசிரியவிருத்தமாக 27 பாடல்களை இவ்வாசிரியர் பாடியுள்ளார்.[48]

முன்னேஸ்வர மான்மியத்தில் கூறப்படும் சிறப்புக்களையும், மேன்மைகளையும் இப்பாடல்கள் பிரதிபலித்துக் காட்டுகின்றன.

**11. வல்ல வடிவாம்பிகை மாலை**

இப் பிரபந்தத்தின் ஆசிரியர் திருமதி செல்வம் கல்யாண சுந்தரம் 1994ல் எழுதி வெளியிட்ட சிறப்புடைய இலக்கிய வடிவமாகும்.[49]

காப்புச் செய்யுளைத்தொடர்ந்து விநாயகர் துதியும் நூறு பாடல்களையும் உள்ளடக்கியதாக இப்பிரபந்தம் காணப்படுகின்றது.[50]

வடிவாம்பிகே! என விழித்து அனைத்து பாடல்களின் முன்னேஸ்வரத்து மேன்மைகளையும் வரலாற்றுச் சிறப்புக் களையும், வடிவழகியம்மையின் திருவருட்சிறப்பினைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**12. ஸ்ரீ வடிவாம்பிகை நவரத்தின மாலை**

யாழ்ப்பாணத்து கோப்பாயைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) அவர்களால் இயற்றப்பட்ட பிரபந்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனந்தபைரவி" எனும் புனைபெயருடன் ராகமாலிகையில் பாடத்தக்க ஒன்பது வெண்பாக்களைக் கொண்டதாக அமைந்து காணப்படுகின்றது.

எழுபதுகளில் சிறப்புறநடைபெற்ற வசந்த நவராத்திரிக் காலங்களின் சண்டிஹோமத்தின் மேன்மைகளையும் சிறப்புக்க ளையும் போற்றுவனவாக அமைந்துள்ளன.[51]

சப்தசதீ பாடும் சதுர்வேதம் தாம் முழங்கும்
செப்புமருட் கக்தங்கள் தினமோதும்-ஒப்பரிய
பஞ்சதச அக்ஷரங்கள் பண்பாய் ஒலித்தெங்கும்
விஞ்சுபதி முன்னேஸ்வரம்.[52]

எனப் போற்றி வடிவழகியம்பிகையின் திருநோக்கினைப் பின்வருமாறு போற்றுகின்றார்.

முன்னைப் பழவினைகள் மூண்டெரிய நற்கருணை
என்றும் நெருப்பனைய ஏந்திழையே – முன்னை
வடிவாம் பிகை என்னும் வாருலக நாயகியே
முடியாதுன் மானோக்கருள்.[53]

எனும் பாடல்மூலம் மானோக்குடைய திருநோக்கினை விழிதின் கூறுவது குறிப்பிடத்தக்கது.

## 13. முன்னேச்சரம் ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்

நாயன்மார்கட்டு திரு.சொக்கலிங்கம் எனும் சொக்கன் அவர்களால் 1999, 2000 ஆண்டுகளில் எழுதப்பட்ட பிரபந்த வடிவமே இப்பிரபந்தமாகும்.[54,55,56]

## 14. அருள் நிறை வடிவாம்பிகை திருப்பதிகம்

முன்னேஸ்வரத்தைச் சேர்ந்த திருவாளர் லெ.நடராஜா என்பவரால் 2011ல் பாடப்பட்ட பிரபந்தமே இப்பிரபந்தமாகும். வயல் பிள்ளையார்காப்பு, கலைமகள்காப்பு எனும் இருகாப்புக் களுடன் பத்துப் பாடல்களை உள்ளடக்கியது இந்நூலாகும்.

புதுக்கவிதை மரபில் பழமையான மரபுடன் அமைந்து அம்பிகையின் திருவருட்சிறப்புக்களையும் சிறப்பாக சாரதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரி காலங்களில் கொலு வீற்றிருக்கும் வடிவாம்பிகையின் தோற்றப் பொலிவுகளையும் பிரதிபலித்துக் காட்டுவதாக அமைந்து காணப்படுகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. சுப்பிரமணியன்,ச.வோர, (1980) பிரபந்த தீபம், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, ப.V
2. செயராமன், நா.,(1988) "சிற்றிலக்கியங்களின் தோற்றம்" அரங்கேறிய ஆய்வுகள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, ப.138
3. தண்டியலங்காரம். (1926) மூலமும் உரையும், அ.குமாரசுவாமிப்புலவர், சுன்னாகம், பொதுவியல், 13 ப. 1
4. சண்முகப்பிள்ளை, மு., (1977) "சிறு பிரபந்தங்கள்" இலக்கியக்கொள்கை, உலகத்தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.68
5. செயராமன், நா., (1988) மு.கு.நூ.ப.136.
6. தில்லைநாதன், சி., (1979) "தமிழ் இலக்கிய வடிவங்கள்" இளங்கதிர், தமிழச்சங்கம்,பேராதனை ப.23.
7. செயராமன், ந.வீ., (1967) 'சிற்றிலக்கியச் செல்வங்கள்' மணிவாசகர் நூலகம், சிதம்பரம் ப.16
8. மேலது. ப.16
9. சுப்பிபரமணியன், ச.வே., (1980) மு.கு.நு. ப.VII
10. முன்னேஸ்வரம் நவராத்திரி பூஜாபத்தி (கையெழுத்துப்பிரதி) ப.47
11. சபாநாதன், கல., பத்மநாபன், ச., (பதி.), ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம்,ப.
12. வயித்திலிங்கம், அ.(2012) முனீசுரவந்தாதி, ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம் சிலாபம் (மறுபதிப்பு), பக். X–Xii
13. பத்மநாபன், ச., (2018) முன்னேச்சரம் ஸ்ரீ வடிவாம்பிகை மீதும் ஸ்ரீ முன்னைநாதர் மீதும் பாடப்பட்ட தமிழ்ப்பிரபந்தங்கள் (தொகுப்பு).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்.149 - 152

14. மேலது பக். 177 – 182
15. மேலது பக். 188 – 193
16. மேலது பக். 75 – 78
17. மேலது பக். 248
18. மேலது பக்.249 – 250
19. மேலது பக்.251 – 253
20. மேலது பக். 254 – 261
21. மேலது பக். 262 – 265
22. மேலது பக். 266 – 267
23. மேலது பக். 268
24. மேலது பக்.269 – 273
25. மேலது பக். 279 – 291
26. மேலது பக். 274, 275
27. மேலது பக். 279 – 291
28. மேலது பக். 02 – 07
29. ஸ்ரீ முன்னைநாதசுவாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல் (1965)

    ஸ்ரீ முன்னேச்சரம் தேவஸ்தானம், சிலாபம் 1.1.1965., பக். 1 – 8.
30. மேலது பக். 5 – 8
31. சதாசிவம், ஆ., (1966) ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம், யாழ்ப்பாணம் ப.529
32. மேலது பக். 307, 308
33. மேலது பக். 529
34.
35. பத்மநாபன், (தொ.ஆ) (2018) மு.கு.நூ.ப.42.
36. கேனஉ_பநிடதம்
37. சதாசிவம், ஆ., (1966) மு.கு.நூ., ப.406
38. பத்மநாபன், ச., (2018) மு.கு.நூ. பக. 251 – 253



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. மேலது, பக். 252
40. மேலது பக். 254 – 261
41. மேலது பக். 254
42. மேலது, பக். 258
43. மேலது, பக். 262 – 265
44. மேலது, பக். 266, 267
45. மேலது, பக். 267
46. மேலது, பக். 266
47. மேலது, பக். 268
48. மேலது, பக். 269 – 273
49. செல்வம் கல்யாண சுந்தரம், (1994),வல்லவடிவாம்பிகா மாலை திருமூலர் சங்கம், கொழும்பு
50. பத்மநாபன்,ச., (2018) மு.கு.நூ பக் 279 – 291
51. மேலது, பக். 274, 275
52. மேலது பக். 274
53. மேலது பக். 274
54. சொக்கன் (1999) முன்னீச்சரத்து
ஸ்ரீவடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்
ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம். 1999.01.31
55. சொக்கன் (2012) முன்னீச்சரத்து
ஸ்ரீடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்
ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம் 23.05.2012
56. பத்மநாபன்,ச, (தொ.ஆ) (2018)
முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகை மீதும் ஸ்ரீ முன்னைநாதர் மீதும் பாடப்பட்ட தமிழ்ப்பிரபந்தங்கள் ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம். பக். 194 – 247
57. மேலது,பக், 276 – 278.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னீச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்

### அறிமுகம்

இலங்கையின் புராதன சிவத்தலங்களுள் ஒன்று முன்னீச்சரம் ஆகும். அங்கு முன்னைநாதர் எனும் பெயர் கொண்ட சிவனுக்கு சக்தியாக விளங்கும் இறைவியே வடிவாம்பிகை ஆவாள். முன்னீச்சரம் எனும் தலத்தில் இறைவனின் பெருமையும் சிறப்பும் எவ்வளவு பிரசித்தமோ அவ்வளவு சிறப்பும் பெருமையும் இறைவி யாகிய வடிவாம்பிகைக்கும் உண்டு.

முன்னீச்சரம் எனும் சிவத்தலம் சக்தி பீடங்களுள் ஒன்றாகவும், சனத்குமாரா, சம்ஹிதையில் அலகேஸ்வரம் எனப் பெயர்பெற்றதுமாகும்.[1] ஸ்ரீமத்தக்ஷிணகைலாசமஹாத்மியத்தின் 15ம், 16ம் அத்தியாயங்களில் கூட வடிவாம்பிகை அம்பாள் வியாசராலும், இராமபிரானாலும் துதிக்கப்படுகின்றமை இவ் வாலயம் சிவாலயம் என்பதற்கு நிகராக சக்தியையும் போற்றும் சிறப்புடையது என்பது புலனாகின்றது.[2]

முன்னேச்சரத்து வடிவாம்பிகை மீது எழுந்த தமிழ்மொழிப் பிரபந்தமே வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் எனும் பைந்தமிழ்ப் பாமாலையாகும். இப்பிரபந்தத்தின் ஆசிரியர் யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு திருவாளர் க.சொக்கலிங்கம் என்றும் சொக்கன் எனப் புனைப்பெயர் கொண்ட புலமையாளர் ஆவார்.[3]

முன்னேஸ்வரத்து ஆலயமரபின்படியும், இலக்கிய மரபின் படியும், தத்துவமரபின்படியும், சிவனையும், சக்தியையும் பிரிக்க முடியாத தன்மையது என்பதற்கு இவ்வாலய அமைப்பும், சிறப்பும் காரணமாகஅமைகின்றன. சிற்சக்தியாகிய பராசக்தியை குழந்தையாகப் பாவனை செய்து பாடும் மரபில் தமது எண்ணங் களையும், சிறப்புக்களையும், மேன்மைகளையும் உள்ளடக்கி வடிவாம்பிகை மீது பக்தியை மேன்மையடையச் செய்யும் ஓர் தத்துவநூலாகவும் இப்பிள்ளைத்தமிழை ஆசிரியர் ஆக்கியிருப்பது தனிப்பெரும்சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூலின் அமைப்பு**

பிள்ளைத்தமிழ் மரபில் அமையப்பெற்ற இப்பிள்ளைத்தமிழ் குலதெய்வ வணக்கம்,[4] விநாயகவணக்கம்,[5] அவையடக்கம்[6] எனும் நான்கு பாடல்களை முன்னணியாகக்கொண்டமைந்து விளங்கு கின்றது.

காப்புப்பருவம்,[7] செய்கீரைப்பருவம்,[8] தாலப்பருவம்,[9] சப்பாணிப பருவம்,[10] முத்தப்பருவம்,[11] வாராணைப்பருவம்,[12] அம்புலிப்பருவம்,[13] அம்மாணைப்பருவம்,[14] நீராட்டற்பருவம்,[15] ஊஞ்சற்பருவம்[16] எனும் பத்தப் பருவங்களையும் ஒவ்வொரு பருவத்திலும் பத்துப்பாடல்கள் உள்ளடங்கலாக நூறுபாடல்களையும் கொண்டதாக அமைந்து காணப்படகின்றது.

**நூலின் சிறப்பும், தனித்துவமும்**

ஜகன் மாதாவாகிய அன்னைபராசக்தி உலகனைத்தையும் ஈன்றவள் என்ற பெருமையுடையவள். இவ்வன்னை மலையரசன் மகளாகப் பிறந்ததன் இயல்பைக்கொண்டு ஓர் குழந்தையாகவே போற்றும் மரபு இப்பிள்ளைத்தமிழின் தனிப்பெரும்சிறப்பாகும்.

ஸ்ரீலலிதாஸஹஸ்ரநாமம் அம்பிகையை 'வயதுக்குட்படாதவள்' (வயோவஸ்தா விவர்ஜிதா) என்றும்,'பாவனையால் அடையத் தக்கவள்'(பாவனாகம்யா) என்றும்[17] சியப்புடம் நோக்கும் அதே வேளை வியாசர் வடிவாம்பிகையைத்துதிக்கும் தனமையில் போற்றுகின்ற 'குமாரஜனனி'[18] எனும் பெயர்மரபில், நூலாசிரியர் முருகபக்தனாகவிளங்க, அம் முருகனையீன்றதாயாக வடிவாம் பிகையை பாவனை செய்யும் மரபும் பக்தியின்பால் புராண மரபுகளையும் முன்னேஸ்வரத்து ஐதீகங்களையும் கூறும் தன்மை யதாக அமைகின்றது.

பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்தின் கருப்பொருளாகிய வடிவாம்பி கையை 'முன்னையவள்'[19] என அனைவருக்கும் மூத்தவள் என்றும், முன்னேஸ்வரத்திற்குரியவள் என்றும், முன்னைநாதரின் நாயகி என்றும் போற்றும் மரபு சிறப்பத்தன்மையதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவாம்பிகை அம்பாளின் குழந்தைப்பருவப்பாவனையில் இரண்டு மாதங்கள் முதல் இருபத்தொரு மாதங்கள் வரையான ஓர் குழந்தையின்வளர்ச்சி மற்றும் நடத்தைமாற்றங்களை தமிழ் மொழியின் கவிதையழகில் படைத்துள்ளமை பிரபந்தத்தின் தனித்துவமாகவும் அமைந்து விளங்குவதனைக் காணமுடிகின்றது.

**வடிவாம்பிகை பிள்ளைத்தமிழின் உள்ளடக்கம்**

**குலதெய்வ வணக்கம்**

நூலாசிரியர் திரு சொக்கன் அவர்கள் யாழ்ப்பாணத்த நல்லூரில் உறைகின்ற கந்தக்கடவுளின் இடையறாத பக்தன். வேற்படையையே முருகனாகக் கொண்டு கஜவல்லி, மகாவல்லி எனும் சிலம்புகள் அணிந்திருக்கும் மெல்லிடையாளர் இருவ ருடனும் வணங்கி, இந்நூல் இடையறாது நிறைவடைவதற்கு அருள் புரிய வேண்டும் எனப் போற்றுகின்றார்.[20]

இடையூறு இன்றி விநாயகரை வணங்கும் மரபிற்கு முன்னதாக குலதெய்வ வணக்கம் நூலாசிரியரின் பக்தியின் உயர்வைக் காட்டுவதாக அமைகின்றது.

**விநாயகர் வணக்கம்**

நூலாசிரியர் விநாயகரிடம் இந் நூல் எழுதுவதற்க அனுமதி அருளுவீர் என்னும் சம்மதத்தினைக் கேட்கிறார். அதன் படி விநாயகரின் பிரபாவங்களாக ஓம் என்னம் பிரணவ வடிவினன் என்றும் உலகின் ஒரே தலைவன் என்றும், அடியார்களது இடை யூறுகளை நீக்குபவன் என்றும், அடியாரடகளின் இதயத் தாமரையில் அமர்பவர் என்றும், எமது 'நாம்' எனும் அகங்காரத்தை நீக்குபவர் என்றும், ஞானத்தை அருள்பவர் என்றும், போகின்ற வழிகலெல்லாம் கலங்கரைவிளக்காக விளங்குபவன் என்றும், ஆனைமுகமடையவன் என்றும், சித்தி புத்தி எனும் இரு சக்தியரின் நாயகர் எனவும் போற்றிடும் விநாயகர் தாம் வடிவாம்பிகை மீது எழுத இருக்கும் கவிதை இலக்கியமாகிய பிள்ளைத்தமிழிற்கு ஆதரவு தெரிவித்து ஆமோதிக்குமாறு வேண்டுகின்றார்.[21]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்என இசைந்தெனக் காதரம் ஆகிடுன்
அன்னைமுன் னீச்சுரத்தான்
அகிலாண்ட நாயகிக் கன்புடன் அளித்திடும்
அருந்தமிழ்க் கவிதழையவே.[22]

எனும் பாடல் வரி சுட்டுகிறது.

**அவையடக்கம்**

அவையடக்கத்தில் அவைக்கு அடக்கத்தினையும் அவையை அடக்கும் திறனும் இப்பாடல்களில் இடம்பெறுகின்றன.

அவையடக்க முதற்பாடலில் உலகினை அனுக்கிரகிக்கும் அன்னையே உன்னை பண்டைய நற்கவிகள் பலரும் பாடியுள்ள னர். நாயாகஇவ்வுலகில் வாழும் நான் ஒரு சிறு பாமாலை சூடுகின்றேன் சூரியனுக்க முன் செல்லும் மின்மினி போன்ற மமதையல்லவா எனக்க உண்டு எனபதனை

உண்டுறங்கி உலகிலே உலலும் நயேன்
ஒரு சிறிய தமிழ்மாலை புனைந்த சூட்டல்
மண்டுமொளிக் கதிரவனுக்கிணை நான் என்று
மமதை கொள்ளும் மின்மினியின் மடைமை அன்றோ.[23]

எனக் கூறுகின்றர்.

அவையை அடக்கம் திறனில் அம்பிகையின் அடியவனாக தாயைப் பணியும் தனயனாக தன்பணிவினைக்கூறி தாயன் பின்பெருமையுடன் போற்றும் பக்தியினால் துதிக்கின்ற சிறப்பு தனித்துவமானது.

பாயருளை வெள்ளமென வழங்கும் அன்னை
பராசக்தி கடைக்களிப்பாள் என்று நம்பிச்
சே(ய்)யானும் என்பிள்ளைப்பாட்டைச் சாத்திச்
சேம்மலர்நோன் றாணினையைப் பணிவேன்
"பொளியிடு என் முன்வையேல்" என்னாளாயின்
புலவர்களும் புறந்தள்ளார் போற்றுவாரே.[24]

எனத் துதித்து தாயாகிய உனக்குச் சூட்டும் பிள்ளைத் தமிழ்ப் பாமாலையை உனது திருவடிக்கே சமர்ப்பணம் செய்கிறேன். நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை போ, எனக் கூறாது ஏற்பாய்! நீ என்னைப் புறந்தள்ளாதே! அவ்வாறு புறந்தள்ளுவாயேயானால் ஏனைய புலவர்கள் என்னை இகழ்வார்களன்றோ! ஏனப் போற்றித்துதித்தல் நயம்மிக்க கருத்தாளமுடையதாகின்றது.

**காப்புப்பருவம்**

காப்புப்பருவத்தில் சிவபெருமான், திருமால், முருகன், பைரவக் கடவுள், விரபத்திரர், அரிகபுத்திரர், மாகாளி, கலைமகள், திருமகள், தமிழ்த்தாய் ஆகிய பத்துத் தெய்வங்களை காக்கவேண்டும் எனப் போற்றி வினாவுகின்ற ஆசிரியர் ஒவ்வொரு பாடலிலும் போற்றும் தெய்வத்தின் சிறப்பும் வடிவழகியின் எல்லையற்ற சிறப்பினையும் போற்றிமகிழும் திறன் சுவைமிக்கது.

சிவபெருமானின் இயல்பில் சுடலையில் ஆடும் இயல்பு,கிழிந்த ஆடை அணியும் பாங்கு, சமயக்குரவர் நால்வர் துதிக்கும் மாண்பு, சாவிலிருந்து உயிர்விக்கும் சக்தியின் இயல்பு எனப் போற்றி சிலாபநன்நகரத்து முன்னையம்பதியினைச் சார்ந்த வடிவழகியைப் பாடும் பாமாலையைக் காக்க எனப் போற்றுவது சிறப்புடையது.

திருமால் காப்பில் கிருஷ்ணனது லீலைகளைக்கூறி வடிவழகியின் சொல்லணாச்சிறப்பை பின்வருமாறு கூறுகின்றார்

கட்டிப் பாகும் முக்கனியும்
காணாச் சுவையின் சொல்லழகி
கவினார் பொழில்சூழ் முன்னைவளர்
கனியை......[25]

எனச் சுட்டுகின்றார். முருகன் காப்பில் பிரமனது அகந்தையடக்கிய சவாமிநாதன் பெருமையைக்கூறி வடிவழகி அம்பகையின் விழியழகை

மோதுவேல் விழிகொண்டாடுங் கூத்தனைத்தன்
மோக வாகிரியில் வீழ்த்திய
முன்னைவாழழகி தன்னை அன்புமிக்க......[26]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறும்சிறப்பும், வைரவக் கடவுள் வாழ்த்தில் பிரம்மசிரச்சேத மூர்த்தியாக பிரம்மாவின் ஐந்தாவது சிரசைக்கொய்த வைரவக்கடவுளின் கதையைக்கூறி 'சங்குவளையாள்' எனப் போற்றுகின்றார்.[27] வீரபத்திரக்கடவுள் காப்பில் வீரபத்திரக் கடவுளின் தோற்றம், தக்கனத யாகம் அழித்த சிறப்பினைக் கூறும் அதேவேளை 'முன்னையாள்' எனவும்,[28] அரிகபுத்திரன் காப்பில் மோகினிவடிவம் கொண்ட விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் பிறந்த அரிகபுத்திரனது கதையைக் கூறி 'முன்னையாள்' என விழிக்கின்றார்.[29] மாகாளிகாப்பில் கோரப்பற்களுடன் கொடிய கரு வடிவம் கொண்ட காளியின் உருவத்தைப் போற்றி வடிவாம் பிகையை பின்வருமாறு வளிக்கின்றார்.

பதம்பஞ் சினாற் செய்து பவளத்தை இதழாக்கிப்
பால் வண்ணப் பற்களோடே
பழம்பெரும் முன்னையின் கழையுறழ் தோளி[30]

என பவளச்செவ்வாயும், பால்வண்ணப் பற்களின் சிறப்பும் வியந்து போற்றும் இயல்புடையதாகின்றது. கலைமகள் காப்பில், சொல்லழகுமிக்க கவிவாணர்களாகிய கம்பன்,காளிதாசன், குமரகுருபரன் போன்றவர்களுக்கு நாவில் அமர்ந்து வீணைதரித்த அன்னையே அறுபத்து நான்கு கலைகளின் அரசியே எனப் போற்றி 'பாலாம்பிகையாக' வந்து எழுந்தருளியிருக்கும் மகாதேவியான வடிவழகி எனப்போற்றுகின்றார்.[31] திருமகள் காப்பில் திருமாலின் மார்பில் உறையும் சிறப்பைக்கூறி ஓர் செய்தியையும் விடுக்கின்றார்.

கருவா தனைக்கெதிராய் அறமாதி செய்வரெனின்
கனகாலம் இன்பினிலே திளைப்பார்கள்........[32]

என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. அதேபோல் பாற்கடலைக் கடைந்து அதில்வந்த விடமுண்டசிவனின் மணாள'கனியான முன்னைவளர் எழிலாள்'[33] என்கிறார். தமிழ்த்தாய் காப்பில் ஆரியமும் தமிழும் ஒன்றுபட இமையுடன்இருக்கும் தமிழின் சிறப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பந்தமறுத் தின்மளித் தெங்களினைக் காக்கும்
பராசக்தி....'[34]

யேன வடிவாம்பிகையைப் போற்றுகின்றார்.

இவ்வாறாக காப்புப்பருவம் வடிவழகியின் பல்வேறுவிதமான பிரபாவங்கள் முன்வைக்கப்படும் தன்மையினைக் காண முடிகின்றது.

**செங்கீரைப் பருவம்**

செங்கீரைப்பருவம் என்பது குழந்தை கீர் கீர் என சத்தமிட்டு அழைக்கும் பருவமாகும். இப்பருவம் சார்ந்த இயல்புகளை ஆசிரியர் 11-20 வரையான பாடல்களில் குறிப்பிடுகின்றார்.

ஆயுமறி வானந்தரூபிணி முன்னையாய்
செங்கீரை ஆடியருளே
அமுதவாய் மலர்த்திநீ கிர்கிரெ றொலிசெய்து
செங்கீரை ஆடியருளே.[35]

என்று வேண்டும் அதேவேளை அபிஷேகச் சிறப்பு,[36] வேதங்கள் துதிக்கும் சிறப்பு,[37] பாடலில் நெறிமுறை தவறாத அந்தணரின் பூசைமரபு[38] ஸ்ரீசக்கரத்தின் இயல்பு,[39] காலங்கடந்தவள் எனும் தன்மையில் ஆறுபருவங்களின் தன்மைகள்[40] உவமை கடந்த வடிவழகீ![41] என்றும் விதந்து கூறும் சிறப்பும் இப்பருவகாலச சிறப்புக்களாக அமைகின்றன.

**தாலப்பருவம்**

தாலப்பருவம் குழந்தையைத் தொட்டிலில் இட்டு தாலாட்டும் பருவமா இப்பருவம் சார்ந்த விடயங்களை ஆசிரியர் 21-30 களில் கூறுகின்றார்.

முன்னேஸ்வர மான்மியம் கூறுகின்ற இராமபிரானது பிரம்மகக்திதோஷம் நீங்கிய சிறப்பு[42] வியாசர் காசியில் உயர்த் தியகை முன்னேச்சரத்தில் சாபம் நீங்கியது.[43] குளக்கோட்டன் திருப்பணி[44] பராக்கிரமபாகுமன்னனின் திருப்பணி[45] பற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியிருக்கும் அதேவேளை வடிவழகியம்மையின் தோற்றுவாய் பற்றிய கதைமரபு,[46] குமாரசுவாமிக்குருக்கள் பூசித்த சிறப்பு[47] வடிவழகி அம்மனின் அழகுச்சிறப்பு,[48] சிவனும் சக்தியும் ஒன்றாய் உறைகின்ற சிறப்பு,[49] மாயவனாற்றின் சிறப்பு,[50] மாலுக்கு சக்கரம் அளித்தல், முப்புரம் எரித்தல் எனும் கதைமரபுகளுடன் கூடிய சிறப்பு[51] வடிவழகியம்மனின் சிறப்பை எடுத்துரைக்கும் சிறப்பு தாலப்பருவத்தே சிறந்து விளங்கக் காணமுடிகின்றது. வடிவாம்பி கையின் அழகை வருணிக்கையில்,

காரிற் கறுத்த கருங்குழலும்
    கணைவான் நாணும் இருவிழியும்
கவினார் கூனற் பிறைநுதலும்
    காற்றுக் கொடியும் மெல்லிடையும்
தேரின் எட்பூ நாசியதும்
    திகழும் தாமரை மலர்முகமும்
திருவார் கொவ்வைக் கனிவாயும்
    சீரார் பஞ்சுச் சீரடியும்
பாரில் வந்து முடிசாய்துப்
    பணியும் வானோர் முடியழுந்தப்
படைத்தே ஒல்கும் அனநடையும்
    பார்க்கப் பார்க்கத் தெவிட்டாவாம்
ஏரார் முன்னைப் பதியுறையும்
    எழிலே! தாலோ தாலேலோ
என்பை உருக்கி எமையாளும்
    இன்பே! தாலோ தாலேலோ.[52]

எனும் பாடற்சிறப்பு தனித்தவமானது. சிற்பக்கலைமரபின் லக்ஷணங்கள் ஒன்றுபொலிய அழகுக்கு அழகாய் காட்சிதரும் வடிவழகியம்மனின் அழகுக்காட்சியை வண்ணமுறவர்ணிக்கும் சிறப்பு தனித்துவமாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சப்பாணிப்பருவம்**

குழந்தையை நிமிர்ந்து சப்பாணிகொட்டி உட்காரவைக்கும் பருவமே சப்பாணிப்பருவமென பிள்ளைத்தமிழ் பிரபந்தத்தில் இடம் பெற்றுவருகின்றது. இதில் 31-40 வரையான பாடல்கள் அமைந்த காணப்படுகின்றன.

புழைய பதியாகிய முன்னேஸ்வரத்தில் குழந்தையாக வந்து சப்பாணிகொட்டியருளும் வண்ணம் வேண்டும் பாடல்மரபுகள் தனித்துவமானவை. பல்வேறு கலைமரபுகளைக்கூறும் ஆசிரியர் பிரதோஷஸ்தேற்சரத்தில் சிவசக்தியின் நடனமாடும் சிறப்பை முன்னேச்சரத்து மண்டபத்தில் நிகழும் காட்சியாக வருணனை செய்யும் திறன் தனித்துவமானதாகும்.[53] ஆவணி மகோற்சவத்தின் சிறப்பையும் மேன்மையையும் கனிவபடக்கூறியிருப்பது இவ்வாலய பாரம்பரியத்தை தெளிவுபடக்கூறும் தன்மையதாக அமைந்து விளங்குகின்றது. அம்மரபை பின்வருமாறு கூறுகின்றது.

பாங்கரும் முன்னைப் பதியினிலே
    பரன்பரை மகோற்சவக் கொடியேற்றம்
பரவசம் தொடர்ந்திரு பத்தேழ்நாள்
    பழம் பெரும் அடியார்க்குக் கொண்டாட்டம்
தீங்குகள் கொடுமைகள் பாதகங்கள்
    செய்பவர்கட்கினித் திண்டாட்டம்
சேரின்மைப் பயன்களை வேண்டுபவர்
    தேவியின் அருளுக்கு மன்றாட்டம்
ஓங்கி எழும்பக்தி வெறியாளர்
    உடல்வளைத்தாடும்நற் கூத்தாட்டம்
உணர்வுமிகுந்தெழுப் போற்றிசையால்
    உருகி இசைப்பவர் பெருங்கூட்டம்
தேங்கிடா தலையெறி சனக்கூட்டம்
    தேர்ந்தநீ கொட்டுக சப்பாணி
சிறுபதம் மடித்திடுந் தம்மே! நீ
    சீர்தரக் கொட்டுக சப்பாணி.[54]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மகோற்சவகாலத்து அடியார் வேண்டுதலை தெளிவுபடக் காட்டவது சுட்டிக்காட்டத்தக்கது.

**முத்தப்பருவம்**

பிள்ளைப்பருவத்தில் குழந்தையை முத்தமிடுமாறு அழகுடன் அழைக்கும் பருவமாக முத்தப்பருவத்தைக் கொள்வர். இம்முத்தப்பருவம் 41-50 வரையான பத்துப்பாடல்களை உள்ளடக்கமாகக் கொண்டதாக அமைகின்றது.

முத்து, முத்தம் என்பவற்றுள் முத்தினது வகைகளிலும் அம்பிகையின் முத்தம் மேலானது,[55] உமிழ்நீருடன் கூடிய அமுதத்தையொத்த சிறப்பு,[56] இலங்கையின் முன்னேச்சரத்தாள்[57] என இந்து மணிகள் வரிசையில் லாபத்தின் ஆழிகத்தில் விளங்கும் சிறப்பு,[58] சிவசக்தி தத்துவத்தில், முப்புரம் எரித்த சிறப்பு, யமனை உதைத்தது, யானையை உரித்தது, மாலும் அயனும் காணாத ஒளியாகத்தோன்றியது போன்ற சிறப்புடைய சிவனின் இடப்பாகம் கொண்டவளென்றும்,[59] எமது துயர்துன்பத்தைத் துடைக்கும் தயாபரியின் சிறப்பு[60] தனித்துவமான தன்மையதாக அமைகின்றது.

**வாராணைப்பருவம்**

பிள்ளைப்பருவத்தில் குழந்தை வடிவமுடையதாக ஆசிரியரது எண்ணத்தில் அம்மனுக்கு அப்பாவாக விளங்கும் பாட்டுடைத் தலைவி வடிவாம்பிகையை வருக! வருக! வருக!என அழைக்கும் பருவமே வாராணைப்பருவமாகின்றது. இப்பருவத்தில் 51-60 வரையான பத்துப்பாடல்கள் இடம்பெறுகின்றன.

முதற்பிறவியில் செய்த பெரும்பயனால் உன்னை வணங்கும் பேறு பெற்றேன் எனும் சிறப்பு,[61] பிறவிகள் தோறும் பெரும் கருமவினைகள் நீங்காத தன்மை[62] உலகைக் காக்கும் நாயகியின் சிறப்பு,[63] அணுமுதல் இமயம் என்பவற்றுக்கு மேலானவளாக வியற்கும் வடிவழகியின் மேன்மை,[64] தீயினும், காற்றினும் மேலானவள்[65] அபிராமிப்பட்டருக்கு அருளிய சிறப்பு, காளி தாசருக்கு அருளிய சிறப்பு[66] மென்மையான அழகிய வடிவழகியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றப்பொலிவு[67] குழந்தை பயத்துடன் அழகிய அடியெடுத்து வைக்கும் பாதத்து நடையழகு,[68] கருவிற்பிறந்த பாசம் அறுக்கும் தாய் எனும் மேன்மை[69] உனது வரவைக்காண வளிமேல் விழிவைத்த அடியார்களின் வேண்டுதல்களை வளமாக்கும் மாண்பு[70] சுட்டி அம்பிகையை நீக்கமற உள்ளத்தில் எழுந்தருள வேண்டும் மேன்மையினை சுட்டுவது தனித்துமான சிறப்புடைய தாகின்றது.

**அம்புலிப் பருவம்**

பிள்ளைத் தமிழ் இலக்கிய மரபில் பிள்ளையை ஒக்கலையில் உட்காரவைத்து வானத்தில் ஊர்ந்து வரும் சந்திரனை விளையாடவருமாறு அழைக்கும் சிறப்பைவிட தாயார் தன்மடியில் உட்காரவைக்கும் சிறப்பு இப்பருவத்திற்குண்டு. இப்பருவத்தில் 61-70 வரையான பாடல்கள் இப்பருவத்திற்குரியனவாக விளங்கு கின்றன.

வெண்மதியின் இயல்புகளை வருணிக்கும்[71] அதே வேளை மதி எனும் பெயர்கொண்ட சத்திரனின் இயல்புகளைக் கூறுகின்றார்.[72] அத்துடன் இமவானின் மனைவி மேனா என்பவள் மடியில் இருத்தி அம்புலியை அழைக்கும் சிறப்பை இப்பாடல் சுட்டுகின்றது.

உலகிற்கே அன்னமிடுகின்ற அன்னபூரணியாகிய முன்னை யவள் மேனாவின் மடியிலிருந்து பாற்சோறு உண்ணமறுத்து கண்ணீர் சொரிகின்றாள் எனும் அழகு[73] அமைந்து விளங்குகின்றது. பாற்கடலைக்கடைந்து அதனூடாகவந்த ஆலகால விடத்தை உருட்டி உண்ட பெருமையுடைய நீ இப்போது சிறிய நீர்க்குமிழி போன்ற சிறிய மதியை ஆடவரும்படி அழைக்கும் கதைமரபைச் சுட்டுகின்றார்.[74]

முப்பத்து முக்கோடி தேவர்க்கும் தாயாகிய தயாபரி ஆனந்த ரூபிணியாக அனந்தண சோபினியாக அம்புலியே ஒளித்து விளையாட உன்னை அழைக்கின்றாள். அவளின் பெருமை கூர்ந்து விளையாடவருமாறு ஆசிரியர் அழைக்கின்றார்.[75]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவத்கீதையில் விஷ்ணுவின் அவதாரக்கோட்பாட்டின் நோக்கத்தையும், இராமாயணத்தில் இராவணண் மதிமயங்கினான், இராவணனைக்கொன்ற இராமனின் சகோதரி முன்னையவள் என்றும் அவளது முகம் மலர்வதற்கு அழைக்கிறார்.[76]

வடிவாம்பிகை அம்மனின் அழகிய தோற்றப்பொலிவினை பாடல் 67ல் பின்வருமாறு வருணிக்கின்றார்.

இந்திர கோபமென இலங்குசெம் மேனியில்
இடைவிடா தொளிகான்றிடும்
இரத்தினம் தரளமொடு பொன்னணிகள்யாவையாயும்
இளநிலா எறித்து நிற்க
விந்தைமிகு மணநாறு கஸ்தூரி புனுகுசவ்
வாதுசண்ணித்து மிளிர
மேனியிற்பூசுசந் தனக்கலவையுடன் நெற்றி
மேவுசெந் தூரதிலகம்
தந்திடும் பேரெழில் சிந்திடும் பரிமணத்
தரத்தினை செப்பலாமோ?
தன்னெழில் அறியாத தன்மையன் இன்னுனைத்
தன்னுடன் ஆடவேண்டல்
விந்தையிற் பெருவிந்தை ஆயினும் மறுக்காது
வெண்மதி ஆடவாவே
மேலான ஈசனது வேணியில் உறைகின்ற
வெண்மதி ஆடவாவே.[77]

எனும் பாடற்சிறப்பு அம்பிகையின் ஒப்பனைசேர் அலங்காரச் சிறப்பினை மிக அழகுறக்கூறுவது சுட்டிக்காட்டத்தக்கது.

பழைமையளுள் பழைமையான இளமையுடன் குழந்தையாக இருக்கும் வடிவழகிக்கு களிகொள்ள வருமாறும்,[78] சந்திரன் சாபம் பெற்றவேளை உனக்கு அபயமளித்தவள் எனும் பெருமை யையும்,[79] மதி, மதி என மதித்து உன்னை அழைக்க நீ மதியாது நில்லாமல் நதியினை தலையில்சூடிய சிவபிரானது பெண்ணா கவும், மதியினை மதித்து அணிந்தவரது நாயகி உன்னை மதித்த அழைக்கிறாள் வருக வருக[80] வருக என காண முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்மானைப் பருவம்**

பிள்ளைத்தமிழ் இலக்கியமரபில் ஆண், பெண் தெய்வங்களுக்கான பருவமாறுபாடுகள் வேறுபடுவதுண்டு. ஆண் தெய்வங்களுக்கு சிறுபறை முழங்குவதும், சிறுதேர் உருட்டுவதும் செயலாக அமைகின்றது. வடிவாம்கபிகையை பெண் தெய்வமாகக் கொண்டதாகையால் அம்மானைப்பருவம் உடையதாகின்றது.

"மூன்று ஐந்து ஏழாம் ஆண்டினும் கும்" எனும் இலக்கண விளக்கப்பாட்டியற்குறிப்பின்படி வயதெல்லை பொருத்த முடையதன்று.[81]

பாட்டுடைத்தலைவியாகிய வடிவாம்பிகையை பெண்கள் எறிந்து விளையாடும் கறங்கு எனும் கருவி கொண்டு விளையாட்டாகும். இங்கு அம்பிகையை அழைக்கும் சிறப்பு தனித்துவமான சிறப்புடையதாக அமைகின்றது.

அநாதியான வடிவமுடைய சக்தி ஆயிரத்தெட்டு அண்டங்களையும் பூத்தவள், இவளை மேனை, இமவானின் மகள் என பாவனை செய்கிறேன் என்று[82] கூறுகின்றார்.

சாக்ததந்திரத்தில் வாகேஸ்வரதந்திரம் கூறும் விதிமுறையில் பரசுராமகல்ப்ப சூத்திரம் கூறும் மரபிற்கு ஏற்ப, நித்யோத்சவம் கூறும் விதிமுறைப்படி சபர்யாகிரம ஸ்ரீசக்கரபூஜை முன்னேச்சரத்தின் பாரம்பரியத்தில் சிறப்புக்குரியதாகும். மஹாமேரு யந்திரம் பிரதிஷ்டை செய்யப்பட்டு காலம்காலமாக பூஜிக்கப்பட்டு வரும் சாக்தமரபையும் கொண்டு விளங்குகின்றது. இம் மரபின் உள்ளார்ந்த தத்துவப்பொருளை பாவனோபநிஷத் கூறுகின்றது.[83] இவ்வுபநிடதம் கூறும் உட்பொருட்களை அம்மானைப்பருவத்தில் பின்வருமாறு துதிக்கின்றார்

ஐம்பொறி எனுந்தீயில் அர்க்கியம் ஆகவுயர்
அரள்ஞானம் அவிச தாக
அதனோட நேயமாம் வத்துகளை இட்டுமே
அயர்விலா ஞானி செய்யும்
உம்பரும் செய்யொணா உயர் மகப் பாவனை
உத்தமச் சிந்து நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவானும் அறிவதும் அறிபொருளும் என்கின்ற
அஞ்ஞானம் தீய்ந்து போகும்
இம்பரில் அம்மையே! உன்றனுக் காற்றிடும்
ஏற்றமார் ஸ்ரீசக்கர
இறர்பை பூசையின் உச்சமென்றிதனினை
இயல்புணர்ந்தார் உரைப்பார்
அம்பொனே! முன்னையில் இப்பூசை ஏற்றுநீ
அம்மானை ஆடி அருளே!
அரியயன் காணொணா அரனுடைய பன்னியே!
அம்மானை ஆடி அருளே![84]

எனும் சிறப்பு குறிப்பிடத்தக்கது.

சௌந்தர்யலஹரீ, அபிராமி அந்தாதி ஆகியவற்றில் துதிக்கப்படும் பூசை மரபில் சரணாகதித்தத்துவத்தின் சிறப்பையும் சக்தியின் வடிவங்களுக்கு அபேதமற்ற தன்மையையும் உணர்த்திடும் மாண்பு[85] அமைந்து விளங்குவது குறிப்பிடத்தக்கது.

பரம்பொருள் ஒன்றே எனும் அத்வைத தத்துவத்தின் உயர்பொருளின் மேன்மையைக[86] கூறுவதோடு சத்து, சித்து ஆனந்தப்பொருளாக அமையும். சக்தியின் சிறப்பையும், முக்தியளிக்கும் பரம்பொருள் எனும் இயல்பையும் சுட்டுவது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீசக்கரத்தின் மத்தியதானமாகிய பிந்துஸ்தானத்தில் அத்வைத பாவனையில் விளங்கும் அதே வேளை வேதஸ்வ ரூபிணியாக காய்த்ரீ மந்திரத்தின் உட்பொருளாக விளங்கும் இயல்பையும், சூரியனின் தன்மையில் காலையில் காயத்ரி என்பதும் மதியம் சரஸ்வதியாகவும் மாலையில் சாவித்திரி வடிவமாக விளங்கும் இயல்புகளையும் வேதங்களும் காண வெண்ணாத அரும்பெரும் வித்தகியாகிய அம்பிகை முன்னை யவள்[87] எனும் சிறப்பினைச் சுட்டுகின்றார்.

நெறிமுறை வழுவாது நேரிய முறை கொண்டவன் எனும் சிறப்பு[88] அழகியானை அம்மானையாட வருமாறு போற்றித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதிக்கும் சிறப்பு[89] தனித்துவமடையாது. குற்றம் இழைத்தாலும் அவற்றை தாயாக மன்னித்தருளும் சிறப்பும் பழவினை களையறுக்கும் சிறப்பும் வடிவழகியை வழிப்படுத்துவதனூடாகக் கிடைக்கப்பெறும் எனும் மேன்மையுடைய அம்பிகையை குழந்தையாக மெல்லடிகளை மண்ணில் பதிக்குமாறு வேண்டும் சிறப்பு[90] என்பன காணப்படுகின்றது.

மதுரையில் மீனாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும் விளங்கி நற்றமிழும், முப்பத்திரெண்டு அறம் வளர்ந்த நாயகி எனும் பெருமையுடன் விளங்கும் அம்பிகை நயினாதீவில் நாகபூசணியாகவும் முன்னையில் வடிவழகியாகவும் விளங்கும் மேன்மையைக்[91] காணமுடிகின்றது.

அம்மானைப் பருவத்தில் உலகம் அமைதி பெறவும், அன்பில் அனைவலும் ஒன்றுபடவும், சமமான சிந்தனையுடையவர்களாக மனத்தூயமையும், நல்லெண்ணமும் ஓங்குவதோடு பிணி நீங்கி, துயர் நீங்கி வாழ்வதற்கு முன்னையவளே! நீ அம்மானை ஆடியளே வேண்டும்[92] எனப் பிராத்திப்பது குறிப்பிடத்தக்கது.

**நீராடற் பருவம்**

நீராடற் பருவம் என பருவகாலத்தில் பாடல்கள் 81 – 90 வரையாக இடம்பெறுகின்றன. பாட்டுடைத் தலைவியின் பராக்கிரமங்களையும், மாஹாத்மியங்களையும் மரபுகளையும் உள்ளடக்கிய தன்மையில் வடிவாம்பிகையினை நீராட வருமாறு அழைக்கும் பிள்ளைத்தமிழ் இலக்கியமரபு தனித்துவமானதாகும்.

சிவனது பதியை தனதாகக் கொண்டும் மிகுந்த வெப்பமும் மிகுந்த குளிருமுடைய தன்மையில் எனது உளத்தாமரைக் குளத்தில் விளங்கும் புனித ஆறு. அதில் சுகந்த மனங்கொண்ட நீரில் நீராட வருமாறு அழைக்கிறார்.[93]

அழகின் வடிவினையாக ஆலய வழிபாட்டில் பக்தர்களுக்கு அருளும் பேரளுடையவளாக ஆடையின்றி அபிஷேகம் காணும் போது எவர் உன்னை எள்ளல் உண்டனர்? நீ குழந்தை உன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராட வருமாறு அழைப்பதும்,[94] சிவனின் பெருமைகளையும், மேன்மைகளையும் கூறி உன்னை இயைபுடன் அழைக்கின்றேன் என்பதனை திருப்புகழ் சந்தத்தில் போற்றும் மரபு[95] தனித்துவமாக அமைகின்றது. மேலும், உலகை பரிபாலனம் செய்யும் சிறப்பையும் மேன்மையையும் உலக நியதியை காப்பவள் எனும் சிறப்புடன் விளங்கும் முன்னையின் தவமே! அவளை பிடிவாதம் இல்லாமல் இயைந்து நீராட வருமாறு அழைக்கின்றார்.[96]

முன்னேஸ்வரத்து அபிஷேகப் பரியத்தையும், சிவாச்சர்ய மரபையும், சாரதா நவராத்திரி, வசந்த நவராத்திரி காலங்களில் நடக்கும் அபிஷேகச் சிறப்புக்களையும் கூறி யான் அழைக்கும் போது பிடிவாதமில்லாமல் வருமாறு[97] ஆசிரியர் அன்புடன் அழைக்கும் சிறப்பு தனித்துவமாகும்.

கண்ணனின் சகோதரியே! பெண்ணாக இருந்து பிடிவாதம் காட்டாமல் மற்றவரினை நகைத்து பரிகாசம் செய்வதன் முன்னர் நீ வருவாயம்மா[98] என அழைக்கின்றார்.

அபிஷேகம் மற்றும் அலங்காரச் சிறப்பையும் அபிஷேக முடிவின் உபசார சிறப்பையும் கூறும் திறன்[99] தனித்துமானதாகும். அன்னை மேனை அணைக்க நீ நீராட வா? என அழைக்கின்றார்.

திசைகள் எங்கும் வீரம் மிக்கவளாக விளங்குபவளே, சண்டமுண்டர்களை வதம் செய்தவளே, சண்டியே என பெருமையும் பராக்கிரமும் உடைய வடிவாம்பிகையே[100] என அழைத்து நீராட அழைக்கின்றார்.

அம்பிகையின் சிறப்பும், அழகிய சதங்கையிட்ட கால்கள், காப்பிட்ட கைகள் கொண்ட அம்பிகையே நீராட வா[101,102] என அழைக்கும் சிறப்பு தனித்துவமானதாக அமைகிறது.

**ஊஞ்சற்பருவம்**

பிள்ளைத்தமிழ்ப் பிரபந்த வகையில் பத்தாவது பருவமாக அமைவது ஊஞ்சற்பருவம் ஆகும். இப்பிரபந்தத்தில் பாடல் 91-100 வரையாக அமைந்து காணப்படுகின்றன. அழகிய குழந்தையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊஞ்சலிலே உட்கார வைத்து ஆட்டி மகிழும் சிறப்பு இப்பருவத்திற்குண்டு. இப்பருவத்தில் வடிவாம்பிகையாக அம்பிகை யின் தனிப்பெரும் பிரபாவங்களையும் பரத்துவ நிலையும் பாடும் மரபு காணப்படுகின்றது. இந்நிலையில்

"பொன்னரின் இன்பினியமுன்னைப் பதிக்கரசி

பொன்னூஞ்ச லாடி அருளே"[103]

என இறுதிப் பகுதி பத்துப் பாடல்களில் ஒரே தன்மையில் அமைந்து காணப்படுகின்றது.

பொன்னாலான ஊஞ்சல் இரத்தினக் கம்பளமும் விரித்து மாணிக்கம் மற்றும் வைரம் முதலான இரத்தினங்கள் பொருந்திய பொன்னூஞ்சலில் அம்பிகையை வடிவாம்பிகையாக இருத்தி ஊஞ்சல் ஆடச்செய்யும் சிறப்பினை இப்பிரபந்தம் தெளிவுறுத் துகின்றது.

எத்தகையவர்கள் எல்லாம் சூழ்ந்துள்ளனர்.[104] அறம் வளர்ந்த நாயகியாக மன்னர்களினது திருப்பணியாலுயர்ந்த[105] சிறப்பு பாடல் கார்முகிலையொத்த அம்பிகையில் கருங்கூந்தலையும் அதன் சிறப்பையும்[106] சுட்டுகின்றார்.

முப்பத்து முக்கோடி தேவர் துதிக்கும் மேன்மையும், ஸ்ரீசக்கர பூசையில் சிறப்புடைய நீ பொன் விக்கிரகமாக விளங்கும் சிறப்பு[107] மாலைகளாலும், ஆபரணங்களாலும் அழகுற விளங்கும் சிறப்பு,[108] ஷண்முகன் தோன்றிய சிறப்பும் தென்னிந்தியாவிற்கு உரித்தானதும் நிலைக்களனானதுமான தமிழ் மொழியின் உயர் விருந்தால் போற்றும் தயாபாபரியாக விளங்கும் சிறப்பு,[109] உள்ள துடனன் ஊஞ்சலாட, விநாயகர், முருகன், மால், அயன், கந்தர்வர், பூமகள் நாமங்கள், நந்தி நாரதர் முதலானவர்கள் ஆடவரும் போது வந்து பொன்னூஞ்சல் அடவருமாறு அழைக்கின்றார்.[110]

வடிவாம்பிகையின் புருவம் புன்னகை, பல், விழி என்பவை களின் அழகைச் சொல்லும் மேன்மையைப் போற்றி பிள்ளைத்தமிழில் மேன்மையில் ஊஞ்ச்ல் ஆட்டும் சிறப்பு[111] தனித்துவமுடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமைகள், கொடுமைகள் நீங்கி நன்மை பெருக, வீரமோடு வாழ கலியுக தர்மம் நீங்கி கிருதயுக் தர்மம் வரை எமக்காக எமது புகலிடமாக உன்னை அடைகின்றோம். நீ எம்மைக் காப்பவளே ஊஞ்சலாடி அருள வேண்டும்[112] எனப்போற்றும் பாடல்வரி சிறப்புடையது.

இவ்வாறாக வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் உள்ளடக்க முடையதாக விளங்குவது தனிச் சிறப்புடையதாக அழகு தமிழில் விளங்குவது சிறப்புடையதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக் கதாகும்.

## அடிக்குறிப்பு

1. சிவராமகிருஷ்ண சர்மா, பா., (2015) ஸ்ரீமுன்னேஸ்வர வரலாறு ச,.பத்மநாபன் (பதி) ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம். சிலாபம். ப.1.
2. பத்மநாபன்,ச., தொ.ஆ) (2018) மு.கு.நூ.ப,52.
3. சொக்கன் (1999) மு.கு.நூ. பார்க்க .ப..51,52
4. பத்மநாபன் ச.,(தொ.ஆ) (2018) மு.கு.நூ.ப.295
5. மேலது ப. 296
6. மேலது ப. 297
7. மேலது பக். 198 – 202
8. மேலது பக். 203 – 207
9. மேலது பக். 208 – 212
10. மேலது பக். 213 – 217
11. மேலது பக். 218 - 222
12. மேலது பக். 223 – 227
13. மேலது பக். 228 – 232
14. மேலது பக். 233 - 237
15. மேலது பக். 238 - 242
16. மேலது பக். 243 - 247
17. சொக்கன் (1999) மு.கு.நு. அணிந்துரை.ப.iii



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. பத்மநாபன், ச., (2015) மு.கு.நூ
19. பத்மநாபன் ச., (தொ.ஆ) (2018) மு.கு.நூ பாடல் 5. ப. 200
20. மேலது, ப. 195
21. மேலது ப. 196
22. மேலது ப. 196
23. மேலது ப. 197
24. மேலது ப. 197
25. மேலது ப. 198 பா.02
26. மேலது ப. 199 பா.03
27. மேலது ப. 199 பா.04
28. மேலது ப. 200 பா.05
29. மேலது ப. 200 பா.06
30. மேலது ப. 201 பா.07
31. மேலது ப. 201 பா.08
32. மேலது ப. 202 பா.09
33. மேலது ப. 202 பா.09
34. மேலது ப. 202 பா.10
35. மேலது ப. 204 பா.13
36. மேலது ப. 205 பா.15
37. மேலது ப. 201 பா.11
38. மேலது ப. 201 பா.12
39. மேலது ப. 206 பா.18
40. மேலது ப. 207 பா.19
41. மேலது ப. 207 பா.20
42. மேலது ப. 208 பா.21
43. மேலது ப. 208 பா.22
44. மேலது ப. 209 பா.23
45. மேலது ப. 209 பா.24
46. மேலது ப. 210 பா.25
47. மேலது ப. 210 பா.26
48. மேலது ப. 211 பா.27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. மேலது ப. 211 பா.28
50. மேலது ப. 212 பா.29
51. மேலது ப. 212 பா.30
52. மேலது ப. 211, பா.27
53. மேலது ப. 217 பா.39
54. மேலது ப. 217, பா.40
55. மேலது ப. 218, பா.41
56. மேலது ப. 218, பா.42
57. மேலது ப. 219, பா.44
58. மேலது ப. 220, பா.45
59. மேலது ப. 221, பா.47
60.
60. மேலது ப. 222, பா.49
61. மேலது ப. 223 பா.51
62. மேலது ப. 223 பா.52
63. மேலது ப. 224 பா.53
64. மேலது ப. 224 பா.54
65. மேலது ப. 225 பா.55
66. மேலது ப. 225 பா.56
67. மேலது ப. 226 பா.57
68. மேலது ப. 226 பா.58
69. மேலது ப. 227 பா.59
70. மேலது ப. 227 பா.60
71. மேலது ப. 228 பா.61
72. மேலது ப. 228 பா.62
73. மேலது ப. 229 பா.63
74. மேலது ப. 229 பா.64
75. மேலது ப. 230 பா.65
76. மேலது ப. 230 பா.66
77. மேலது ப. 231பா.67



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. மேலது ப. 231 பா.68
79. மேலது ப. 232 பா.69
80. மேலது ப. 232 பா.70
81. பரமசிவன், சு.,கு.,(1959) சிற்றிலக்கிய மொழிவுகள்; 'தலைமையுரை'', இரண்டாவது மாநாடு, சைவசித்தாந்த நூற்பதிவுக் கழகம், சென்னை. ப.23
82. பத்மநாபன்,ச., (தொ.ஆ) (2018) மு.கு.நூ. ப.233. பா.7.
83. பாவனோபநிஷத்
84. பத்மநாபன்,ச., (தொ.ஆ.) (2018) மு.கு.நூ. ப.233, பா.72.
85. மேலது ப. 234 பா.73
86. மேலது ப. 234 பா.74
87. மேலது ப. 235 பா.75
88. மேலது ப. 235 பா.76
89. மேலது ப. 236, பா.77
90. மேலது ப. 236 பா.78
91. மேலது ப. 237 பா.79
92. மேலது ப. 237 பா.80
93. மேலது ப. 238பா.81
94. மேலது ப. 238 பா.82
95. மேலது ப. 239 பா.83
96. மேலது ப. 239 பா.83
97. மேலது ப. 240 பா.85
98. மேலது ப. 240 பா.86
99. மேலது ப. 241 பா.87
100. மேலது ப. 241 பா.88
101. மேலது ப. 242 பா.89
102. மேலது ப. 242 பா.90
103. மேலது ப. பக் 243 – 247. பா.91 – 100. இறுதிப்பகுதி
104. மேலது ப. 243 பா.92
105. மேலது ப. 244 பா.93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106. மேலது ப. 244 பா.94

107. மேலது ப. 245 பா.95

108. மேலது ப. 245 பா.96 (ஒப்பிடுக. மேலது ப.75, பா.3 வடிவழகி அம்பாள் திருவூஞ்சல்)

109. மேலது ப. 246 பா.97

110. மேலது ப. 246 பா.98

111. மேலது ப. 247 பா.99

112. மேலது ப. 247 பா.100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவாக

முன்னீச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் ஓர் ஆய்வு எனும் ஆய்வானது இலங்கையின் வரலாற்றுச் சிறப்பும் பழமையும் சிவாலயமான முன்னீச்சரத்து இறைவனின் இறைவியாக விளங்கும் ஸ்ரீ வடிவாம்பிகை மீது பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் எனும் தமிழ் பிரபந்தம் பற்றியதாகும்.

இத்தமிழ் பிரபந்தம் யாழ்ப்பாணத்து நாயன்மார்க்கட்டையைச் சேர்ந்த தமிழறிஞர் திருவாளர் சொக்கலிங்கம் எனும் பெயர் கொண்ட ஆசிரியர் தம்மை "சொக்கன்" என புனைபெயர் கொண்டு இந்நூலை 1999களில் ஆக்கியுள்ளார். தமிழ்ப் பிரபந்த வகையில் முன்னேச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை அம்பாளை குழந்தைப் பருவமாகக் கொண்டு பத்துப் பருவங்களிலும் பல்வேறு வரலாற்றுச் சிறப்புக்களையும், பிரதேசச் சிறப்புக்களையும் அதேவேளை இவ்வாலயத்தின் அமைவுக்கேற்ற வகையில் சிவனாக விளங்கும் முன்னேச்சர சுவாமிக்கு இணைபிரியாத சக்தி யாகக் கொண்டு இவ்வாலய அதிசயங்களையும் மரபுகளையும் ஆவணமாக்கிக் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாலய வரலாற்றச் சிறப்பில் இவ்வடிவாம்பிகை அம்மன் பற்றிய வரலாற்றுச் செய்தியும் அம்பிகையின் அழகுச் சிறப்பையும் எடுத்துக்கூறும் அதேவேளை பல்வேறு உயர்வுநவிற்சிச் சிறப்பும் பெயர்களையும் ஸ்ரீ வடிவாம்பிகை அம்பாளுக்கு சூட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னேச்சரத்தின் ஊர்ச்சிறப்பில் முன்னனையன் என்று சிறப்புப் பெறும் ஸ்ரீ வடிவாம்பிகையின் குழந்தைச் சிறப்புக்கள் அம்பிகையின் மஹாத்மயங்கள் அவ்வாலயத்தில் அம்பிகைக்கு என்றே சிறப்புற நடைபெறும் சாரதா நவராத்திரி, வசந்தா நவராத்திரி, அலங்காரச்சிறப்பு, அபிஷேகச் சிறப்பு, ஸ்ரீசக்ர பூஜைச் சிறப்பு என்பன பல்வேறு நிலைகளிலும் சிறப்புற எடுத்துக் காட்டப்படுகின்றமை இங்கு சுட்டிக்கூட்டத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேச்சரத்துப் பிரபந்தங்கள் எனும் வரிசையில் ஸ்ரீ வடிவாம்பிகை மீது எழுந்த பதினாண்டு பிரபந்தங்களுள் முன்னைநாத சுவாமியுடன் பாடப்பட்ட மூன்று பிரபந்தங்களுள் இப் பிள்ளைத்தமிழ் உயர் இலக்கியச் செழுமையுடையது என்பதும் பெரிய இலக்கியம் என்பதும் கருத்தாமை மிக்க செய்திகள் பலவற்றையுள்ளடக்கமாகக் கொண்டது என்பதும் இங்கு முன்வைக்கத்தக்க முக்கிய விடயமாகும்.

தமிழ்ப் பிரபந்த மரபில் உயர்ந்த தரமுடைய இம் முன்னேச் சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் ஓர் இலக்கிய நூல் வடிவமின்றி ஓர் தோத்திர நூலாகவும் கொள்ளத்தக்க சிறப்பு டையதாகும்.

கருத்தாளமும் சொற்செறிவும்கொண்ட இம் முன்னேச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகையின் பிள்ளைத்தமிழ், நாற்றமிழ் இசைப் பாமா லையாக தினமும் போற்றற்குரிய சிறப்பையும் இசையும் இயல் பையும் பெறச்செய்வதனூடாக இவ்வாக்கியத்தினை அடியவர் களும் இலக்கிய ஆய்வார்களும் நன்கு பலன் பெறுவார் என்பதோடு நூலுருவில் விளங்கும் இப்பிரபந்தம் மக்கள் மயப்படும் தன்மையையும் பெறும் என்பது எனது அபிப்பிரயாயமாகின்றது.

முன்னீச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் எனும் இவ்வாய்வுக்குரிய நூல் சைவத் தமிழ் பாரம்பரியத்தில் முன்னீச்சரம் தலத்திற்குரியதும் சாந்தி வழிபாட்டிற்குரியதும் அம்பி கையை குழந்தையாயக் கொண்ட பண்டைய பாரம்பரியங்க ளையும் ஒன்று திரட்டி பண்டைய மரபைந்தமிழ் இலக்கிய மரபில் மிகவும் செழுமையுடன் எடுத்துக்கூறும் சிறப்புடைய நூலாக அமைந்து காணப்படுகின்றமை இவ்வாய்வினூடாக வெளிக் கொணரப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**

**நூல் விபரப்பட்டியல்**

01. தமிழ் நூல்கள்


01. சதாசிவம்,ஆ.(1966) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், யாழ்ப்பாணம்.

02. சபாநாதன்,குல.,(2014) முன்னீசுவரம் ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம், (மறுபதிப்பு)

03. சிவராமகிருஷ்ணசர்மா,பா.,(1968) ஸ்ரீமுன்னேஸ்வர வரலாறு, சிலாபம்

04. சுப்பிரமணியம்,ச.வே., (1980) பிரபந்த தீபம், தமிழ்ப் பதிப்பகம், சென்னை.

05. செல்வம் கல்யாண சுந்தரம், (1994) வல்லவடிவாம்பிகா மாலை, திருமூலர் சங்கம், கொழும்பு.

06. செயராமன்,ந,வீ., (1967) சிற்றிலக்கியச் செல்வங்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம்

07. சொக்கன் (N.D).முன்னீச்சரத்து ஸ்ரீவடிவாம்பிகை பிள்ளைத்தமிழ், (பதிப்பிக்கப்படாதது) கையெழுத்துப்பிரதி.

08. சொக்கன் (2012) முன்னீச்சரத்து ஸ்ரீவடிவாம்பிகை பிள்ளைத்தமிழ், ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம்.

09. சொக்கன் (1999) முன்னீச்சரத்து ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் முன்னேஸ்வரம்

10. சோமாஸ்கந்தக் குருக்கள், மு.,(1927) முன்னேஸ்வர மான்மியம், சிலாபம்.

11. தண்டியலங்காரம் (1926) மூலமும் உரையும், அ.குமாரசுவாமிப்புலவர், சுன்னாகம்.

12. பத்மநாபன்,ச., (2018) முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகை மீதும் ஸ்ரீ முன்னைநாதர் மீதும் பாடப்பட்ட தமிழ்ப் பிரபந்தங்கள் ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம்.

13. பத்மநாபன்,ச.,(2015),ஸ்ரீ முன்னேஸ்வரம் மான்மியம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம்.
14. வயித்திலிங்கம்,அ.,(2012),முனீசுரவந்தாதி, ஸ்ரீ முன்னேஸ் வரம் தேவஸ்தானம் சிலாபம், (மறுபதிப்பு).
15. வைத்திலிங்கம், அ.,(1964) முனீசுரவந்தாதி., கொழும்பு.
16. ஜெயராசா,சபா., (2013) ஆய்வு முறையியல், சேமமடு பதிப்பகம்.
17. ஸ்ரீமுன்னைநாதசுவாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல் (1965) சி.பாலசுப்பிரமணியக்குருக்கள், ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம்.

02. சம்ஸ்கிருத நூல்கள்

01. கேன உபநிடதம் (1968) உபநிஷத்ஸாரம், அண்ணா ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை.
02. முன்னேஸ்வரம் நவராத்திரி பூஜா பத்ததி, (கையெழுத்துப் பிரதி), (பதிக்கப்படாதது)
03. ஸ்ரீமத் தஷ்ணகைலாய மஹாத்மியம் (1927) நாகலிங்க பண்டிதர் (பதி.) சம்ஸ்கிருதம்) வதிரி

03. ஆங்கில நூல்கள்

01. Arunachelam, P.,(1901) **Sketches of Ceylon History**, Colombo.
02. Codringon, H.W.,(1947) **A Short History of Ceylon**, Colombo.
03. Fenando,E.A.,(1932) **Catholic Chilaw**, Colombo.
04. Previs Litt.D.P.E.(1949) **The CeylonLittoral 1593**, Soc.Resp.Do.Instituto De Coimbra
**05. The Culavamsa – II** (1930) Wilhelm Geiher (Ed.) Colombo.
06. Kailasnatha Kurukkal,K. (1959) **A Study of Saivism of The Epic and Puranic Periods**., (Unpubhished Ph.D.thiesa)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. கட்டுரைகள்

01. சண்முகம்பிள்ளை,மு.,(1977) 'சிறுபிரபந்தங்கள்' இலக்கியக் கொள்கை, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.

02. செயராமன், நா.,(1988) 'சிற்றிலக்கியங்களின் தோற்றம்', அரங்கேறிய ஆய்வுகள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

03. தில்லைநாதன், சி., (1979). 'தமிழ் இலக்கிய வடிவங்கள்' இளங்கதிர், தமிழ்ச் சங்கம், பேராதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

உ
சிவமயம்

# முன்னீச்சரத்து ஸ்ரீவடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்

ஆக்கம்
**சொக்கன்**

வெளியீடு,
**முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,**
சிலாபம்.
2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | முன்னீச்சரத்து ஸ்ரீவடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் |
| ஆசிரியர் | : | சொக்கன் |
| மீள்பதிப்பு | : | 2012 |
| வெளியீடு | : | ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,<br>சிலாபம், இலங்கை. |
| ISBN | : | 978-955-0877-08-9 |
| அச்சுப் பதிப்பு | : | மதி கலர்ஸ்,<br>15/2B, முருகேசர் ஒழுங்கை,<br>நல்லூர், யாழ்ப்பாணம். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னநாதப் பெருமான் சிவசக்தி ஐக்கியமாக ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கின்றார். முன்னேச்சரத்து அம்பிகை வடிவாம்பிகை ஆவார். இவ்வடிவாம்பிகா மீது காலத்திற்கு காலம் பல்வேறு பக்திப்பாசுரங்கள் பாடப் பெற்றுள்ளன. இப்பக்திப் பாசுரங்களை பாடியோர் வரிசையில் திருவாளர் சொக்கன் குறிப்பிட்டதக்கவர். யாழ்ப்பாணத்து நாயன்மார்கட்டை வசிப்பிடமாகக் கொண்ட இவர் வடிவழகி அம்பிகையின் பக்தர். இவர் வடிவழகி அம்பிகை மீது அந்தாதி பாடியவர். அத்தோடு மிகுந்த பக்தியோடு பிள்ளைத்தமிழ் பாடியவர். அவற்றுள் ஸ்ரீவடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் எனும் நூலே இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

இலங்கையின் சக்திபீடங்களுள் ஒன்றாகவிளங்கும் சிறப்புடைய முன்னேஸ்வரத்து வடிவழகி அம்மையின் பெருமைகளும் அருட்சக்தியும் அளவிடற்கரியன. எல்லைகடந்தன. அத்துடன் வடிவழகி அம்மைக்கு நடைபெற்றுவரும் வழிபாட்டு மரபுகளும் தனித்துவமுடையன. இவ்வகையில் அம்பிகையின் அருளாளர்கள் பலர் பல்வேறு இலக்கியங்களை பாமாலையாக அம்பிகைக்கு சூடியுள்ளனர். இப்பாமாலை வரிசையில் ஒன்றே இவ்வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் ஆகும். இதைத் தொடர்ந்து ஏனைய பாமாலைகளும் பிரசுரமாகி வெளியிடப்படும்.

ஸ்ரீவடிவாம்பிகை மீது பாடப்பெற்ற பாடல்கள் பற்றிய விபரங்கள் அறியப்படாதிருப்பின் அவைபற்றிய விபரங்களை எமக்கு அறிவிக்கும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

இம் முன்னீச்சரத்து ஸ்ரீவடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் எனும் பிரபந்தத்தை ஸ்ரீ வடிவாம்பிகை அம்பாளின் திருவடித் தாமரைகளில் சமர்ப்பணம் செய்கின்றேன்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

**இங்ஙனம்**
**இறைபணியில்**
**பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்**
**பிரதானகுருவும் தர்மகர்த்தாவும்**
**விரிவுரையாளர்,**
**சம்ஸ்கிருதத்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**கார்யகலாமந்திரம்**
ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம்,
மகாதேவாலயம், முன்னேஸ்வரம்,
சிலாபம், இலங்கை
23.05.2012.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பதிப்பின் வெளியீட்டுரை

இலங்காதீபத்தில் 'அலகேஸ்வரம்' என ஸ்ரீசிவமஹாபுராணம் சனத்குமார சம்ஹிதையில் எடுத்தோதப்பதடுவதும், குப்ஜிகா தந்திரத்தில் 'தேவமோஹினீ பீடம்' எனவும், மார்க்கண்டேயபுராணத்து காமாட்சீ விலாஸத்தில் சாங்கரீ பீடம், ஸ்ரீலங்காபீடம் எனவும் விதந்தோதப்படுவதுமான சிறப்புக்கள் மிக்க சக்திபீடமாக முன்னேச்சரம் விளங்குகின்றது. இத்தலத்திலே ஸர்வாபீஷ்டவரப்பிரத ஸ்ரீ வடிவாம்பிகாதேவி அருளாட்சி செய்து வருகின்றாள்.

இவ்வாறான சிறப்புகள் மிக்க தேவியை வியாச பகவானால் தட்சிணகைலாஸ புராணத்தில் [XVI. 94-101] துதிக்கப்படுவளும், கொக்குவில் ச. சபாரத்தின முதலியாரால் ஆசிரிய விருத்தத்தாலும், கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளையால் பதிற்றந்தாதி, ஆசிரிய விருத்தத்தினாலும், புழுதிவயல் R.S. தம்பு உபாத்யாயரால் பதிகத்தாலும், S.M. ராஜப்பாவால் விருத்தத்தாலும், சிவஸ்ரீ சி. பால சுப்பிரமணியக்குருக்கள், நாவலியூர் சோமசுந்தரப்புலவர் இருவரினாலும் திருவூஞ்சலினாலும்; பெரியசாமிப்பிள்ளையால் கும்மியினாலும்; கி.வா.ஜகன்நாதனால் விருத்தப்பாவினாலும்; கலாநிதி கா. கைலாச நாதக்குருக்கள் அவர்களால் பஞ்சரத்தினத்தாலும்; சொக்கனால் அந்தாதியினாலும்; திருமதி செல்வம் கல்யாணசுந்தரத்தாலும்; மாலையாலும் துதிக்கப்பட்டு அருள்பாலித்துவருகின்றவளும் மனம், வாக்கு, காயங்களுக்கு அப்பாற்பட்டவளுமான தேவீ வடிவாம்பி கையை இனிமையான தமிழ்பிரபந்தங்களுள் ஒன்றான பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் மூலம் ஆசிரியர் சொக்கன் அவர்கள் பாடியுள்ளார்.

இவ்வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்தில் தேவியை 5 மாதங்கள் முதல் 21 மாதங்கள் வரையான பருவங்களான காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாராணை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊஞ்சற் பருவங்களினூடாக ஆசிரியர் வர்ணிக் கின்றார். பாமரரும் பண்டிதரும் புரிந்து கொள்ளும் அளவிற்குச் சொன்னடையும், பொருண்மையமும் மிக்கதாக இனியதமிழிலே ஆக்கி ஆசிரியர் அவர்கள் அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமாகி யுள்ளார். அவருக்குத் தமிழுலகு என்றும் கடமைப்பட்டுள்ளது.

**நாயன்மார்கட்டை வாழ்விடமாகக் கொண்ட ஆசிரியர் சொக்கன் அவர்களைச் சைவத் தமிழுலகு நன்கு அறியும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் சொக்கனுக்கு ஸ்ரீவடிவாம்பிகா தேவியின் திருவருட்கடாட்சம் என்றென்றும் நீங்காமல் கிடைப்பதாகுக!

இந்நூலுக்கு தகுந்த முன்னுரை ஒன்றினை வழங்கிய எனது சகோதரர் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களுக்கும் எனது நன்றிகளுடன் கூடிய நமஸ்காரங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாரம்பரியமாகவே 1948ஆம் ஆண்டுமுதலாக ஸ்ரீமுன்னைநாத பெருமானுக்கும் ஸ்ரீவடிவழகிக்கும் நடைபெற்றுவரும் லட்சார்ச்சனை தினத்தின் பகுதானிய வருடத்து லட்சார்ச்சனையின் இறுதிநாளான இன்று இந்நூலை வெளியீட்டு வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். இதனை அம்பிகையடியவர்கள் அனைவரும் படித்துப் பயன் பெறுவார்களாக.

இந்நூலினை கணனி வடிவில் வடிவமைத்துத் தந்த யாழ்ப்பாணத்து Institute of Informatics Studies நிறுவனத்தினர்க்கும் கணனி அச்சுப்பதிப்பு செய்த கங்கை கொம்பியூட்டர் நிறுவனத்திக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திரிகரண சுத்தியுடன் இத்தைப்பூச நன்னாளிலே ஸ்ரீவடிவாம்பிகா தேவியின் பாதக்கமலங்களில் இந்நூலினைச் சமர்ப்பிக்கின்றோம்.

**கா. இரத்தினகைலாசநாதக்குருக்கள்**
பிரதான குருவும் தர்மகர்த்தாவும்

கார்ய கலாமந்திரம்
ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம்,
சிலாபம்.
வெகுதானிய தைப்பூச நன்னாள்
31.01.1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## இலக்கியகலாநிதி
# பேராசிரியர் கா. கைலாஸநாதக்குருக்கள்
### அவர்கள் வழங்கிய
# முன்னுரை

சொக்கன் பெரும் தமிழ் அபிமானி. அம்பிகையிடத்தில் பெரும் பக்தி பூண்டவர். முருகபக்தன். என்னிடம் பல்கலைக் கழகத்தில் கற்ற மாணவர்களுள் என்றும் என் ஞாபகத்தில் இருக்கும் ஒருவர். குருபக்திமிக்கவர். தன்னாசான் தன்னொடு கற்றோன் தன்மாணக்கன் பாயிரம் எழுதுவதற்கு உரியவர் என்ற முறையில் உரிமையுடன் இப்பாயிரம் வழங்குகின்றேன். முன் ஒருமுறை வடிவழகி மீது பாடல்கள் பாடியுள்ளார். இப்பொழுது வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் பாடுகின்றார். சொக்கன் வாய் மூலமாக வடிவழகி மேல் இப்பிரபந்தம் வெளிவருகின்றது. அழகே உருவானவள் வடிவழகி என்றும் அழகையும் அவளையும் பிரிக்க முடியாது நேரில் பார்த்தவர்கள் இதனை நன்கு உணர்வர்.

பிரபந்தங்கள் தமிழ் இலக்கியத்தைப் பெரிதும் அழகு செய்கின்றன இப்பிரபந்தவகையைச் சார்ந்த பிள்ளைத்தமிழ்.

'வயோவஸ்தா விவர்ஜிதா' என்பது லலிதாசஹஸ்ரநாமங்களில் ஒன்று. வயது வகுக்கப்படாதவள் என்பது இதன் பொருள். 'பாவனாகம்யா' என்பது இன்னொருநாமம். பாவனையால் அடையத்தக்கவள் என்பது இதன் பொருள். பாவனையினால் சிறுபருவம் ஒரு பொழுதும் காணாத உலகமாதாவைச் சிறுமியாகக் கற்பித்து, சிறுமியாக இருக்கும் இப்பிரபந்தத்தில் காப்புப் பருவம், செங்கீரைப்பருவம், தாலாப்பருவம், சப்பாணிப்பருவம், முத்தப்பருவம், வாராணைப்பருவம், அம்புலிப்பருவம், அம்மானைப்பருவம், நீராடற்பருவம், ஊஞ்சற்பருவம் என பத்துப் பருவங்களைக் கொண்டு அவ்வவ்பருவ நிகழ்ச்சிகளை மனமார வழுத்தி கவிதையால் களித்ததன்விளைவே இப்பிள்ளைத்தமிழ், இப்பாடல்கள் நூறிலும் பெருகும் உணர்ச்சிப் பெருக்கு பாடல்களாகப் பருணமிக்கிறதைக் கண்டு சுவைத்துப் பேரின்பம் கண்டோம். அம்பிகையை பாலையாக, சிறுமியாக, பாலாபரமேஸ்வரியாகப் பாவனை செய்து உபாசிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையினருக்கு இப்பாடல்கள் பெரும் அர்த்தபுஷ்டியை உடையவை. சொற்சுவை, பொருட்சுவை மிக்கவை. சுவைக்க சுவைக்கத் தெவிட்டாதவை.

இவ்வகையாக, சிறுமியாக வளர்ந்து சகல குணநலன்களும் மிகுந்து விளங்கும் பருவங்களைக் காளிதாஸன் குமார சம்பவம் எனும் மஹாகாவியத்தில் தனக்கு உரிய முறையில் முதல் சர்க்கத்தில் சிலபாடல்களில் வர்ணிக்கிறார். இதுவும் கற்பனை வழி எழுந்த ஈடிணையற்றது இவ்வருணனை.

கவிகள் தத்தம் சாதுர்யத்தால் சாதிக்காதது என்ன இருக்கிறது. வாழ்க சொக்கனின் கவிதா சாமர்த்யம்.

**கா. கைலாஸநாதக்குருக்கள்**

62, TARNICA ROAD,
HOWICK, AUCKLAND,
NEWZELAND.
18.01.1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | வெளியீட்டுரை | iii |
| | முதலாம் பதிப்பின் வெளியீட்டுரை | iv |
| | முன்னுரை | vi |
| | குலதெய்வணக்கம் | ix |
| | விநாயக வணக்கம் | x |
| | அவையடக்கம் | xi |
| 1. | காப்புப் பருவம் | 01 |
| 2. | செங்கீரைப் பருவம் | 06 |
| 3. | தாலப் பருவம் | 11 |
| 4. | சப்பாணிப் பருவம் | 16 |
| 5. | முத்தப் பருவம் | 21 |
| 6. | வாரணைப் பருவம் | 26 |
| 7. | அம்புலிப் பருவம் | 31 |
| 8. | அம்மாணைப் பருவம் | 36 |
| 9. | நீராடற் பருவம் | 41 |
| 10. | ஊஞ்சற் பருவம் | 46 |
| | நிறைவுரை | 51 |
| | பாடல் முதற் குறிப்பகராதி | 54 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குலதெய்வ வணக்கம்

நலந்தி கழ்திரு நல்லையிற் கந்தனைச்
சிலம்பு மெல்லடிச் சிற்றிடை யாரொடும்
இலங்கி எங்களுக் கின்னருள் ஈந்திடும்
பொலங்கொள் வேற்படை யாளனைப் போற்றுவாம்.

பொலம் - பொன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் வணக்கம்

ஓம்எனும் பிரணவத் துருவாகி உலகெலாம்
ஒருவனாய் விக்கினங்கள்
ஒன்றுமே இன்றிநன் றாகவே அடியவர்
உள்ளஅணை மீதமர்ந்து
நாம்எனும் ஆணவப் பிணிகடிந் தவர்தமது
நவையழித் தருள்சுரந்து
நாதனாய் ஞானமளி போதனாய் ஐந்துகர
நம்பனாய் நிலவுமெந்தாய்!
போம்எமது வழியெலாம் கலங்கரை விளக்கமாய்ப்
பொலிந்திடும் ஆனைமுகனே!
புத்திசித் தியெனும் பொன்னெழிற் பாவையர்
புகலிடங் கொள்ளுமார்ப!
ஆம்என இசைந்தெனக் காதரம் ஆகிடுன்
அன்னைமுன் னீச்சரத்தாள்
அகிலாண்ட நாயகிக் கன்புடன் அளித்திடும்
அருந்தமிழ்க் கவிதழையவே.

---

விக்கினங்கள் - தடைகள்.
நவை - குற்றம்.
அகில + அண்டம் (அகிலாண்டம்) எல்லா அண்டங்களும்.
ஆதரம் - ஆதாரம். தழைய-சிறக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவையடக்கம்

அண்டசரா சரமனைத்தும் அருளாற் பேணி
அவ்வவற்றிற் கேற்றவெலாம் அளிக்கும் அன்னை
பண்டையநற் கவிவாணர் பலரும் பாடிப்
பரவிநின் றருள்வேட்ட பாவை யாட்(கு)
உண்டுறங்கி உலகினிலே உழலும் நாயேன்
ஒருசிறிய தமிழ்மாலை புனைந்து சூட்டல்
"மண்டுமொளிக் கதிரவனுக் கிணைநான்" என்று
மமதைகொளும் மின்மினியின் மடைமை அன்றோ!

ஆயினுமே திருமூலர் கூற்றிற் கொப்ப
அவளடிக்கோர் பச்சிலையாய் ஆனாற் போதும்
பாயருளை வெள்ளமென வழங்கும் அன்னை
பராசக்தி கடைக்கணிப்பாள் என்று நம்பிச்
சே(ய்)யானும் என்பிள்ளைப் பாட்டைச் சாத்திச்
செம்மலர்நோன் றாளிணையைப் பணிவேன் தாயும்
"போயிடுஎன் முன்வையேல்" என்னா ளாயின்
புலவர்களும் புறந்தள்ளார் போற்றுவாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. காப்புப் பருவம்

**சிவபெருமான்**

கோவணம் துன்னமே ஆயினும் கோவணம்
குன்றிடா மன்றாடியைக்
கூடியே அன்னவற் கொள்ளையின் பங்கொளக்
கொழிதமிழப் பாட்டிசைத்த
நாவணம் மிக்கவர் நால்வருக் கருளினை
நல்கிவீ டளிநம்பனை
நம்பியே பாதபங் கயமீது வீழ்ந்தெமது
நாவலித் திடப்போற்றுவோம்
சாவணம் செலவிடா துய்வணம் காட்டவும்
சந்தமார் தமிழ்கேட்கவும்
சிலாபநன் னகரத்து முன்னையம் பதியினைச்
சார்ந்தஎம் வடிவழகியைப்
பூவண மேனியொடு பூத்துக் குலுங்கிடும்
பொழிலெனப் பூணணிந்து
பொலிந்திடும் செல்விதனை ஆகத்தி னிற்கொண்டு
போற்றிப் புரக்கவென்றே. 01

**திருமால்**

தட்டிக் கேட்க ஆளில்லைத்
தறுதலை என்றே தாய்கவலச்
சற்றும் அஞ்சா தயலேகித்
தறதற என்றே உறிஏறிச்
சட்டி வெண்ணெய் உண்டாலும்
சற்றும் வெகுளி கொள்ளாமல்
தங்கள் மகன்போல் அரவணைத்துத்
தழுவி மகிழும் ஆய்ச்சியரின்
குட்டிப் பிள்ளை, கோபாலன்
குறும்பன், திருவின் மணவாளன்
கோலக் கார்நிற மேனியினான்
கட்டிப் பாகும் முக்கனியும்
காணாச் சுவையின் சொல்லழகி
கவினார் பொழில்சூழ் முன்னைவளர்
கனியை இனிதே காக்கவென்றே. 02

---

*01. **துன்னம்**-கிழிந்த கந்தலாடை, **கோவணம்**-1. கௌபீனம்(கச்சை), 2.அரச இயல்பு. **மன்றாடி**-மன்றில் ஆடும் சிவபெருமான், **நால்வர்**-சமயகுரவர் நால்வர். நம்பன்-நம்பெருமான்(சிவன்), **சாவணம்**-சாகும் வண்ணம், **பூண்**-ஆபரணம். **ஆகம்**-உடல், மார்பு.*

*02. **கவல**-வருந்த, **ஆய்ச்சியர்**-இடைச்சியர், **திரு**-இலக்குமி, **கார்**-முகில். **கவின்**-அழகு, **கனி**- கனியை ஒத்த வடிவழகாம்பிகை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமான்

வேத ஞானபரி பூரணன் பிரமன்
மேதை அல்லனென வைத்தவன்
மேனி செம்பவள மானவன், கருமை
மேவு கண்டமுள எம்பிரான்
காதல் கொண்டுசெவி தந்து நற்கதியைக்
காட்டும் 'ஓம்'எனுமோர் மந்திரம்
கருது நற்பொருளை உரைஎனக் கெனலும்
கனிவுகொண்டு பொருள்வி ரித்தவன்
சீத மார்தமிழை ஓத வைத்தெமது
சிந்தை நன்குகுடி கொண்டவன்
சீறு வேலும்முகம் ஆறு மோடுசென்று
தேவர் துன்பமன் றோட்டினோன்
மோது வேல்விழிகொண் டாடுங் கூத்தனைத்தன்
மோக லாகிரியில் வீழ்த்திய
முன்னை வாழழகி தன்னை அன்புமிக்க
முந்தியே புரக்க என்றுமே. 03

வைரவக்கடவுள்

ஆணவம் மிகுத்திட அனைத்துமே தன்னுடைய
ஆக்கமென றகங்கரித்தே
அனலாடி தன்னிலும் தான்பெரியன் என்றெண்ணி
ஐந்துதலை யான்தானென
வீணனாய்த் திரிந்திட்ட வேதனின் தலையொன்று
வீழ்ந்திடக் கிள்ளினானை
வெங்கொடிய தீமைகள் வீழ்ந்துபரி நாசமாய்
மேதினிவிட் டோட்டுவானைக்
காணவே சுவானவா கனத்தமர்ந் தூர்களைக்
காக்கின்ற காவலானைக்
கருநீல மேனியொடு கனல்விழிப் பார்வைகொடு
காட்சியான அடிபோற்றுவோம்
பூணரவி னோடுபுலி அதழணிந் தேகயத்
துரிபோர்க்கும் எந்தையாரின்
பொன்னெழிற் பாவையைச் சங்குவளை யாளினைப்
போற்றிப் புரக்க என்றே. 04

---

3. **பரிபூரணன்**-முழுமையானவன், **மேதை**-பேரறிவாளி, **கண்டம்**-கழுத்து, **சீதம் ஆர்**- குளிர்மை மிகுந்த, **மோக லாகிரி**-ஆசையாகிய மயக்கம், **முன்னை**-முன்னீச்சரத்தின் மரூஉ.

4. **அனலாடி**-தீயைத் திருக்கரத்தில் ஏந்தி ஆடியருளும் சிவன், **வேதன்**-பிரமன், **சுவானம்**-நாய், **புலி அதழ்**-புலித்தோல், **கயத்துரி**-(கயம்-யானை) யானைத்தோல், **புரக்க**-காக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீரபத்திரக் கடவுள்

தக்கன் தன்னை அகிலத்தின்
தலைவன் ஆகத் தக்கவனாய்த்
தகுதி நோக்கா திறுமாந்து
தலைவன் தன்னை மறந்துசெயப்
புக்க வேள்விக் கமரர்களும்
புகுந்தார் புகல்யார் எனஓரார்
புன்மை கடியச் சிவன்ஏவப்
போந்தான் அழித்தான் புல்லியரைச்
சொக்கத் தங்க மேனியினான்
சுந்தரற் கீடிலை எனுமுண்மை
சொல்லா லன்றிச் செய்கையினாற்
சூதினர் உணர வைத்தமகன்
மிக்க வீர பத்திரனை
வேண்டிப் பரவித் துதித்திடுவோம்
வேயின் தோளி முன்னையளை
விழைந்து நன்கு காக்கவென்றே. 05

### அரிகரபுத்திரர்

"பாரினில் விண்ணிற பாதலத் தினில்வாழ்
பவர்எவர் எனினுமே யாகப்
பதிக்குவன் கரத்தை எனில்அவர் தலையிற்
பசுமமாய் ஆக" என்றரனை
ஈரமில் கொடியன் வேண்டிய வரத்தை
ஈந்தவன் மீதுசோ திக்க
ஏற்றினன் அஞ்சி ஓடியே மாயன்
இடஞ்சரண் எய்திட மாலும்
ஓரெழிற் கன்னி உருவுடன் தோன்றி
உலுத்தனை உயிர்கவர்ந் திட்டான்
ஓடியே ஒளித்த அரனவன் திரும்பி
உருவினில் மோகினி யான
காருருக் கனியைக் கலந்தனன் கலந்த
கலப்பினில் தோன்றிய ஐயன்
கடும்புலி ஊர்தி, கால்பிடித் திடுவோம்
முன்னையாட் காத்திட என்றே. 06

---

5. அகிலத்தின்-உலகத்தின், புக்க-புகுந்த, புகல்-ஆதாரம், புல்லியர்-இழிந்தோர்(தேவர்கள்), சூதினர்-சூழ்ச்சியாளர், பரவி-போற்றி, வேய்-மூங்கில்.

6. பசுமம்-நீறு, ஏற்றினான்-எருத்து வாகனத்தனான சிவன், கனி-கனி போலும் அழகி, ஊர்தி -(வாகனமாகக் கொண்டு) செலுத்துவோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாகாளி

இதழ்களைப் பீறிமுன் வருகின்ற இருபற்கள்
இருட்பிழம் பனைய மேனி
உருத்தெழுந் தெங்கணும் கனற்பொறி பறக்குமிரு
ஏற்றமார் செய்ய விழிகள்
கதம்மிகுத் துலகத்தின் கொடுமைகள் அனைத்தையும்
களைந்திடற் குரியபூட் கை
கங்காளனோடு வெங்கான கத்திலே
கதித்தெழுந் தாடும்ஆடல்
வதம்பல புரிந்துகொடும் அரக்கரை அழித்தவின்
ணவர்களுக் கிதம் அளிக்கை
வாய்த்தபே ரன்னைமா காளியைப் பயத்துடன்
பத்திமிகப் போற்று கின்றோம்
பதம்பஞ் சிணாற்செய்து பவளத்தை இதழாக்கிப்
பால்வணப் பற்களோடே
பழம்பெரும் முன்னையின் கழையுறழ் தோளியைப்
பரிந்துமே காக்க என்றே. 07

### கலைமகள்

பாலோடு தேன்கலந் தாலனைய சொல்பொருள்
பதமாய்க் கலந்து புலவர்
பாடிடும் பாடலின் சுவைநயந் திடுகின்ற
பாவைவெண் கமலாசனி
ஞாலமிசை இசைபோக்கி நவையறுத் திடுகம்பன்
நன்னையக் காளிதாசன்
நலமிக்க செந்தமிழ்க் கவிகுமர குருபரன்
நாவினில் அமர்ந்த செல்வி
கோலமிகு வெள்ளாடை வெள்ளணிகள் செபமாலை
வீணையுந் தரித்த அன்னை
குவலயத் தறுபத்து நான்கெனும் கலையெலாம்
குடைநிழற் காக்கும் அரசி
வாலையாய் முன்னையில் வந்தருளி எங்களின்
வாழ்வினுக் கொளி விளக்காய்
வளர்கின்ற மாதேவிக் காகவே வேண்டுவம்
வழுத்தியே காக்க என்றே. 08

---

7. பிழம்பூ-கட்டி, கதம்-கோபம், பூட்கை-உறுதிப்பாடு, வதம்-அழிப்பு, பதம்-(பாதம்) கால்கள்-கழை-மூங்கில்.

8. அனைய - போன்ற, ஞாலம்-உலகம், இசை-புகழ், நவை-குற்றம், குவலயம்-உலகம், வாலை-சிறுமி, வழுத்தி-வணங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமகள்

திருமால் உளம்மகிழ அவர்மார்பி லேதிகழும்
திருவாட்டி எங்களது பெருமாட்டி
சிறுவாயி லேமுறுவல் பெரும்ஆழி ஆம்விழியில்
தெளிவாகும் நற்கருணைச் சீமாட்டி
மருவா தவத்தருக்குப் புவிவாழ்வு வெந்துயராம்
மகிழார்கள் ஆயினுன தருளாட்சி
மருவும் நலத்தருக்கோ அளகா புரிக்கதிபன்
மதிக்கத் தகும்பெருமை அடைவாமே
கருவா தனைக்கெதிராய் அறமாதி செய்வரெனின்
கனகாலம் இன்பினிலே திளைப்பார்கள்
கடலாரும் நஞ்சையுண்டே அமுதார வைத்தவனின்
கனியான முன்னைவளர் எழிலாளை
உருவான செங்கமலத் துறைவாய்! மணங்கனிந்தே
ஒருகால மும்விடுத்து நீங்காமல்
இணையாக நின்றிடவென் றிதமாக வேண்டுகிறோம்
இனியா ளையேபுரந் தருள்வாயே. 09

## தமிழ்த்தாய்

எந்தமிழே! எழிற்றமிழே! ஏற்றமிகு தமிழே!
இன்பருளும் தெய்வதமே! இணையிலிளந் தாயே!
அந்தமுனக் கில்லையென வந்தனைகள் செய்ய
ஆரியத்தோ டருகமர்ந்து சீரிளமை கொண்டாய்
சொந்தமென உன்னடிகள் சூட்டியுளத் தேத்திச்
சுந்தரியே! அஞ்சலியைத் தந்திடுவோம் என்றும்
பந்தமறுத் தின்பமளித் தெங்களினைக் காக்கும்
பராசக்திக் கரணாக நின்றிடுக நீயே. 10

---

09. *அழி-கடல், மருவா-அணையாத, வாதனை-வேதனை, அளகாபுரிக்கு அதிபன்-குபேரன் (அளகை-அலகை எனலுமாம். அலகை-பேய், முனி, (முனி+ஈச்சரம்) முனீச்சரம் முனி வழிபட்டதால் -அலகேசுரம் எனவும் முன்னர்த் தோன்றியது என்னும் பொருளில் முன்னீச்சரம் எனவும் வழங்கும்.*

10. *தெய்வதம்-தெய்வம், ஆரியம்-சம்ஸ்கிருதம், பந்தம்-கட்டு, தளை, அரண்-காப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.செங்கீரைப் பருவம்

பன்னுதற் கின்னிய சொன்னயப் பைந்தமிழின்
பண்ணிசையி லேகுளிர்ந்து
பழமறையி லமைதுதிகள் மணமகிழ் முறுவலொடு
பரிந்துநற் செவிமடுத்துக்
கன்னலது சாற்றினைக் காய்ச்சிப் பதஞ்செய்த
கட்டியின் இனியவான
கவினாரு செவ்விதழ் மலர்த்தியே கேட்பவர்
கனிந்துருக ஒலியெழுப்பி
அன்னையே! உன்னரிய அனிச்சமலர் மேனியால்
அம்புவியி லேதவழ்ந்து
அனைத்திலும் புனிதமாம் கங்கையின் மேலான
அரியவுமிழ் நீர்வழித்துச்
சின்னவுன் வாய்நோவக் கிர்கிரென் றொலிசெய்து
செங்கீரை ஆடியருளே
சிவதலத் துயர்தலம் எனப்பகர் முன்னையாய்!
செங்கீரை ஆடியருளே. 11

ஆற்றும் பூசை நெறிமாறா
அந்தணர் ஆற்றித் துதித்திடவும்
அணைந்தே உன்றன் அடியார்கள்
அருள்தா என்றே அரற்றிடவும்
போற்றிப் புகழ்ந்து பூரித்துப்
புலவோர் பாமழை பொழிந்திடவும்
பூவார் சோலைப் புதுமலராற்
புனைந்தே மாலை சாத்திடவும்
கூற்றைக் குதித்த கூத்தாடி
குதூகலித் துன்னை நோக்கிடவும்
குளிர்ந்துன் திருவாய் திறந்துநீ
குவலய மெல்லாம் மகிழ்வெய்த
ஆற்றின் ஒழுக்கின் மென்மெலென
ஆடுக இனிதே செங்கீரை
ஆதியின் முன்னைப் பெருவாழ்வே!
ஆடுக இனிதே செங்கீரை. 12

---

11. பன்னுதல்-கூறுதல், பழமறை-பழைமையான வேதங்கள், கன்னல்-கரும்பு, கவின்-அழகு, அம்புவி-அழகிய பூமி (அம்-அழகிய), செங்கீரை-தவழும் பொழுது குழந்தை வாயிலிருந்து எழும் 'கிர் கிர்' எனும் செழுமையான குரலொலி.

12. ஆற்றுதல்-செய்தல், நெறி-முறைமை, கூற்று - யமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் இதழ்கொண்ட தாமரை மலரிலே
அமர்ந்தருளும் எம்பி ராட்டி!
அகிலமுடன் அண்டங்கள் சராசரம் யாவுமே
அணைத்துவாழ் வளிக்கும் அன்னை!
பாயருள் வெள்ளத்தி லேதிளைத் திடஅவை
பாலிக்கும் மேன்மை யாட்டி!
பாலகி வடிவுகொண் டரவிந்த மீதிலே
பரிவுடன் இருந்த உன்னைத்
தோயுமன் பெழவந்த இமயத்து ராசனும்
தோகையெனும் மேன்னை யாளும்
துதித்துமே மார்பார அணைத்துநன் மகளென்று
சொந்தமும் கொண்டாடவே
ஆயுமறி வானந்த ரூபிணி! முன்னையாய்
செங்கீரை ஆடியருளே
அமுதவாய் மலர்த்திநீ கிர்கிரென றொலிசெய்து
செங்கீரை ஆடியருளே. 13

சிவனவன் சக்தியையுஞ் சக்திசிவன் தன்னையும்
சிறப்புடன் ஈன்ற பின்னைச்
சிவம்சக்தி இருவரும் உலகுயிர்க் குருத்தருவர்
சிவஞான சித்தி கூற்று
இவையெலாந் தோற்றினும் சிவன்மாணி சக்தியும்
ஏற்றமார் கன்னி யேயாம்
இதுவுமஃ துரைக்கின்ற உண்மையே ஆய்ந்திடின்
ஏற்பதே மறுத்த லில்லை
பவவினை கொண்டுலகிற் கருவிருந் துழலாது
பாலிக்கக் குழவியாகிப்
பாரினில் வந்துதவழ் பாலகி! முன்னையுறை
பத்தருக் கெய்ப்பில வைப்பே!
சிவமெனும் செம்பொருட் குயிரன்ன செல்விநீ
செங்கீரை ஆடியருளே
சிற்றிடைப் பெரியவிழி கரியஒளி மேனியாய்!
செங்கீரை ஆடியருளே. 14

---

*13. சராசரம்-நிற்பனவும் நடப்பனவுமான உயிர்கள், பாலிக்கும்-காத்தருளும், பாலகி-சிறுமி, காப்பவள் எனவும் கொள்ளலாம், தோகை-மயில்(சினையாகு பெயர்) இமவான் என்ற இமயமலை அரசனும் அவன் மனைவியான மேனையும் செய்த தவத்தின் பயனாக அவர்களுக்குப் புதல்வியாக உருக்கொண்டு தாமரை மலரிலே எழுந்தருளினாள் எம்பிராட்டி.*

*14. ஈன்ற பின்னை-பெற்றபின்னர், மாணி-பிரமசாரி, பவவினை-பிறவிக்கான நல்வினை, தீவினை, எய்ப்பில் வைப்பு-தளர்வுறும் காலத்திற்கென்று சேர்த்து வைக்கும் சேமிப்பு, செம்பொருள்-செம்மையான (மேலான) பரம்பொருள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டி னால்வழி பாட்டினால் மறை
பரவலால் ஒலிஎன் றென்றும்
பாய்ந்துமே அருவி வீழ்தல்போல் ஆர
வாரம் மிக்கதாம் முன்னையில்
ஏட்டிதழ்க் கமல வாவியில் இளைய
இன்னறும் வளிவந் துளரலால்
இனிய கந்தமண முறுவ தெப்பொழுதும்
எங்கணும் பரவும் அல்லவோ?
ஈவட்டியே இனிய பாலுடன் நறிய
குன்றினிற் குறவர் தந்ததேன்
குளிர்ந்த பால்தயிரும் இனிய முக்கனியும்
கொண்டு நல்லஅபி டேகங்கள்
ஆட்டுவார் அரிய தொண்டிலே மகிழ்ந்
தாடுகசெங் கீரையே
அவனி எங்குமுன் புகழ்ம ணந்திடநீ
ஆடுகசெங் கீரையே. 15

முகில்மதியில் கயலோடு திலமலர் மாங்கனியும்
முத்தினொடு சிவந்த பவளம்
முழுமையுந் தாங்கியழ கொழுகவே வஞ்சியென
முத்தனைக் கனிய வைக்கும்
அகிலாண்ட ஈசுவரி கௌரிகௌ மாரிஉயர்
ஆதிபரா சத்தி உமையே!
ஆதியும் அந்தமும் இல்லாத சோதியொளிர்
அத்தனுக் கிடம ளித்தாய்
சிகைகொண்ட மயிலால வண்டினம் மலர்களைத்
தேடியே ரீங்கரிக்கச்
சேர்முகில்கள் இடித்துமழை பொழிந்திடச் சீருடன்
சிறந்தவளம் நிறையு முன்னை
சகத்தினிற் றலைமைபெற அமைத்திடும் தேவியே!
செங்கீரை ஆடியருளே
சித்தத்தில் நித்தமொளிர் உத்தமி! நீநன்கு
செங்கீரை ஆடியருளே. 16

---

*15. ஏடு - பூவிதழ், இனிமை+நறும்(இன்னும்)-இனிய நன்மணம், குறவர்-குறிஞ்சிநில வாழுநர், அவனி-பூமி.*

*16. தில மலர்-எட்பூ(திலம்-எள்) மகளிரின் மூக்கினை எட்பூவுக்கு உவமிப்பது புலவர் மரபு, வஞ்சி-ஒரு கொடி (சீந்திற் கொடி) பெண்களின் மெல்லுடலுக்கு உவமை, சிகை-(மயிலின்) கொண்டை, ஆல(ஆடல்)-மயிலின் குரலையும் அதன் ஆடலையும் குறிக்கும், சகம் -பூமி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரமண் டலநடுவில் லலிதமகா நித்யையாய்த்
தண்கலை கள்பதி னாறுடன்
சர்வபரி பூரணியென் றெவ்வெவரும் ஏத்தஒளி
காலுவை ஒவ்வொர் திதிக்கும்
நந்தலில் வெவ்வேறு நவமான பெயர்பெற்று
நற்கலை கள்ஒவ் வொன்றுமே
நாள்தொறும் வளர்ந்துபின் னொடுங்கிநின் றரியவாம்
நாடகம் பயிலு நங்காய்!
புந்தியில் உனைக்கொண்டு வந்திக்க வந்தருள்
புரிகின்ற நன்னெஞ் சினாய்!
பூரணி! புராதனி! கௌமாரி! சங்கரி!
போதமிக் கருளு முன்னைச்
சிந்தெழிற் பதிவாழும் சுந்தரி! சுதந்தரி!
செங்கீரை ஆடி யருளே
சீலமார் பாலகி! ஏலமார் குழலிநீ!
செங்கீரை ஆடி யருளே. 17

கால, குல, நாம, சுத்த மொடு நாத
விந்து, ஞானகலா சிவமான
கருது நவபுவன மெனுமிவைகள் சக்தி
சிவமுடைய கோணம் ஒன்பானும்
சால மிகுதிறனிற் கோலமுற இணையச்
சங்கமித் திடலின் விளைவாகச்
சாற்று முயர்தொழில்கள் மூன்றும் முறையாகச்
செய்கை நிகழ்வ வாம்உணர் வூற
ஆல மொளிர்கண்டற் காதரங் கள்தரும்
அஞ்சொலிள மங்கை நீயன்றோ!
அன்றி உன்துணையொன் றின்றி ஒருசெயலும்
ஆகிடாதெனவும் அறிவோமே
தூல உருக்கொண்டு முன்னை நகர்வதே
ஆடுசெங்கீரை இனிதாயே
சோதி எழில்நங்கை! மாலவனின் தங்கை!
ஆடுசெங்கீரை இனிதாயே.

---

17. **நித்யை**-என்றும் உள்ளவள், **தண்கலைகள்**-குளிர்ந்த (சந்திரனின்) கூறுகள், **நந்தல்**-கெடுதல், **நவமான** -புத்தியில் உள்ளத்தில், **வந்திக்க** - வழிபட, **புராதனி**-பழையவள், **எழில்**- அழகு, **சுந்தரி**-அழகி, **சீலம்**- ஒழுக்கம்.

18. **நவபுவனம்** -ஒன்பது உலகங்கள். இவற்றை நவ வியூகம் எனவும் கூறுவர். (வியூகம்-படைவகுப்பு) "சக்திகோணம் ஐந்துடனே சிவகோணம் நாலும் கூடுவது முத்தொழிலும் உண்டாவதற்குக் காரணம்" என்று வாமகேசுர தந்திரம் குறிப்பதாய் சைவ எல்லப்ப நாவலர், சௌந்தரிய லகரி உரையிலே கூறியுள்ளார். **சங்கமித்தல்**- கூடுதல், **ஆலம்**-விடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார், கூதிர், முன்பனி, பின்பனி, வேனிலொடு
காலைபின் மாலை எனலும்
கருதியே மாதம்ஆண் டூழியுக மென்னலும்
கருத்தி லாஎங் கணக்கு
கார்குழற் கற்றையினைத் தாங்குவஞ் சிக்கொடீ!
காலவா தீதை நீயே
கனிவுமிகு குழவியாய் உனையெண்ணு வோமெனிற்
கடைகெட்ட மூடரன்றோ?
ஆர்ப்பரித் தெழுகின்ற அலைகள்நின்ற பேராழி
அதனில்நாம் பரமாணுவாம்
ஆயினும் பேராசை கொண்டுனைச் சிறுமியாய்
அகத்தினிற் கொண்டு விட்டோம்
சீர்மிகும் செலவிளம் சிறுமையை மறந்துநீ
செங்கீரை ஆடி யருளே
சிவனையே பித்தாக்கும் முன்னையின் செல்வியே!
செங்கீரை ஆடி யருளே. 19

முன்னைப் பதியின் பெருவாழ்வே!
மூத்தோர்க் கெல்லாம் மூத்தவளே!
மூத்த கணபதி மடியேற
முத்தம் இட்டு மகிழ்பவளே!
பின்னைக் குமரன் வரக்கண்டு
பித்தாய் அவனை அணைப்பவளே!
பெரிய சிவனின் பெருமாட்டி!
பிறங்கு மாலுக் கருந்தங்காய்!
உன்னை மகளாய் இமவானும்
உத்தமி மேனையும் பெறும்பேற்றை
உரைத்தற் கெம்மால் எளிதாமோ?
உவமை கடந்த வடிவழகீ!
சின்ன மெய்கொண் டெம்முன்னே
செங்கீ ரைநீ ஆடுகவே
சிவந்த இதழில் அமுதூறச்
செங்கீ ரைநீ ஆடுகவே. 20

---

*19. கார்-மழைக்காலம், கூதிர்-பின்மழைக்காலம், வேனில்-கோடைகாலம், காலவாதீதை-(கால+அதீதம்) காலங்கடந்தவள், பரமாணு(பரமஅணு), அணுவைக் கூற செய்த மிகச்சிறிய கூறு, அகம்-உள்ளம்.*

*20. மால்-விட்டுணு, மெய்-உடல், இதழ்-உதடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.தாலப் பருவம்

பத்துத் தலையும் ஆணவமும்
பாரித் திட்ட இராவணனைப்
பகர்மூன் றுலகிற் கதிபதியைப்
பகழி கொண்டு துளைத்தபிராற்
பித்த னாகப் பிரமகத்தி
பிடித்தே அலைத்த போதினிலே
பக்தியிற் கலைத்த பிராணாயெம்
பரிகாரஞ் செய்தவத் தினனாய்
முத்தி யருளும் முன்னையனை
முன்வந் தேத்தித் தொழுததனால்
முழுதாய் அதன்பிடி தளர்ந்ததுவும்
முழுமையும் உண்மைக் கதையாகும்
அத்தன் அவனின் ஆருயிரே!
அருளே! தாலோ தாலேலோ!
அஞ்சுகக் குதலை மொழியாளே!
அன்பே! தாலோ தாலேலோ! 21

மாலே பரம்பொருள் என்றுரைசெய்
மாபா தகத்தைப் புரிந்ததனால்
மாதே வன்முன் உயர்த்தியகை
மடியா துழன்ற வியாசற்குச்
சால உண்மை தனையுணர்த்திச்
சாபந் தீர்த்த அருளாளன்
சந்நிதி முன்னையில் அவனோடே
சரியா சனங்கொள் தயாபரியே!
ஓல மிட்டுச் சரண்டைவார்
உள்ளத் தொளிரும் ஒளிவிளக்கே!
ஒருமை மனத்தோர்க் குன்ஞானம்
உவந்தே அருளும் உன்னதியே!
காலம் யாவும் நாம்மகிழக்
கனியே! தாலோ தாலேலோ
காட்டும் வதனத் தண்மதியே
கதியே! தாலோ தாலேலோ. 22

---

21. பாரித்தல்-சுமத்தல், பகழி-அம்பு, பிரமகத்தி- அந்தணனான இராவணனைக் கொன்ற பாவத்தின் வடிவான பிரமகத்தி, **இராவணன்** - கைகசி என்ற இயக்கிக்கும் விஸ்ரவசு முனிவருக்கும் மகன், **அத்தன்** -தந்தை (சிவன்) **அஞ்சுகம்**-கிளி, குதலை-விளங்காச் சொல்.

22. சால-மிக தயாபரி-கருணையுடையாள், ஒருமை-மனத்தை ஒருமுகப் படுத்திப் பரம்பொருள் ஒன்றே என்று உணரல். **வதனம்**-முகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேச் சரணார் வடிவழகி
முதிர்ஞா னத்துக் கணநாதன்
முருகார் இளவல் இவர்கட்கு
முறையாய்க் கோயிற் றிருப்பணிகள் என்றும்
முட்டுப் படாவண்ணம்
ஏந்தல் குளக்கோட் டன்என்னும்
இயல்சேர் சோழ மாராசன்
ஏத்திப் போற்றிப் புரிந்தனனால்
அன்றும் முன்னும் இன்றுமினி
அமையும் எதிர்கா லந்தனிலும்
என்றும் புகழோ டிருப்பவளே!
எவர்க்கும் இன்னருள் சுரப்பவளே!
நன்றுன் குழவி நலங்காண்போம்
நங்காய்! தாலோ தாலேலோ
நற்றாய் மேனை உளமகிழ
நலமே! தாலோ தாலேலோ! 23

ஆழியின் நடுவில் முத்தாக
அமைந்த இலங்கை நன்னாட்டில்
அரசன் பராக்ரம பாகுவெனும்
அண்ணல் முன்னைச் சீர்த்தியினை
வாழி அறிந்தே பத்திமிக
வளமார் நிபந்தம் பலசெய்து
மனமும் ஒன்றிட வழிபட்டு
மாட்சி பலவும் பெற்றிட்டான்
கேழில் பரம கருணையினாய்!
கேளிர் எனஎமைக் கொள்பவளே!
கேடில் இகபரச் செல்வமெலாம்
கிடைக்கச் செய்யும் தயாநிதியே!
பாழில் இருந்து காப்பவளே!
பரையே! தாலோ தாலேலோ
பாலகி! எங்கள் மனங்குளிரப்
பரிவாய் தாலோ தாலேலோ. 24

---

23. **கணநாதன்**-விநாயகர், **முருகார்**-அழகுமிக்க, **இளவல்**-இளையோனாகிய முருகன், **ஏந்தல்**-பெருமையிற் சிறந்தவன், **குழவி**-குழந்தை.

24. **ஆழி**-கடல், **அண்ணல்**-பெரியோன், **நிபந்தம்**-இறையிலியாய் வழங்கும்) நிலம் முதலியன, **கேளீர்**-உறவினர். **இகபரம்**-இம்மை, மறுமை, **சீர்த்தி**-சிறப்பு, **கேழில்**-(கேழ்இல்)-ஒப்பிலாத.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழக் கடலின் கரையினிலே
அன்றொரு நாள்நீ அரனுடனே
ஆடல் புரிந்த நிலைகண்டே
அருகில் வந்துனை அகப்படுத்த
ஏழை மீனவன் முயன்றிடநீ
எழிலார் சிலையாய் மாறினையே
எடுத்தே உன்னை அரசர்கரம்
அளிக்க அவரும் நம்பாமல்
ஆழச் சிந்தித் தமைத்தபல
அழகுச் சிலைகள் தம்மிடையே
அசையும் உன்பத அடையாளம்
அந்த மீனவன் கண்டுரைக்க
வாழ அரசன் கோயிலிலே
வைத்த நிதியே! தாலேலோ
வளரும் இளமதி! முன்னையளே!
வாழ்வே! தாலோ தாலேலோ. 25

பொன்றும் செல்வம் வெண்டாது
பொன்றாக் கல்வி விழைவாராம்
புகழ்சேர் அறிஞர்ப் புகலிடமாய்ப்
போற்றும் காஞ்சி மாநகரில்
மன்னும் மறைதேர் நாகேந்த்ர
மாண்பார் குருக்கள் மகனாராம்
மதிசேர் குமாரஸ் வாமிகுரு
மயங்கிக் கலங்க வந்தபிணி
தன்னைப் போக்கி அவர்மூலம்
தகைசால் கோயில் சமைப்பித்தாய்
தகைமை யாளர் வழிவந்தோர்
தாயே! உன்பணிக் காளானார்
கன்னற் கினிமை நலகுசுவைக்
கரும்பே! தாலோ தாலேலோ
கருதித் துதிப்போர்க் கரணாகும்
கண்ணே! தாலோ தாலேலோ. 26

---

*25. அரன்-சிவன்.*

*26. பொன்றும்-அழியும், பொன்றா -அழியாத, விழைவார்-விரும்புவார், மன்னும் நிலையாயுள்ள.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரிற் கறுத்த கருங்குழலும்
கணைவாள் நானும் இருவிழியும்
கவினார் கூனற் பிறைநுதலும்
காற்றுக் கொடியும் மெல்லிடையும்
தேரின் எட்பூ நாசியதும்
திகழுந் தாமரை மலர்முகமும்
திருவார் கொவ்வைக் கனிவாயும்
சீரார் பஞ்சுச் சீறடியும்
பாரில் வந்து முடிசாய்த்துப்
பணியும் வானோர் முடியழுந்தப்
பதைத்தே ஒல்கும் அனநடையும்
பார்க்கப் பார்க்கத் தெவிட்டாவாம்
ஏரார் முன்னைப் பதியுறையும்
எழிலே! தாலோ தாலேலோ
என்பை உருக்கி எமையாளும்
இன்பே! தாலோ தாலேலோ. 27

உத்தம சத்திய நித்தியர் நச்சிட
உடலினிற் பாதியளாய்
ஒத்து சதித்துவம் இத்தரை மக்களுக்[கு]
உணர்த்தும் வித்தகியாய்ப்
பத்தியை வித்தி விளைத்திடு நற்றவர்
பாங்கினில் ஓங்கியுயர்
பாரிய தாகவே வானுற நின்றிடு
பவித்திர நற்றருவாய்
எத்தனை வருணனை அத்தனைக் கும்அரி
தாகிவி ளங்கிடுவாய்
எழில்தரு பொழில்நிறை பழனவ ளம்உறை
இன்பருள் முன்னையளே!
தத்தை எனத்தரு சொற்கு தலைக்கொரு
சாமளை! தாலேலோ
சங்கரன் இங்கித துங்க மணித்திரள்!
தாலோ தாலேலோ. 28

---

27. **கார்**-முகில், **கவின்**-அழகு, **ஒடியும்**-முறியும், **ஒல்கும்**-ஒதுங்கும், **ஏரார்** -(ஏர்+ஆர்) அழகுமிக்க, **எழில்**- எழுச்சி, அழகு, **என்பை**-எலும்பை, **அனநடை**-அன்னம் போன்ற நடை, (அன -இடைக்குறை)
28. **நித்தியர்**-நிலையானவர், என்றும் இருப்பவர்(சிவன்), **நச்சிட** - விரும்பிட, **சதித்துவம்**-(சதி-மனைவி) வாழ்க்கைத் துணைநலம், **வித்தகி**-திறமையாளி, **வித்தி**-விதைத்து, நற்றரு(நன்மை+தரு) நல்லமரம், **பழனம்**-வயல், **இன்னிய** -இனிமையான, **தத்தை**-கிளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரும் செழிப்பும் சேர்ந்துறையும்
சிலாபம் சூழ்ந்த செறிகடலைச்
சேர்ந்தே முயங்கி வெண்முகில்கள்
சினைகொண் டின்பாய்க் கறுத்துமிகப்
பேரும் பின்னர் இடிமின்னிப்
பெரிய மழையைப் பொழிந்தோடிப்
பிறங்கும் மாயவ னாறாகிப்
பேரா தரிக்கம் அடியார்கள்
கூடும் அன்புடன் நீராடக்
கூபங் குளமாய் உருக்கொள்ளும்
குளித்துச் செபஞ்செய் இவர்களுக்குக்
கோயிலில் அமர்ந்தே அருள்பவளே!
காருண் அஞ்சன விழியாளே!
கதிரே! தாலோ தாலேலோ
கண்ணே! முன்னைப் பாவாணர்
கனவே! தாலோ தாலேலோ. 29

மட்டவிழ் மலர்கொடு விட்டுணு வழிபட
மகிழ்ந்தவர்க் காழி அருள்
மாமலை மேருவைச் சாபம் தாகவே
வளைந்திடு மாதேவன்
குட்டி அயன்சிறைப் பட்டிட வைத்திடும்
குமரனின் நற்றாதை
கொஞ்சி மகிழ்ந்திட வஞ்சியின் கொடி எனக்
கூடி உறைபவளே!
விட்டு விடுதலை பெற்றிட முன்னையில்
வேண்டிநிற் பார்களினை
வேதனை செய்பவ வாதனை போக்கிட
மிக்கருள் தருபவளே!
பட்டினும் மென்மைய தாகிய மேனியை!
பரையே! தாலேலோ
பாவவி நாசினி! வதனவி லாசினி!
பரையே! தாலேலோ. 30

---

*29. முயங்கி-கூடி, பேரும்-பெரும், பிறங்கும்-விளங்கும், கூபம்-கிணறு, அஞ்சனம்-கண்களுக்குத் திட்டும் மை.*

*30. மட்டு -தேன், ஆழி-சக்கராயுதம், சாபம்-வில், தாதை-தந்தை, விநாசினி-அழிப்பவள், விலாசினி- அழகுடையாள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.சப்பாணிப் பருவம்

பாரினிற் சிறந்தநற் பழையபதி முன்னையிற்
பாலகி ஆக வந்து
பஞ்சினும் விஞ்சுகுளிர் தஞ்சமுற் றிடுபதம்
படிந்திட முழந்தாளினைச்
சீருற மடித்தெழிற் றொடையதும் மடங்கிடச்
செங்கம்ப ளத்தமர்ந்து
செவ்விதழ்க் கமலநல வதனத்தில் முத்தெனச்
சிறுவியர் துளிசெய்திடக்
காரெனுங் குழற்கற்றை கிரணமாய் நுதல்விழக்
கண்களிற் சுடர் தெறிக்கக்
காதினிற் றோடுகதிர் நிலவுமாய் ஒளிகாலக்
களிமுறவல் காட்டியன்னே!
சாருமிந் திரனாதி தேவருங் களிகொளச்
சப்பாணி கொட்டியருளே
சங்சலம் விஞ்சுலகு கெஞ்சிடத் தஞ்சமெனச்
சப்பாணி கொட்டியருளே. 31

பற்றற்ற பரமர்தம் பற்றினைப் பற்றிடப்
பற்றருள் கோடதாகிப்
பழவினை களில்விழுந் தழுந்தாம லேதொழும்
பத்தருக் கருள்புரிந்து
சிற்பர வியோமமாய்ச் சிற்றம் பலத்திலே
சிவனுடன் கூடியாடிச்
செகதல மனைத்தையும் ஆட்டுவித் திங்கிதம்
செய்கின்ற எம்பிராட்டி!
கற்றதும் கற்பதும் தனையுந்தன் பதியையுங்
கருதிவழி படற்கேயலாற்
காசினியி லேபிற அறிவுறற் கன்றென்று
காட்டிடுந் தெய்வதீபம்!
சிற்றிளங் குழவியாய் எம்முனர் இன்போடு
சப்பாணி கொட்டியருளே
சீர்வளர் முன்னையிற் பேர்வளர் செல்விநீ
சப்பாணி கொட்டியருளே. 32

---

*31. கதிர்-சூரியன்*

*32. கோடு -கொழுகொம்பு, இங்கிதம்-இனிமை, காசினி-உலகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான மயிற்கெழிற் சாயல் பயிற்றிடு
கவின்மிகும் அபிராமி!
கந்த மலர்முகத் தின்னளி தந்திடு
கரிய விழிக்குமரி!
தான மெனக்கிளி இன்மொழி வேண்டிடக்
தயைபுரி சொல்லழகி!
தண்ணிய தடமுறை அன்னமும் வெள்கிடத்
தகுநடைக் குரியாளே!
ஞான மிகுத்திடு மோன தவத்தினர்
நாடுமி ஸம்பிணையே!
தஞ்ச மெனக்கொளும் அங்சுக மேசிறு
பஞ்சடி வஞ்சியளே!
கூனை நிமிர்த்திடு காழியற் கன்னைநீ
கொட்டுக சப்பாணி
குளிர்வள முன்னையில் அருள்தரு நாயகி!
கொட்டுக சப்பாணி. 33

ஊழி முடிவில் வடவைத்தீ
உருத்தெ ழுந்தே அண்டமெலாம்
ஒருசில நொடியில் நீறாக்க
ஓல மிட்டுக் கடல்யாவும்
பாழின் மீது பாய்ந்தோடிப்
பரிநா சத்தை ஆக்கிவிடப்
பரமன் சீற்றத் தோருருவாய்ப்
பயங்கர நாட்டம் பயில்கையிலே
யாழின் இனிய சொல்லுடையாய்!
யாமளை! யாதவற் கிளையாளே!
யமற்கும் யமனாம் சங்கரனின்
யார்க்கும் அடங்கா வெகுளியினை
வீழ வைத்தருள் மெல்லணங்கே!
விரும்பிக் கொட்டுக சப்பாணி
வேயனை தோளி! முன்னையர்நாம்
வேண்டக் கொட்டுக சப்பாணி. 34

---

33. கந்தமலர்-மணமுள்ள மலர்(கந்தம்-மணம்), தடம்-குளம், மோனம்-மௌனம், பிணை-பெண்மான், காழியன்-சீர்காழியில் அவதரித்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். இவரை முருகனின் அவதாரம் எனக் குறிப்பதும் உண்டு. ("வழுதி கூன் நிமிர்த்த பெருமாளே"-திருப்புகழ்)

34. வடவைத்தீ-வடவாமுகாக்கினி, உருத்து -கோபித்து, யாதவன்-யாதவ குலத்தினனான கண்ணபிரான், வெகுளி-கோபம், வேய்-மூங்கில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணினைக் கூச வைத்திடும் ஒளியும்
காண்டிற் கரியதே யாகும்
கணந்தொறும் புதிய வடிவினைக் கொள்ளல்
கண்களுள் அடங்கிட வில்லை
பணங்கொளும் அரவைப் பணிகளாய்ப் பூண்ட
பாதிமெய் பயமிகுவிக்கும்
பாரெலாம் நிறைத்துக் கடந்தெழும் சோதி
பார்த்திடும் தகுதியிங் கில்லை
குணங்குறி யாவும் கடந்தஎம் தாயே!
குழவியாய் எம்முனர் வருக
கோதிலா உன்றன் குளிரெழில் நிலவிற்
குளித்திடல் எம்விழை வாகும்
பிணங்குத லின்றி முன்னையில் வந்து
கொட்டுக சப்பாணி
பேதையர் நாங்கள் உளங்களி கூரக்
கொட்டுக சப்பாணி. 35

குளிர்தரு நறுமலர்ப் பொழில்தரும் பெருமெழில்
குலவிடும் பழனங்கள்
கொழித்திடும் பெருவளம் மிகுநலத் திருதரும்
குவலயத் துயர்முன்னை
வளர்தரும் சிறுமியைக் கயிலையை விடுத்திங்கு
மகிழ்தரும் மகிமையளை
வரைகெழு மகளினை மனோலயத் துடன்மிக
வழிபடப் பரிபவளைத்
தளர்வுறத் தணைத்துநன் னலம்பல தருவதில்
தனக்கிணை ஒருவரில்லாத்
தகைமையிற் பொலிவுறும் தகையளை இமையவர்
தமக்குமுன் னிருப்பவளைக்
குழைவுறும் மனத்துடன் அழைக்குவம் அமுதமே!
கொட்டுக சப்பாணி
கோவலற் கிளையபெண் ணரசியே! மகிழ்வுடன்
கொட்டுக சப்பாணி. 36

---

*35. பணம்-(பாம்பின்), படம், பணிகள்-ஆபரணங்கள், பிணங்கதல்-மாறுபடுதல்.*

*36. இமையவர்-தேவர், கோவலன்-கண்ணபிரான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளற் பசுக்கள் பால் சொரிய
வளர்ந்த தெங்கிள நீர்நல்க
வனப்பார் வயல்கள் நெல்மணியை
மலைபோற் குவிக்க எந்நாளும்
தள்ளா விளையுள், தக்கார்கள்,
தாழ்வில் லாப்பெருஞ் செல்வருமாய்த்
தழைக்கக் கடைக்கண் சாத்தியருள்
தயாநிதி! முன்னீச் சரத்தாளே!
கொள்ளைநின் னழகைத் தம்விழியாற்
கொள்ளக் கூடும் அடியர்குழாம்
கூடும் அன்பாற் கூத்தாடிக்
குளறி உரோமாஞ் சலிகொள்ள
விள்ளற் கரிய இளமானே!
விழைந்து கொட்டுக சப்பாணி
மேலாம் மறைகள் துதிபாட
விளங்கிக் கொட்டுக சப்பாணி. 37

செருவில் அசுரன் சிரசு விழவே
செறுத்த மகிட மர்த்தனி!
சிறுமை பலவும் அழிய வகைசெய்
சிவனுக் குரிய பத்தினி!
கருவை உறுதல் குழவி பெறுதல்
கடந்த விமலி சமரிநீ
கடைக்க ணருளிற் படைத்தும் அளித்தும்
களிக்கும் அமிர்த வர்ஷனி!
புருவ நடுவில் விழியை உடைய
புயங்கன் அடியர்க் கரணும்நீ
புதுமை பழைமை இளமை முதுமை
புகுதற் கரிய அரணும்நீ
சருவ புவன அரசி! பரிவை
அருளிக் கொட்டுக சப்பாணி
சகல அவலம் முனையில் அகல
ஜனனி! கொட்டுக சப்பாணி. 38

---

*37. குழாம்-கூட்டம், விள்ளல்-எடுத்துரைத்தல்.*

*38. செரு -போர், மர்த்தனி-வதம் செய்தவள், மகிடன்-எருமை முக அசுரன், (மகிடம்-எருமை) விமலி-மலங்களற்றவன், சமரி-துர்க்கை, அமிர்தவர்ஷனி-அமிர்தம் பொழிபவள், (வர்ஷம்-பொழிவு), புயங்கள்-சிவன், சருவ -(சர்வ) அனைத்தும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பிலாப் பெருமைகொள் முன்னீர் சரத்தினில்
வயங்குமா மண்டபத்தில்
மாபெரிய கலைவிழா இன்றதன் உச்சமாய்
மகிழ்நடனம் ஒன்றாமதில்
நரம்பிசைக் கருவிக்கு நாயகம் எனத்தகும்
நல்வீணை வாணிகொள்ள
நந்திமத் தளத்தினை முழக்கிட நாரணன்
வேய்ங்குழல் இசைக்கவேதா
அரம்பையோ டுருப்பசி மேனகைதி லோத்தமை
ஆடற்கு நட்டுவாங்கம்
இயற்றிட நாரதர் தும்புரு கந்தருவர்
இன்னிசைப் பதமிசைக்கச்
சரிந்துதலை அசைத்து நடம்சுவைத் துமேகுழவி
சப்பாணி கொட்டியருளே
சாற்றிரிய ஆற்றுலுறை மாற்றலர்க் கிடியேறு!
சப்பாணி கொட்டியருளே. 39

பாங்கரும் முன்னைப் பதியினிலே
பரன்பரை மகோற்சவக் கொடியேற்றம்
பரவசம் தொடர்ந்திரு பத்தேழ்நாள்
பழம்பெரும் அடியர்க்குக் கொண்டாட்டம்
தீங்குள் கொடுமைகள் பாதகங்கள்
செய்பவர் கட்கினித் திண்டாட்டம்
சேரிம்மைப் பயன்களை வேண்டுபவர்
தேவியின் அருளுக்கு மன்றாட்டம்
ஓங்கி எழும்பத்தி வெறியானார்
உடல்வளைத் தாடும்நற் கூத்தாட்டம்
உணர்வு மிகுந்தெழப் போற்றிசையால்
உருகி இசைப்பவர் பெருங்கூட்டம்
தேங்கிடா தலையெறி சனக்கூட்டம்
தேர்ந்துநீ கொட்டுக சப்பாணி
சிறுபதம் மடித்திருந் தம்மே! நீ
சீர்தரக் கொட்டுக சப்பாணி. 40

---

*39. வயங்கும்-விளங்கும், மாற்றலர்-பகைவர்.*

*40. பாங்கரும் - சிறப்புமிக்க*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. முத்தப் பருவம்

கத்திக் கொழிக்கும் ஆழ்கடலிற்
களித்துத் திரிந்த நற்சிப்பி
கருவா யிருந்து வயிறுளைந்து
கவினார் ஒளியிற் றிளைக்குமொரு
முத்தை ஈனச் சுழியோடு
முயன்று பெற்ற அம்முத்தும்
மும்மத வேழ முகத்துமிக
முதிர்ந்த கொம்பிற் பெறுமுத்தும்
நத்தும் மூங்கிலில் விளைமுத்தும்
நல்லன் எனினும் நங்களது
நங்கை வடிவாம் பிகையுன்றன்
நகைமுத் தத்திற் கிணையாமோ?
சித்தம் களிவெளி கொள்ளஅருட்
செல்வி! முத்தம் தருகவே
சீரிய பவளச் செப்பிதழால்
தேவி! முத்தம் தருகவே. 41

எழிலி னிலகு தரள எயிறும் எமது தமிழொத் திலகிடும்
இனிய அரிய மகிமை மிகவும் இழைக்கும் கொவ்வையின் அழகதும்
வழியும் அமுத உமிழ்நீர் கமழும் மணமும் சுவையும் இதழுமென்
றிவையும் மருவி அருவி எனவே எமதுள் ளமதிற் பெருகிடச்
சுழியும் கதுப்பிற் கனியு மழகிற் சுருண்டு மயங்கும் மதுகரம்
சுகங்கொள் வதென அகங்கொள் மகிழ்விற் செகத்தை மறக்கும் மறப்பதும்
ஒழியப் பிறிதொன் றறிவ திலதெம் அழகி! தருக முத்தமே
உயிரி னிலகிப் பயிலும் முனையின் ஒளியே! தருக முத்தமே. 42

---

*41.* மும்மதம்-கன்னமதம், கபோதமதம், பீஜமதம் ஆகிய மும்மதங்கள், வேழம்-யானை, நத்தும்-விரும்பும் முத்து, முத்தம் என்பன முத்தையும், முத்தத்தையும் (முகர்தல், கொஞ்சுதல்) குறிக்கும்.

*42.* தரளம்-முத்து, இலகு -இலக்கு(ம்) எயிறு -பல், இழைக்கும் - ஆக்கும், மருவி-கூடி, சுழியும்-(கன்னத்தில்விழும்) அழகிச் சுழிகளும், மதுகரம்-வண்டு, முன்னையின் என்பது -முனையின் எனத் தொகுத்தல் விகாரம் பெற்றது. இனிவரும் இடங்களிலும் இவ்வாறே கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிப் பனிமலை மீதினிலே
வெள்ளை நீற்றன் மெய்புளகம்
மேவத் தழுவி அவனுக்கு
மேலாம் முத்தும் ஈபவளே!
துள்ளித் திரியும் வேழமுகன்
தூங்கும் கரத்தான் தனையென்றுந்
தள்ளற் கரிய பாசத்தால்
தழுவி முத்தம் தருபவளே!
கள்ளார் கமலத் தடமான
கவினார் சரவணம் சென்றங்கே
கந்த பாலற் கறுமுகமும்
களிக்க முத்தம் அருள்பவளே!
எள்ளல் வேண்டா முன்னையராம்
எமக்கு முத்தம் தருகவே
ஏழை யேமென் றிரங்கியெமக்
கினிதாய் முத்தம் தருகவே. 43

போர்முகில் வந்து திரண்டுருண் டேயிருள்
போர்த்திடு போதினிலும்
புன்மைகள் மேலெழுந் திழிவுக ளுள்ளே
புதைபடு போதினிலும்
சீர்மிகும் இந்தும காகடல் மத்தியிற்
றிகழ்ந்திடும் இலங்கையிலே
பேர்பெற நின்று பிறங்கிடு முன்னையின்
பேரும்பெயர் நாயகியே!
பேணிடு பைரவி! கௌரி! கௌமாரி!
பிஞ்ஞகன் பங்கினளே!
மூர்த்தி கரம்மிகு மாலவன் பின்னையே!
முத்தம் தந்தருளே
முத்துக் குமரனின் பத்திக் குரியாய்!
முத்தம் தந்தருளே. 44

---

*43. புளகம்-மயிர்க்கூச்சு (உரோமாஞ்சலி), கள்-தேன்.*

*44. புன்மைகள்-இழிவுகள், பிஞ்ஞகன்-சடாமுடிதரித்தவன்(சிவன்), பின்னையள்-தங்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சு லாவி வளம்புல நல்கும்
மரக தமணித் தீவினைச் சூழ்ந்து
மகத்து வம்மிக்க மாகடல் இந்து
மணிகள் கொண்டு தரைமிசைச் சேர்க்கும்
பஞ்சு மெல்லாடிப் பாவையர் கூடிப்
பாடி ஆடிப் பரவசம் கொள்வார்
பகர்சி லாபத்தின் ஆழிமுத் தீனும்
பளிச்சி டும்அவை அணிகளில் ஏறும்
தஞ்சம் என்றுனை நாடிடும் தொண்டர்
தாழ்வி லாப்பெரும் பேறடை வார்கள்
தண்ண ளிக்குயர் லட்சியம் ஆவாய்
தாய்எ மக்குநீ சேயுமே ஆவாய்
விஞ்சும் அன்புடன் வீற்றிருந் தோநாம்
மேன்மை பெற்றிட முத்தமருளே
விழவு பற்பல வாற்பொலி முன்னை
மேவி னாயெமக்கு முத்தமருளே. 45

புண்ணி யம்முன்பு செய்தவரும்
புரையில் குணத்திற் பொலிவாரும்
போற்றி உன்னடி பிடிப்பாரும்
பொருந்த உன்பணி செய்வாரும்
பண்ணிற் பாடிப் புகழ்வாரும்
பாரில் விழுந்து பணிவாரும்
பத்தி மிகவே வீதியினிற்
பலகால் உருண்டு வருவாரும்
நண்ணிக் காவடி எடுப்பாரும்
நதிபோல் முன்னை வருகின்றார்
நாகம் அணிவோன் நாயகியே!
நங்கள் உயிருள் உயிரேநீ
உண்ணீர் உண்ணீர் என்றழைத்துன்
உவகை முத்தம் அருள்கவே
ஓதும் வேதத் துட்பொருளே!
உனது முத்தம் அருள்கவே. 46

---

*45. மஞ்சு -முகில், மகத்துவம்-மேன்மை, பாவையர்-பாவை போலும் அழகிய பெண்கள், தண்ணளி-இரக்கம், கருணை, விழவு -விழாக்கள்.*

*46. புரை-குற்றம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தி இன்றேற் சிவமில்லைத்
தத்துவம் இதனில் வேறில்லை
சங்கரன் திரிபுரம் எரித்துதவும்
தகவில் கூற்றினை மாய்த்ததுவும்
மத்தம் மதம்மிகு யானையினை
மடுத்தே உரித்துப் போர்த்துதவும்
மாலும் பிரமனும் காண வொணா
மகத்துவ சோதியாய் எழுந்ததுவும்
அத்தனைப் பிரியா தவன்பாகம்
அமர்ந்தவுன் திருவிளை யாடல்களே
அக்கினி யுடனே சூடொன்றி
அகலா தமைந்தவுன் ஆற்றல்களே
உத்தமி மகிடனின் மர்த்தனியே!
ஒருகால் முத்தம் தருகவே!
உன்னத முன்னையில் ஓங்கியொளிர்
ஒளியே! முத்தம் தருகவே. 47

பாலா என்றும் பூரணி என்றும்
பவநா சினிஎன்றும்
பற்பல நாமம் பற்பல் வடிவம்
பாங்காய்க் கொண்டி டுவாய்
மாலா கிப்புவி மாயையில ஆழ்வார்
மயக்கம் போக்கிடுவாய்
மதிவலி யாலுறும் ஆணவம் அழித்து
மாண்பினில் வைத்திடுவாய்
"காலா உன்னைக் காற்றூசாகக்
கருதுவம்" என்பாரின்
கருத்தினிற் குறுதி நல்கிடும் வலிய
காலாந் தகியாவாய்
ஏலார் குழலி முன்னைய ளேமெல்
லியலே! முத்தருள்க.
இசைவாய் இருந்தெம் இன்னல் களைஏந்
திழையே! முத்தருள்க. 48

---

47. மத்தம் -களிப்பு (மதம்)

48. மாலாகி-மயக்கம் கொண்டு, காலாந்தகி (கால அந்தகி)-யமனுக்கும் யமனானவள், ஏலார்-(ஏலம் ஆர்)-மணம் ஊட்டப்பட்ட, குழலி-கூந்தலை உடையவள், ஏந்திழை- ஆபரணம் தரித்தவள், (வினைத் தொகைப்புற்றத்துப் பிறந்த அன்மொழித் தொகை), மெல்லியல்-மென்மையான இயல்பினள் (பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயில்லைத் தந்தை யில்லைத் தருஞ்சுற்றஞ் சூழவில்லைத்
தயவாய் நின்றே
தண்ணளிசெய் துதவநல் லரசில்லைத் தலைவரிலைத்
தக்கார் இல்லைப்
பாயுவிழி நீர்துடைத்துப் பரிவுசெய் ஒருவரிலாப்
பாவி என்போல
பதறிநெருப் பிடைநின்று துடிக்கின்ற பலபேரிப்
பாரில் உள்ளார்
பேயாகி நடைப்பிணமாய்ப் பித்துர்களாய்த் திரிவோரைப்
பேணிக் காக்கப்
பெருமுன்னீச் சரமமர்ந்த பெண்ணரசி உனையன்றிப்
பெரியர் யாரோ?
தாயான நீயுனது தயாவினைக்காட் டறிகுறியாய்த்
தருக முத்தே
தந்தெம்மைத் தழுவிவிழி நீர்துடைத்து முன்னையினிற்
றருக முத்தே. 49

பாலே! தேனே! கனியே கரும்பின்
பாகே! கற்கண்டே!
பரவிநின் றுயிரினுள் உயிராய் எம்மைப்
பாலித் திடுமயிலே!
காலே தீயே புவியே வெளியே
கசிநற் றண்ணீரே
காணும் இவையுன் னுடைமை எனவே
கருதித் துதிக்கின்றோம்
சேலேர் கண்ணி! சிவையே! உமையே!
சிறந்திடு சிற்பரையே!
சிம்மத் தூர்ந்தே சிறுமை துடைக்கும்
சின்மய முன்னையளே!
மேலே ஒருவர் இல்லா முதலே!
முத்தம் தந்தருளே
மின்னல் இடைச்சி! கன்னல் மொழிச்சி!
முத்தம் தந்தருளே. 50

---

*49. தயா -தயவு*

*50. சேலேர்-சேல்ஏர், (சேல்+ஏர்) மீனைப் போலும் அழகிய, சேல்-ஒருவகை மீன், ஏர்-அழகிய சின்மயம்-(சித்+மயம்) ஞானமயம், இடைச்சி-இடையை உடையவளே! கால்-காற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௬. வாரானைப் பருவம்

நனையா விழியும் உன்னாமம்
நவிலா நாவும் நின்பாத
நளினம் பணியாக் கல்மனமும்
நாயேன் உடையேன் ஆயிடினும்
தினையி னளவு நலம்பிறராற்
செய்யப் பெற்ற பெரியோர்கள்
தேர்ந்தே அதனை உளங்கொண்டு
சிறிதாம் என்று மறவாதே
பனையின் அளவாய்க் கொள்வதுபோற்
பரையே! என்முற் பிறவிகளிற்
பத்தி சிறிது செய்தேனேற்
பாலித் திடஎன் முன்வருக
அனையே! வருகஅன் பே!வருக
அழகே! வருக வருகவே
அரணே! வருக முன்னைவளர்
அமுதே! வருக வருகவே. 51

உததி அனைய பிறவி தொடர
உலகில் அலைவை அடைவதோ?
உயிர்கள் வினைகள் பெருக இழிவுற்
றுலைதல் மிகவும் உறுவதோ?
பதவி பெருமை தலைமை எனவே
பரவும் இருளில் உழல்வதோ?
பகைமை மடைமை சிறுமை வறுமை
படர மலைவை அடைவதோ?
நிதமும் இவைகள் நினையும் அறிஞர்
நினைவில் உலவும் மகதியே!
நெடிய கொடிய இழிவு தொலைய
நிதமுன் னையினை அடைபவர்
கதியை அருளப் பெரிது வருக
கடையர் எமையுன் உடைமை யாய்க்
கருதிக் கடிது வருக வருக
கனியே! வருக வருகவே. 52

---

*51. நளினம்-தாமரை, அனையே-அன்னையே என்பதன் தொகுத்தல் விகாரம்.*

*52. உததி-சமுத்திரம், மகதி-பார்வதி, கடிது -விரைந்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பவள மேனியில் வெண்ணீறு சண்ணித்துத்
திகழும் மேனி
சிறியமதி கங்கையினைத் தரித்தசிவன் பக்கலிற்
செவ்வே ளோடு
அம்பொன்னின் அணையிலமர்ந் தகிலமெலாங் காக்கின்ற
அருளின் செல்வி!
ஆலயகண் டாமணியும் அந்தணரின் மறையொலியும்
அழைக்க வந்தே
"எம்பெருமான், பெருமாட்டி, குகா"என் றேத்த
இணைவார் தம்மை
எக்காலும் அவர்களினைக் கைவிடா திருக்குமோர்
எழிலார் முன்னை
எம்பொன்னே! நன்மணியே! முத்தே! எங்கள்
இதயக் கோயில்
எழுந்தருள நீவருக வருக அன்னே!
இனிது வருகவே. 53

அணுமுதல் இமயம் அனைத்திலும் உள்நின்
றருளுவை அவற்றினுக் கப்பால்
ஆகுவை உன்னை அகத்தினிற் கொள்ள
ஆகுமோ? அடியவர்க் கல்லால்
மணமிகு முல்லை சண்பகம் கமலம் மருக்கொழுந்
திணைமலர்த் தொடையாய்!
மதிவலர் தங்கள் திறத்தினிற் காணா
மாபெரும் ஒளிவளர் சுடரே!
உணஉணத் தெவிட்டா அமிர்தமே! உன்றன்
உவப்புறு முறுவலைக் காண
ஓடியே முன்னைவந் துள்ளனம் தாயேம்
ஒரேஒரு முறையதைக் காட்ட
அணங்குகொள் புவியில் அறிவொளி ஏற்ற
அம்மையே! வருகநீ வருக
ஆடல்வல் லானின் ஆகத்தினிற் பாகம்
அமைந்தனை! வருகநீ வருக. 54

---

*53. சண்ணித்தல்-பூசுதல், செல்வேள்-முருகன், சிவன், உமை, கந்தன் மூவரும் கூடி அமர்ந்தருளும் மூர்த்தம் சோமாஸ்கந்த மூர்த்தம், முன்னீச்சரத்தில் மகோற்சவங்களிலே சோமாஸ்கந்த மூர்த்தியும், சந்திரசேகர மூர்த்தியும் (சந்திரனைச் சடையில் தரித்த மூர்த்தமும்) எழுந்தருளுவதும் பூசைபெறுவதும் வழக்கம்.*

*54. அணங்கு -மயக்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னைத் தீயில் உருக்கிமிகப்
புடம்போட் டதனிலுங் காணாத
பொன்னே! பூத்த புதுமலராய்ப்
பொலியும் முகார விந்தமுடன்
கன்னிப் பெண்ணாய் நினைக்காணக்
கருதிய சிவனும் பித்தானான்
கண்ணிற் காணச் சிறுதுரும்பாய்க்
காட்டிய உன்றன் பேராற்றல்
உன்னாத் தீயும் பெருங்காற்றும்
உன்னுடன் பொருது தோற்றனவே
உடனங் கிருந்த தேவர்களும்
உன்றன் மகிமையை அன்றுணர்ந்தார்
அன்னே! இறைஞ்சிப் பணிகின்றோம்
அணித்தாய் எம்முன் வந்தருளே
என்னே! முன்னையர் பெரும் பேறென்[று]
எவரும் வியக்க வந்தருளே. 55

மூடிருளாம் அமாவாசை எனக்கொள் நாளை
முற்றுமுன் நினைவிலபி ராமிப்பட்டர்
முழுநிலா நாளென்றார் மன்னன் கேட்டு
முற்றியபித் திதுவென்றே முடிவு செய்யத்
தோடினது பேரொளியை மதியாய்க் காட்டித்
தொண்டரைநீ காத்திட்டாய் மடைமை ஒன்றாய்த்
தொக்கமூ டன்நாவில் நாமந் தீட்டிப்
தொல்லுலகிற் கவிக்கோமான் ஆக்கி வைத்தாய்
கூடியுன தடிபரவி நின்றார் தம்முட்
குலவிடுமிம் மைப்பெருமை கூடார் யாரே?
கோலஞ்செய் குளிர்வதனக் கொடியே! தேனிற்
குழைந்தெடுத்த கனியமுதச் சுவையே! நின்னைப்
பாடியருள் நாடியினி தாடி ஒன்றாய்க்
கூடும்எமை நாடிநீ வருகஇன்றே
பரவசத்தில் ஆழ்ந்திடநீ வருக முன்னைப்
பாலகியே! ஓடிவந் தருள்க நன்கே. 56

---

55. *முகாரவிந்தம்-(முக+அரவிந்தம்) முகமாகிய தாமரை. "சக்தியின் ஆற்றல் அறியாது அவளை மதியாத தேவர்களின் முன்பு சிறுதுரும் பாய்த் தோற்றியருளி, தன்னை அழிக்க முடியுமானால் அழிக்க என அறை கூவ. வாயுவும் அக்கினியும் முயன்று தோற்றபின் சக்தியானவள் தன்னுடைய பேருருவினை அவர்களுக்குக் காட்டியருளினாள்" என்பர்., இறைஞ்சுதல்-வணங்குதல்.*

56. *அம்பாள் தன் நாமத்தினை அவனது நாவிலே தீட்டியதால் கவிச் சக்கரவர்த்தியானவன் காளிதாசன் என்பது கதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னத் தூவியில் மென்மையவாய்
அனிச்ச மலரினும் நொய்ம்மையவாய்
அமைந்த நலமிகு தாளிணையும்
அரவிந் தம்எனும் நகைமுகமும்
சின்னக் காந்தட் சிறுவிரலும்
செழித்த பதுமத் தங்கையும்
சீரார் பூங்கொடி மேலுலவும்
செறிந்த கூந்தற் காடதுவும்
என்றுங் கருணை நிறைவிழியும்
இசைபோல் இசைக்கும் இன்மொழியும்
எங்கட் கென்றே கொண்டு வரும்
இளைய பிள்ளாய்! முன்னையளே!
ஒன்றி உன்னை ஓவியமாய்
உளத்த்தில் எழுத வந்தருளே
ஓசை ஒலியெல் லாமானாய்!
ஒருகால் எம்முன் வந்தருளே. 57

தத்துப் பித்தென அடிவைத்துத்
தரையிற் குழந்தைகள் நடத்தல்போல்
தாயே! நீயும் அசைந்துவரத்
தமியேம் செய்த தவம்என்னே!
முத்தாய் முளைகொள் பல்லழகும்
முறுவல் விளையும் இதழழகும்
மொய்க்கும் வண்டினை எய்க்குமொரு
மோகனக் குவளை விழியழகும்
பித்தங் கொளச்செயும் நுதலழகும்
பெட்பார் முழுமதி முகத்தழகும்
பெரிதாய் வளர்ந்த நறுங்கூந்தற்
பின்னற் சடையின் மின்னழகும்
நத்திக் கிறங்க எமைவைக்க
நல்லாய்! எம்முன் வந்தருளே.
நாடிப் பணிவார் நிறைமுன்னை
நங்காய்! எம்முன் வந்தருளே. 58

---

57. தூவி-சிறகு, தாளினை-இரு திருப்பாதங்கள், பதுமம்-தாமரை, காந்தள்- கார்த்திகைப்பூ.

58. தமியேம்-தனித்தவரான(ஆதாரமற்றவரான) நாம், நுதல்-நெற்றி, கிறங்கல்-தலை சுற்றி மயக்கம் உண்டாதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசக் கடலிற் சிக்குண்டு
பவத்தனை இறுக்க அலைப்புண்டு
பாரில் தாயின் வயிற்றினிலே
பத்துத் திங்கள் சிறையுண்டு
நீச மாந்தர் பிறத்தல்போல்
நீயுதித் தாயோ? இலைமேனை
நேரில் தவத்திற் கிரங்கியெழில்
நிறைந்த முளரியில் வந்திருந்தாய்
தாசன் இமயனும் அவளு முனைத்
தங்களின் உயிராய்க் கொண்டதனால்
தரையிற் குழவியைப் போல்வளர்ந்தாய்
தாய்க்கே உரிய பாசத்தால்
நேசத் தோடே அவள்தருபால்
நீயுண் டிடவே வந்தருளே
நிசமாய் முன்னையர் வேண்டுகின்றோம்
நிர்மலி யே! நீ வந்தருளே. 59

வருகுவை என்றுன் வழிதனில் விழிகள்
வைத்தவை பூத்தன மாலின்
மனமலர் மலர்த்தும் மாண்புடைத் தங்காய்!
மலைமக ளாய்உதித் தவளே!
உருகுமெம் முள்ளம் உனைநினை போதில்
ஒருகணம் பிரிந்திட லாற்றோம்
ஒளிக்கதிர் தெறிக்கும் உன்விழிப் பார்வை
ஒன்றுக்கே அலந்திடு கின்றோம்
அருமையோ டுரிமை அளவிலா அன்பால்
அழைக்குவம் அலட்சியம் இனுமேன்?
அசைகரு முகில்கள் மழைக்குறி காட்ட
ஆடிடும் மயில்கள்போ லானோம்
பெருமைசேர் முன்னைப் பதியினர் நாங்கள்
பெண்ணுனைக் காணவந் தருளே
பேதையர் எங்கள் பித்தினைப் போக்கப்
பேணியே விரைந்துவந் தருளே. 60

---

*59. திங்கள்-மாதம், நீசமாந்தர்-இழிவான மக்கள், நேரில்-(நேர்+இல்) ஒப்பில்லாத, தாசன்-அடியவன்.*

*60. அலந்திடுதல்-வாடிவருந்துதல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. அம்புலிப் பருவம்

தாமரை மொட்டுநடு மலர்ந்தவெண் தாமரை
தகுமென்ன வான்தடத்தில்
தாரகைக் கணத்தினிடை எழில்பெற் றிலங்குமிகு
தண்ணளி நிறைவெண்மதி
போமுனது வழியினிற் பூவிலும் மென்மையொடு
பொலிந்திடுங் குழவிபலரைப்
போற்றிடும் யாழ்குழலின் இனியவிசை தோற்றிடப்
புறங்காண் வல்லபலரைக்
காமலர்கள் என்னநீ கண்டுகளி கொண்டதைக்
கருத்திலே வைத்துரைப்பாய்
காருலவு முன்னையிற் காணுமிவ் வழகினுக்
கழகிபோற் கண்டதுண்டோ?
காமமுரை யாதுண்மை கூறியவள் பக்கலிற்
களித்தாட ஓடி வாவே
கந்தரக் கடுவரிற் பந்தமுறு சுதந்தரி
களிக்கநீ ஓடிவாவே. 61

காதலர் வாழ்வினிற் களிப்பருள மண்ணினிற்
கதிரொளி வீசுமதியே!
காலாதி காலமாய்க் கவிவாணர் பாவினிற்
கருவாகி யுள்ளமதியே!
சீதளக் குளிர்மையாற் செகமெங்கும் இன்பினிற்
றிளைத்திடச் செய்யுமதியே!
சிவபிரான் முடிமீது திகழ்கின்ற தவத்தினைச்
செய்ததால் வாழு மதியே!
மோதிவரு கடலலைகள் அருச்சிக்க நின்றவை
முழுவெள்ளி யாக்குமதியே!
மோகனப் பேரெழிலி முன்னைப் பதியினாள்
முகமலர வைக்கவேண்டி
ஆதரத் தோடன்னை மேனைமையாள் அழைக்கின்றாள்
அம்புலி! ஆட வாவே
அரியபா லன்னமதை அவளோடு பகிரலாம்
அம்புலி ஆட வாவே. 62

---

61. தாரகை-நட்சத்திரம், தோற்றிட -தோல்வி அடைய, கா -பூஞ்சோலை, காமம்-பக்கச் சார்பு, கந்தரம்-கழுத்து, கடுவர்-நஞ்சினர் (கடு -நஞ்சு, ஆலகால விடத்தை அருந்தியவர்.)

62. சீதளம் -குளிர்மை, எழிலி-அழகுடையாள் (அம்மை), ஆதரம்- அன்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் வுலகினுக் கன்னமிட் டளித்தருளும்
அன்னபூ ரணியென்பதோர்
அருத்தமிகும் உண்மையை அறிந்துளோம் ஆதலால்
அதிசயித் திடுகின்றனம்
அன்னையென இமவானின் பாரியெனு மேனையாள்
அமையஅவள் மடியின்மீதில்
அழகாய் அமர்ந்துளாள் அடஞ்செயும் பிள்ளையாய்
அன்னையளி பாற்சோற்றினைத்
தன்னரிய வாயினுள் ஏற்காது தள்ளிமிகு
தாரகை நிறைந்தவானில்
தண்ணொளி இறைத்துவரு வெண்மதீ! உனையின்று
தன்னுடன் ஆடவரவே
உன்னியே விழிநீரை உகுக்கிறான் முன்னையாள்
அம்புலி ஆட வாவே
இவளினைப் போலுனக் கொருதோழி கிட்டுமோ?
அம்புலி ஆட வாவே. 63

பாலாழி மீதன்று பெற்றவமு தத்திலொரு
பருத்துளி நீயுமன்றோ?
பாலகி இவளின்முன் னவன் கடைந் ததுவென்று
பகருண்மை அறிவையன்றோ?
காலனின் காலனாம் கறைகண்டன் அமுதோடு
கடுவிடம் எழுந்தகாலை
கடிததனை உருட்டியே உண்டிருக் காவிடிற்
காண்டிடற் கின்றிருப்பையோ?
சாலவே இவையாவும் மீளநீ நினைவையேற்
சட்டென்று வருதல்வேண்டும்
சகமெலாம் ஒளிசெய்து நீபெறும் புகழெலாம்
சங்கரியொ டிணைந்தாடலின்
சீலமோ டொப்பிடிற் சிறியநீர்க் குமிழியாம்
சிறியமதி! ஆடவாவே
சம்புவுக் கினியமுன் னையளையேய்க் காதுமே
சந்திரா! ஆட வாவே. 64

---

63. பாரி-மனைவி, அடஞ்செய்தல்-பிடிவாதம் பிடித்தல்,
உகுத்தல்-சிந்துதல்.

64. பரு-சிறிய பருவின்(குரு) அளவான, முன்னவன்-தமையன்(திருமால்),
கறைகண்டன்-நஞ்சுக்கறை பொருந்திய கழுத்தினன் (சிவன்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னவர் அறியொணா முன்னவன் முன்னையர்
முத்திக்கு வித்தானவன்
மூவர்க்கும் அரியவன் தேவர்க்கும் தெரிகிலன்
முழுமுதற் கடவுளென்றும்
தன்னிடப் பாகத்தில் மன்னிட வைத்திட்ட
தயாபரி சிறுமதலையாய்த்
தன்னையே ஒடுக்கிவந் திம்முன்னை உறைவதால்
தன்னிலை மறந்தாளென
உன்னினை போலும்நீ ஒளித்துவிளை யாடலால்
உனைப்பெரியன் என்பைபோலும்
ஒருகணம் இவள்பெருமை உனதுளத் தெண்ணிடில்
ஓடிநீ வந்திடாயோ?
அன்னையிவள் சீற்றத்திற் காளாகி மாளாமல்
அம்புலி ஆடவாவே
ஆனந்த ரூபிணி அனந்தகுண சோபினியொ
டம்புலி ஆடவாவே. 65

நல்லரைக் காக்கவும் தீயவரை மாய்க்கவும்
நல்லவருள் கொண்டுபுவியில்
நவியனைய கோசலை தயரதன் தவத்தினால்
நாரணன் இராமனாகிச்
சொல்லரிய அழகோடு வளர்கின்ற காலையிற்
சோதியுறு வானில்வந்த
சுடராகும் உன்னையொரு தோழனாய்ப் பெறஎண்ணிச்
சோறுண்ண மறுத்தபோதில்
வல்லனாம் சுமந்திரன் கண்ணாடி தன்னிலுன்
வடிவினைக் காட்டமகிழ்ந்தான்
வள்ளலவன் தங்கையாம் எள்ளலறு முன்னையாள்
மதியூகி ஏய்த்தலரிதாம்
அல்லிடை ஒளிதரல் போலஅவள் முகமொளிர
அம்புலி! ஆடவாவே
அவளிடை வருதலொன் றன்றிவழி வேறில்லை
அம்புலி ஆடவாவே. 66

---

65. மதலை-குழந்தை, அனந்த குண சோபினி-முடிவில்லாத குணங்களாலே ஒளிர்பவள் (அம்மை)

66. நவி-(நவ்வி என்பதன் தொகுத்தல் விகாரம்) பெண்மான், **எள்ளலறு**-(எள்ளல்+அறு) பரிகசித்திற்கு இடமே இல்லாத, **மதியூகி**-சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திர கோபமென இலங்குசெம் மேனியில்
இடைவிடா தொளிகான்றிடும்
இரத்தினம் தரளமொடு பொன்னணிகள் யாவையும்
இளநிலா எறித்துநிற்க
விந்தைமிகு மணநாறு கஸ்தூரி புனுகுசவ்
வாதுசண் ணித்து மிளிர
மேனியிற் பூசுசந் தனக்கலவை யுடன்நெற்றி
மேவுசிற் தூரதிலகம்
தந்திடும் பேரெழில் சிந்திடும் பரிமளத்
தரத்தினைச் செப்பலாமோ?
தன்னெழில் அறியாத தன்மையள் இன்றுனைத்
தன்னுடன் ஆடவேண்டல்
விந்தையிற் பெருவிந்தை ஆயினும் மறுக்காது
வெண்மதி ஆடவாவே
மேலான ஈசனது வேணியில் உறைகின்ற
வேண்மதி ஆடவாவே. 67

பன்னெடிய காலமாய் விண்வெளி யிலேயுனைப்
பார்த்தவர் மாய்ந்தொ ழிந்தார்
பழைமையொடு முதுமையும் பிணியுமுற் றுற்றதைப்
பறையறிவள் என்ற பயமோ?
உன்னுடைய வெண்ணிறம் காமாலை யென்றதை
உலகினுக் கொளிக்க நினைவோ?
உவையெலாம் உண்மையா மெனினும்நீ அஞ்சற்க
உனைப்போன்ற முதியோ ரையும்
பன்னரிய பெருமையள் எம்பிள்ளை வெறுக்கிலாள்
பாட்டன்என் றன்பு செய்யாள்
அன்னவாம் உண்மையினை உளத்தினிற் கொண்டிங்ஙன்
அம்புலி ஆட வாவே
அம்மையுளங் களிகொள்ள முன்னையம் பதியினில்
அம்புலி ஆட வாவே. 68

---

67. இந்திரகோபம்-தம்பலப்பூச்சி, தரளம்-முத்து, சிந்தூர திலகம்-சிவப்புப் பொட்டு, பரிமளம்-நறுமணம்

68. அஞ்சற்க -பயப்பட வேண்டாம். பன்னிரிய -(பன்னுதற்கு அரிய) சொல்கடந்த, அன்னவாம்—அத்தகையனவான.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்பனுக் குப்பவிசு வந்திடிற் பெரியோரை
அலட்சியம் செய்து தன்னை
ஆகாய உச்சியில் அமர்ந்தவன் போற்பெருமை
அளக்குவன் என்னு முண்மை
உற்பவித் ததுஉன்னி லோஎன்ற பேரையம்
உளத்தினிற் பிறக்க வைக்கும்
உலுத்தனே! தக்கனது சாபத்தி னாலுன்றன்
உருக்குலைந் ததும றந்தாய்
உற்றுநீ எம்பிரான் அடிபற்றி னாயின்றுன்
உருத்தேய்ந்தும் அழித லற்றாய்
உன்னதத் தவன்பன்னி முன்னையில் உறைகன்னி
உலகநா யகியு ணர்வாய்
அற்றவர்க் காதரம் ஆனஇவள் அழைப்பேற்பை
அம்புலி ஆட வாவே
அழுங்கெனப் பிடிவாதம் ஆகாது காணுடன்
அம்புலி ஆட வாவே. 69

"மதி, மதி" என்னுன்னை மதிப்புடன் அழைப்பினும்
மதித்திடா மூடமதியே!
மகத்தினில் நீபெற்ற மதுரசம் உன்றனை
மயக்கவும் நிலைமறந்தாய்
பதிந்துனில் நிலையாகக் கறையிருந் திடுவதும்
பாவலர் முயலென்றதைப்
பாடியுன் குறையினை மறைத்தலும் எமக்கெலாம்
பகிரங்க மானபோதும்
நதியினைச் சடையினில் வைத்தவன் பாகத்து
நாரியின் வேண்டுகோளால்
நாமுன்னைப் பலவா நிரக்கின் றனம்வானில்
அதிவிரைவி னோடுமவள் முகமலர வைக்கவே
அம்புலி ஆடவாவே
அரன்முடி யிலேயினும் இடம்பெறுதல் வேண்டுமேல்
அம்புலி ஆடவாவே. 70

---

69. பவிசு -பெருமை, உற்பவித்து -பிறந்து, பன்னி-பத்தினி என்ற சொல்லின் திரிபு, மனைவி, அற்றவர்-துணையில்லாத அகதிகள், ஏதும் இலிகள்.

70. 1.மதி-சந்திரனே (விளி) 2.மதிப்புடன்- கௌரவமாக, மதித்திடா-மதிப்பளிக்காத, மூடமதியே-மூடமான புத்தி (மதி-புத்தி) உள்ளவனே, மகத்தினில் (முகம்-அத்து+இல், மகம்-வேள்வி) வேள்வியில், நாரி-பெண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௮. அம்மானைப் பருவம்

ஆயிரத் தெட்டண்டம் கைப்பந்த தென்னவே
ஆடிடும் எங்கள் அன்னாய்!
அவையுன்றன் அணிபாதச் சிலம்பின்ஒலி என்னவே
அதிர்ந்திடச் செய்ய வல்லாய்!
★தாயிலைத் தந்தையில்லைத் தண்ணளிசெய் ஜனனிநீ
தாய்முலை சுவைக்கி லாதாய்
தந்திடுவை உன்னமுத கலசமத னாலுலகு
தழைத்துச் செழிக்கு மன்றோ?
பாயிருட் பட்டுலகு வாட்டமுறு வேளைதனிற்
பரிந்தருளை ஈய வல்லாய்!
பாலகி ஆனதெம் மேலதிற் கொண்டவருட்
பாலிப் பெனல்சத்ய மாம்
ஆயெமக் கென்றுமாய் முன்னைக்கு வந்தனை
அம்மானை ஆடி அருளே
அருளுளக் கருத்தெமக் கறிவித்து நின்றுநீ
அம்மானை ஆடி அருளே 71

ஐம்பொறி எனுந்தீயில் அர்க்கியம் ஆகவுயர்
அரன்ஞானம் அவிச தாக
அதனோடு ஞேயமாம் வத்துகளை இட்டுமே
அயர்விலா ஞானி செய்யும்
உம்பருஞ் செய்யொணா உயர்மகப் பாவனை
உத்தமச் சித்து நிலையில்
அறிவானும் அறிவதும் அறிபொருளும் என்கின்ற
அஞ்ஞானம் தீய்ந்து போகும்
இம்பரில் அம்மையே! உன்றனுக் காற்றிடும்
ஏற்றமார் ஸ்ரீ சக்கர
இயல்பமை பூசையின் உச்சமென் றிதனினை
இயல்புணர்ந் தார்உரைப்பர்
அம்பொனே! முன்னையில் இப்பூசை ஏற்றுநீ
அம்மானை ஆடி அருளே!
அரியயன் காணொணா அரனுடைய பன்னியே!
அம்மானை ஆடி அருளே. 72

---

*71.★ சிவபிரான் போலவே அம்மையும் அநாதி. எனவே அவளும் தாயும் தந்தையும் இல்லாதவளே. சாக்தர், பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் அவளுக்குப் புராணங்களே தக்கன், இமவான் ஆகிய தந்தையரைக் கற்பிக்கின்றன.* ***ஆய்***-*அன்னை,* ***அம்மானை***-*பெண்கள் எறிந்தாடும் கறங்கு போன்றதொரு கருவி.*

*72.* ***ஐம்பொறிகள்*** *-மெய்(உடல்), வாய், கண், மூக்கு, செவியாகிய ஐந்துறுப்புக்கள்,* ***அர்க்கியம்***-*நீர்வழிபாடு,* ***அவிசு*** *-வேள்வித்தீயில் இடப்படும் உணவு (அவிர்ப்பாகம், அவி எனவும் வழங்கும்)* ***ஞேயம்***-*நெய்* ***வத்து***-*(வஸ்து) அவிர்ப்பாகத்துள் இடப்படும் பிறபொருள்கள்,* ***உம்பர்*** *-தேவர்* ***இம்பர்***-*இவ்வுலகம்,* ***ஸ்ரீ சக்கர பூசை*** *-அம்பிகையை ஸ்ரீ சக்கரம் என்ற யந்திரத்தில் வழிபடல்,* ***இயல்புணர்ந்தார்*** *-சாக்தர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பதும்நீ நடப்பதும்நீ நிலைபே றின்றி
நிகழ்ந்துமுடி வனவெல்லாம் நினது தோற்றம்
நிர்விகா ரப்பொருளாய் நின்ற வண்ணம்
நீள்புவியில் விகாரங்கள் நிகழ்த்துவித்தே
அற்பமிவை எனக்காட்டி மறைப்பு நீக்கி
அருள்ஞானம் இறுதியிலே அளிப்பாய் நீயே
ஆதலால் உனையல்லாற் கதியொன் றில்லை
அறிதோறும் அறியாமை அகலச் செய்யும்
சிற்பரையே! சியாமளையே! சிந்தாகூலம்
தீர்ப்பவளே! ஜகத்ஜனனி! சிவனார் போற்றிச்
சித்திரமாய் உளத்தெழுதி அழகு பார்க்கும்
சவுந்தரியே! நிரந்தரியே! சம்புபாரி!
அற்பரெமக் கிரங்கியிளம் பாலையாகி
அழகாக அம்மானை ஆடநன்கே
அசைந்தசைந்து கைபரப்பி மேலெறிந்தே
அன்னாய்! நீ அம்மானை ஆடு நன்கே. 73

ஆன்மா என்றிடில் அஃதொன்றே
அதுவே நிலையாம் பராசக்தி
அன்றிமற் றுளவேலாம் அசத்தியமாம்
ஆகவே ஒன்றே பரப்பிரமம்
என்றும் உள்ளது வேறில்லை
உள்ளன இல்லன பிறவெல்லாம்
ஓர்ந்திடின் வானத் தாமரையென்
றுணர்ந்தே சாக்தர் உரைத்திடுவர்
உன்னிடு சத்துசித் தானந்தம்
ஒன்றிய சங்கமம் சக்தியலால்
உரைத்திடப் பிறிதொன்றும் இல்லையென
உணர்வதே உண்மையென் றிசைத்திடுவார்க்[கு]
இன்னிலை ஈந்திடு சிற்பரையே!
இனிதாய் ஆடுக அம்மானை
ஏரார் முன்னைப் பதிநிதியே!
இசைந்தே ஆடுக அம்மானை. 74

---

73. நிர்விகாரம்-விகாரம்(பாதிப்பு) அடையாமை, விகாரம்-பாதிப்பு, மாறுதல், சிந்தாகூலம்-மனக்கவலை, ஜகத்ஜனனி-உலகத்தாய் (ஜனனி-தாய்)

74. சத்து, சித்து ஆனந்தம் -சச்சிதானந்தம்: உண்மை, அறிவு, தூயமகிழ்வு இவை மூன்றும் இணைந்த சச்சிதானந்த சொரூபிணியாக அம்மையைச் சாக்தர் கொள்வர், இன்னிலை-இனிமையான உயர்நிலை (முத்தி), பதிநிதி -(முன்னையாகிய), தலத்தின் செல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிற் காயத் திரியாவாய்
கடுமதி யஞ்சரஸ் வதியாவாய்
மாலையிற் சாவித் திரியாவாய்
மாண்பார் ஒளியினில் திளைத்திதுவாய்
சால மிகுந்திடு பத்தியுடன்
சாற்றியுந் நாமஞ்சொல் லித்துதிப்பார்
சங்கடம் போக்கிநல் லின்புறுதல்
சரதம் எனபதற் கையமுண்டோ?
சால்புடை வேதாந்த தத்துவத்தின்
சத்திய நெறியது நித்தியமே!
சகமுயர் ஸ்ரீசக்ர மத்தியளே!
சாற்றுதற் கரியவெம் வித்தகியே!
ஆலென எமக்கெலாம் ஆகிடுவாய்
அன்னே! ஆடுக அம்மானை
உரையினைக் கடந்தவெம் முன்னையவளே!
ஒளியே! ஆடுக அம்மானை. 75

கோடுமே கோடினுங் கோடெனக் கோடுவர்
கோடத்திற் கலையெழில் காண்பர்
கோலது கோடிடி லோஅது கொடுங்கோல்
கொண்டிடா ததனைநல் லரசு
"காட்திற் புலியோ டுறைந்திடல் நன்றாம்
கசிவிலா ஆட்சிசார் நாடு
கனிவளந் தரினும் துயர்க்கிட" மென்று
கருதியே உரைத்தனர் முன்னோர்
வீடெலாந் துறந்து மென்மைகள் இழந்து
வேதனைக் கடலிலாழ் வோர்க்கு
வித்தகி! முன்னை மேவிய எழிலே!
மீண்டும்நல் லின்பம் மேவிட
ஆடிட அருள அருகினில் வந்தே
அம்மானை ஆடிநீ அருளே
ஆதரித் திவரை அளிக்குவை அன்னாய்!
அம்மானை ஆடிநீ அருளே. 76

---

75. சரதம்-உண்மை, நிச்சம் ஸ்ரீசக்கரத்தின் நடுவிலே அம்பிகை எழுந்தருளி அருள் பாலிப்பாள் என்பர்.

76. கோடு -வரி(-) கோடினும் -வளைந்தாலும் கோடு என அதனையும் (கோடு என்ற சொல்லாலேயே), கோடுவர்-கொள்வர், கோல்-செங்கோல் (நடுவுநிலைக்கு அடையாளமாக உள்ள நேரியகோல்), கோடிடின் (நடுவிநிலைநில்லாது ஒருபக்கம் சார்ந்து) வளையுமானால் ஆடிட-மகிழ்ச்சிக்கு அறிகுறியான ஆடல்பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவை மருவி அருவை ஒருவி வருவை சிறுமி அருகிலே
ஒருமை அருமை யுறநீசிறுகை தனிலே பொருவில் பெருமைகொள்
விரியு மெழிலம் மனைமி னுடனெம் விழிகள் விரிய மகிழ்வுற
விரைவில் திருவும் கலையின் உருவும் விறலி னெழிலும் உடன்வர
எருவை உரிவை செறியு மருவ முரியன் களிகொள் ஸிமவதி!
இரவு ஒருவ மருவு பகலில் முனைய ரிடையில் வருகுவாய்
தருவை அனைய நிழலைத் தருமொர் அருளில் மருவு பெரியைநீ
தயவு மிகவம் மனைய ளறிந்து தழைவோடாடி அருள்கவே. 77

பழவினை புதுவினை எவைஎவை உளஅவை
பாறிஅழிந் திடவே
பரங்க ருணைத்தடங் கடலென வந்திடு
பர்வத வர்த்தனியே
குழைவுடன் உன்னடி கொள்பவர் உள்ளினிற்
கோயில் கொள்பவளே!
குற்றம் இழைப்பினும் பெற்றவ ளாதலின்
குணமாய்க் கொள்பவளே!
விழவுகள் மிக்கிடு முன்னையில் என்றும்
வீற்றிருந் தருள்பவளே!
மெல்லடி மண்ணினில் வைத்து நடந்து
மிக்கம கிழ்வுடனே
இழையணி மேனியொ ளிக்கதிர் வீசிட
ஆடுக அம்மானை
ஈசன் உவக்கத் தேசு மிகுக்க
ஆடுக அம்மானை. 78

---

77. உருவை-(தூல) உருவினை, மருவி-அணைத்து, அருவை-உருவற்றி நிலையை, ஒருவி-விடுத்து, சிறுமி-அம்பாளைக்குறிக்கும் பொருவில்-(பொரு +இல்) ஒப்பிலாத, அம்மனை -அம்மானை (மானை மனை எனக் குறுகிற்று) திரு-இலக்குமி, கலையின் உரு -சரசுவதி, விறலின் எழில்- (வீரத்திருவான) அழகிய துர்க்கை (மலைமகள்), எருவை-புலி, உரிவை-போர்வை, மருமம்-மார்பு, இமவதி-ஹைமவதி என்ற வடசொல்லின் திரிபு (ஹிமவானின் மகள் ஹைமவதி) என்றாவதை வடநூலார் தத்திதாந்தம் என்பர்), முனையர்-முன்னையர் தொக்குமுனையர் ஆயிற்று, தரு-மரம், தழைவு-மகிழ்ச்சியோடு.

78. தடங்கடல்-பெரியகடல், இழைப்பினும்-செய்யினும், தேசு-ஒளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றா மரைத்தடம் பொலிவுமிகு கோபுரம்
கொலிகின்ற மதுரை என்ற
புகழ்பூத்த நற்பதியில் அமிழ்தொத்த நற்றமிழ்
புரக்கின்ற கயற்கண் ணியாய்க்
கற்றவர் மிகுந்திடும் தொண்டைமண் டலத்தினிற்
காஞ்சிநன் னகர மதனில்
கனிவினொடு முப்பத்தி ரண்டாகும் அறஞ்செய்து
காட்டியருள் காமாட்சியாய்
நற்றவர்க் கினியஅருள் நாள்தொறும் நல்கிடும்
நளிர்கடல் நடு வணுள்ள
நலமிகும் நயினையம் பதியினில் அமர்ந்தருள்
நாகபூ ஷணிஅம் மையாய்
அற்றவர்க் கிரங்கிநன் முன்னையில் வடிவழகி
யாகவே நிலவுமம்மே!
ஆனந்த மாகவே ஞாலம் விளங்கநீ
அம்மானை ஆடி யருளே. 79

அகிலம் எங்கும் அமைதிபெற
அன்பும் அறமும் தழைத்தோங்க
அழிவுகள் கொடுமைகள் பாறிவிழ
அன்பில் செயல்கள் நீக்கமுற
இகலில் நீங்கி எல்லோரும்
இணைந்து சமமாம் வாழ்வையுறச்
இதயத்தூய்மை மிக்கோராய்
எதிலும் நலமே நினைவையுறச்
சகல வழியிலும் சத்தியமே
தழைத்துச் செழித்து மேன்மையுறச்
சாடும் பிணிநோய் துயரெல்லாம்
சற்றுந் தலைகாட் டாதொளிக்க
அகங்கொண் டெங்களின் முன்னையளே!
ஆடியருள்க அம்மானை
அவலம் நீங்கிப் புவியோங்க
ஆடிய ருள்க அம்மானை. 80

---

79. புரக்கின்ற -காக்கின்ற, கயற்கண்ணி -கயல் பொன்ற கண்களையுடைய மதுரை மீனாட்சியம்மை, நளிர்-குளிர்மை, பெருமை.

80. இகல்-பகை, சாடும்-தாக்கும், மோதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. நீராடற் பருவம்

நெருப்பனைப் திருமேனி நீற்றினைப் பூசியெந்
நேரமும் வெப்பமிகவே
நிலவிடும் நிமலனின் ஆகத்தினிற்பாதி
நிலைகொண்ட எம்பிராட்டி!
பொருப்பினன் செல்வியாய் உருக்கொண்டு மலையினிற்
பொலிவுடன் வளர்ந்தகாலை
பொழுதெலாம் மழைபனி குளிர்வாடை யாலங்கு
புனலாட மறந்திருந்தாய்
ஒருப்படல் நீராட உனக்கு விழைவின் மையை
உணர்ந்தனம் எனினு மெங்கள்
உளமெனுந் தாமரைத் தடத்திலும் முன்னையின்
ஒருபுனித ஆறுதனிலும்
விருப்புடன் நீராடி அநுபவம் கொண்டஉனை
வேண்டநீ ராடியருளே
மிகுமணச் சுகந்தமளை குளிர்நீ ரிதாமிதில்
விரும்பிநீ ராடியருளே. 81

அமணர்கள் திகம்பரர் ஆதலால் அவர்போல
ஆடையணி யாத பேரை
அம்மணம் ஆகவே திரிகிறார் என்றுமுன்
அவமதித் திழித்து ரைத்தார்
அமையமை தோளியர் அவர்முனர் வாராமல்
அஞ்சிநா ணுற்றொ ளித்தார்
ஆயினும் குழவியர் மேனியினில் ஆடையை
அணியாமை எள்ளல் உண்டோ?
உமை!எம தினியநற் குழவிநீ அமுதம்நீ
உன்வெறும் மேனிகண் டுவப்போம்
ஒருமுறை எமதுமன் றாட்டினை ஏற்றுவந்
துளங்குளிர நீராடுவாய்
எமைமிகுத் தெய்த்திடா தெளிவந்து கணத்தினில்
இளயை!நீ ராடியருளே
இத்தரை யிலேநினது சித்தத்தை வைத்துமே
இனிதுநீ ராடியருளே. 82

---

81. பொரும்பினன் -இமவான்(பொருப்பு -மலை), சுகந்தம் -நறுமணம்.

82. அம்மணம்-ஆடை தரியாமை, நிர்வாணம், அமை- மூங்கில், (மூங்கில் போல) அமைந்த, எய்த்திடல்-ஏமாற்றதல் (ஏய்த்திடலின் குறுக்ல விகாரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சு தலைக்குரியார் நஞ்சுமிடற் றிறையார்
அம்பொன் மலைக்கவரே - பதியாவார்
அஞ்சொல் உரைத்திடென்னக் கஞ்சம் எனஅருகில்
கொஞ்சம் முகமலர்வாய் - உனைவேண்ட
நெஞ்சம் இளகியெழில் மஞ்ஞை! உரைத்திடுவாய்
தஞ்சம் தனையடையும் - நெறியாக
விஞ்சும் திறம்அமைந்த தந்த்ரம் மிகவிரிவாய்த்
தலைவர் உரைத்தவகை - தருவாயே
அஞ்சும் உளத்தினராய்க் கெஞ்சும் அடியவர்க்காய்
வஞ்சப் பவந்தொலைய - வழிகாட்டும்
அஞ்சொல் லினிலமைந்த செஞ்சொற் சிறப்பமைந்த
அற்றம் தவிர்க்கும்நெறி - அருள்வாயே
எஞ்சும் வினைதொலைய முன்னைப் பதியினிலே
எங்கள் அழைப்பிதனை - உவந்தேற்ற
ஏத்தித் தொழும்எமது பாசம் தொலைக்கவிந்த
இன்னீரில் நீராடி -அருள்வாயே. 83

ஐந்துமா கடலும் அலையெறிந் தார்த்தும்
அவனியை அழித்திடா தருள்வாய்
அலைத்துலைத் தெழுந்து சுழல்வளி வரினும்
அஞ்சிடோம், நீயரு குள்ளாய்
வெந்துகாய்ந் துலறி வெந்தழற் பிழம்பாய்
விளங்கிடும் பாலையிற் சோலை
மேவிடச் செய்வாய் மேலுமே பலவாய்
வியத்தகும் அருட்செயல் புரிவாய்
அந்தமொன் றில்லா அநாதியே! உன்றன்
ஆற்றலுக் கிறுதியும் உண்டோ?
ஆயினும் இன்று குழவியாய் மாறி
அடம்பிடித் தழுதிடல் நன்றோ?
எந்தமின் அன்புப் பணிப்பினை மறுக்கேல்
எழுந்துவா, நீராடி அருளே
ஏன்பிடி வாதம்? முன்னையின் தவமே?
இசைந்து நீராடி அருளே. 84

---

*83. திருப்புகழ் சந்தத்தில் அமைந்த காடல்-ஒவ்வோரடியின் ஈற்றுச் சீரின் ஈற்றசை இரண்டும் நேரசைகளாய் அமைக்கப்பட்டன. கஞ்சம்-ஹம்சம் (அன்னம்), மீண்டும் உரைக்க வேண்டினார் என்பது கற்பனை)*
**இன்னீர்** - இனிமை+நீர்

*84. சுழல்வளி - சூறாவளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுடன் தயிர்ப்பழம் நெய்யோடு சுகந்தநற்
பரிமளம் அளைந்த நீரிற்
பல்லாண்டு பல்லாண்டு பலகால மாகநீ
பரிந்துநீ ராட விலையோ?
சேலுறழ கண்ணியுன் திருவிழா நாள்களிற்
றிருமறையி னொலியி னுடனே
தேர்ந்தசிவா சாரியர் அபிடேகம் ஆட்டிடச்
சிலிர்த்துநீ மகிழ விலையோ?
மாலுறுத் தும்வசந்த சரத்தெனும் ருதுக்களில்
வருகின்ற நவராத்திரி
மகிமைபெறு மிருபெரிய விழவிலும் அபிடேக
மாட்சியிற் றிளைக்க விலையோ?
ஏலமார் குழலிநீ இன்றுபிடி வாதமேன்?
ஏழுந்துநீ ராடி அருளே
எத்திக்கம் முன்னையெனு முத்தமப் பதியினில்
இன்றும்நீ ராடி அருளே. 85

கண்ணனெனும் உன்னண்ணன் தாய்சொலைக் கேளாது
கடிதுமே தவழ்ந்து சென்று
கட்டிவை பசுத்தொழுவி லேயருண் டழுக்குடன்
காட்சிதரக் கண்ட அன்னை
உண்ணெகிழ்ந் "தென்னுடைய மைந்தனே! நீராட
ஓடிவா" என்ற ழைத்தால்
ஒருகாலும் வாராது மேலுமுருண் டிடுதலுன்
உதிரத் திலுங்கு லப்போ?
மண்ணினிற் புரண்டுநீ மாசுற்ற மேனியொடு
வருவதும் அழகா யினும்
மாயவன் ஆண்பிள்ளை நீயோபெண் ணாதலால்
மற்றவர் நகைக்க முன்னர்
எண்ணியெங் குட்டனே! இனியும் மறுக்காமல்
எழுந்துநீ ராடியருளே
எற்றுக்குச் சீற்றமோ? முன்னையர் செல்வமே!
இனிதுநீ ராடியருளே. 86

---

*85. சேல் - ஒருவகைமீன், ருதுக்கள் -(கால) பருவங்கள்*

*86. உதிரம் - இரத்தம், குட்டன் - சிறுபிள்ளை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னினிற் செய்திட்ட பாத்திரத் திற்பல
புதுமண மலர்களிட்டுப்
போதாத தற்குநற் பன்னீர் கலந்திட்ட
புதியநீர் தன்னி லுன்னை
இன்புடன் நீராட்டிப் பட்டினா லேதுடைத்
தினியஅகிற் புகையு மிட்டே
எழிலான பாவாடை சட்டையிட் டேநெற்றி
இலங்கிடவெண் ணீற ணிந்து
பொன்னுதற் பொலிவுறப் பொட்டுமிட் டுப்பார்த்துப்
பூரிக்க அன்னை மேனை
பொழுதெலாங் காத்திருந் திருந்தஇட மீதினிற்
புற்றெழச் சலித்து விட்டாள்
இன்னமும் வாரா திருந்திடில் என்செய்வாள்?
எழுந்துநீ ராடி அருளே
இன்னிய ராம்முன்னைப் பதியினர் ஏக்கமற
இன்று நீராடி அருளே. 87

எண்டிசைகள் எங்கணும் கண்டவர்கள் இடியேற்றை
ஏற்றரவு கொள்ளும் அச்சம்
எய்தியே உயிர்ப்புமிக் கொடுங்கிட் டொளிப்பிடம்
எங்கெனத் தேடி ஓடச்
சண்டர்முண் டர்எனுந் சண்டாளர் சென்றவர்
சாவினை அடைய வைப்பார்
சற்றுமே இரங்கிடா மாகொடிய பாதகர்
சகத்திலும் விண்ணி டத்தும்
மண்டியே செய்கொடுமை மாளாது மாளார்கள்
மாதேவி! உற்று ரைக்க
மட்டுவார் குழலிநீ அக்கொடிய பேரினை
மர்த்தனம் செய்த ருளினாய்
சண்டியே! நாங்களச் சண்ட முண்டர் அல்லர்
சற்றுநீ கடைக்க ணித்துச்
சகத்துயர் முன்னையில் எங்கட் கிரங்கியே
சார்ந்துநீ ராடி யருளே. 88

---

*88. அரவு -பாம்பு, சண்டமுண்டர்-சண்டன் முண்டன் என்ற கொடியோர் அவர்களை வதைத்தமையால் (மர்த்தனம்-வதை) அம்பிகையைச் சண்டி எனவும் அழைப்பர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரியநீர்க் கடலிடைப் படிந்திட வெண்முகில்கள்
கடிதெழும் தம்விடாய் தணிந்த
களிப்புடன் கறுத்துமிக இடித்துமின் னிச்சேய
காணுமலை களிற்ப டிந்தே
பெரியமழை பொழிவ தற்காயகோ லத்தினைப்
பேதையர் கண்டஞ் சுவோம்
பேசுதற் கரியதாம் குளிர்வாடை உன்றனைக்
கொடுகொடுத் திடச்செய் யமுன்
அரியநற் றவத்தளாம் உன்னன்னை மேனையாள்
அழைப்பினுக் கிரங்கி வாராய்
அன்னையின் வேண்டுதற் கிரங்காத பேரிந்த
அகிலத்தில் எவரும் உண்டோ?
பரிவுடன் ஓடிவந் தவளையும் எம்மையும்
பார்த்துநீ ராடி யருளே
பாலகி! ஞாலமிசை வந்துவிளை யாடுவாய்
பகவதி!நீ ராடியருளே. 89

சந்த மிகுத்திடு சிந்து மிழற்றிடு
சதங்கைகள் கல்கலெனச்
சங்கினிற் செய்வளை எங்கணும் எதிரொலி
தந்துநல் லோசையிட
வந்தனை தந்தவர் பந்தம தந்தமும்
வந்ததென் றுணர்வூற
வங்கம தற்களி தங்கொளி விளக்கென
வழிதுறை காட்டிடுவாய்
சிந்தனை கொண்டுனை எந்தம துளத்தினில்
சேர்ந்திடச் சேயுருவில்
செந்தளிர் விஞ்சிடு கந்தம லர்ப்பதம்
சிறந்தெமைக் காத்திடநீ
அந்தமில் முன்னையில் வந்தனை இன்புற
ஆடுக நீரினிலே
அஞ்சொ லிளங்கிளை! மஞ்சணி குழலினை!
ஆடுக நீரினிலே. 90

---

*90. சந்தம்-இன்னோசை, சிந்து-பாட்டு, அந்தம்-இறதி, மஞ்சணி-(மஞ்சு அணி) மேகமென அழகிய, வங்கம்-கப்பல், ஒளி விளக்கு-கலங்கரை விளக்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. ஊஞ்சற் பருவம்

சொலற்கரிய ஒளிதவழுஞ் சிவந்தபவ ளங்கொண்டு
துவன்றிட இயற்று தூண்கள்
தொகுநான்கி னவற்றுமிசை தூயவொளி வைரத்திற்
சுடருநல் விட்ட மிட்டு
நிலையவாய் மாணிக்க மணிகள்கொண் டமைத்திட்ட
நேரிய பலகைமீதில்
நிலவுமெழி லிரத்தினக் கம்பளம் விரித்ததின்
நிலைபெற வீற்றிருந்து
நிலவினொளி தவழுமுக மதியினிற் குவளைபொரு
நீள்விழி மலர்த்தி இன்பில்
நிலைத்துமிக வெளிப்படுவ தெனநித் திலவரிசை
நேரிலா ளிரிலு சிறிதே
புலப்படக் கொவ்வையிதழ் பூத்துமே நன்கிலகப்
புன்னகை புலப்ப டுத்திப்
பொன்னரின் இன்பினிய முன்னைப் பதிக்கரசி
பொன்னூச லாடி அருளே. 91

நீலநிறை வைரவன் மாகாளி சீதரன்
நின்னருகு வந்து நிற்க
நிழல்போல அவருடன் திருமகள் வாணியெனும்
நேரரிய தெய்வ மாதர்
சாலநின் னூசலினை ஆட்டுதற் கமைந்ததாம்
சால்புடைக் காட்சி ஓரிற்
சகமீது கவிகின்ற ஆகாய மீதிலொளிர்
சகஉடுக் கூட்ட மெனலாம்
ஆலமன் றுண்டமிர்த மாக்கினா னவனுடன்
ஐங்கரன் ஆறு முகனாம்
அரியபெரு கடவுளர் சூழ்ந்திடுந் காட்சியினுக்
காருவமை கூற வல்லார்?
போலவென் றெவற்றையும் காட்டிடற் கில்லைஅவர்
பூரித்து நிற்கவேஎம்
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடியருளே. 92

---

91. துவன்றிட-பொலிந்திட், மிசை-மேலே, விட்டம்-மேற்றட்டி, பொரு-போன்ற, பொன்னர்-பொன் போலும் மேனியரான் (பொன்னம்பல வாணரான) சிவபெருமான்.

92. சீதரன்-திருமால் மார்பிலு தரித்த திருமால் (ஶ்ரீதரன்-ஶ்ரீ (சீ எனத் தமிழ் வடிவம் பெறும்)-இலக்குமி) ஓரில்-ஆராய்ந்தால், சக உடுக் கூட்டம்-கூட்டாளிகளான நட்சத்திரக் கூட்டம் (உடு-நட்சத்திரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமாட்சி நிறைகாஞ்சிக் காமாட்சி யாயுலகு
காத்திடப் பல்லறங்கள்
கருதியருள் செய்தநின் கடைக்கணருள் வேண்டியே
ககனத் திருந்துவந்து
நாமாட்சி மிக்கநற் கவிவாணர் சூழ்ந்துன்னை
நாள்தொறும் பாடியுருகும்
நல்லபதி முன்னையில் குழுமியுளர் அவர்பாரம்
நாகத் தலைநெரிக்கும்
கோமாட்சி யாற்பெருமை கொண்டநற் குளக்கோட்டன்
குலவுபராக் கிரமபாகு
கோடில் கீர்த்திஸ்ரீ ராஜசிங்க கன்முதல்
கூட்டுபணி யாலுயர்ந்து
போமாட்சி என்றொன்று மின்றியே நின்றுலவு
புகழாட்சி யாலுயர்ந்த
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடியருளே. 93

கார்முகில் இதுவென றுன்னிய கடல்தன்
கடனினைத் திருப்பென அதனைக்
கைகளாம் அலைகள் விரித்தழைத் திடவாம்
கருங்குழற் கற்றைமிக் கொளிகால்
ஏர்மிகு மதியம் இதுவென விழுங்க
எழுந்தவாள் அரவது நாணி
ஏங்கிட அமைந்த பேரெழில் வதனம்
இவைமலர்க் குவளையென் றெண்ணி
ஆர்வமாய் மதுவை நாடியே வந்த
அளிக்குலம் ஏய்ப்புறு விழிகள்
அருஞ்சுவைக் கனியைக் கொந்திடும் ஆர்வத்[து]
அணுகுபுள் ஏலந்திடுங் கதுப்பு
போர்க்கள ஆர்ப்பிற் புலம்புறு சிலம்பாற்
பொலிந்திடு பாதபங் கயங்கொள்
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடி அருளே. 94

---

93. காமாட்சி-(கா+மாட்சி)பூஞ்சோலையின் சிறப்பு, நாமாட்சி-நா+மாட்சி -நாவின் சிறப்பு (நாவன்மை), நாகம்-(பூமியைத் தாங்கும்) ஆதிசேடன் என்ற நாகம், கோமாட்சி-அரசன் என்ற சிறப்பு, கோடில் -கோடுஇல்-(வளையாத, தாழாத), கீர்த்தி-மிகுபுகழ், போம்+ஆட்சி-(போமாட்சி) ஆட்சி போகும் என்ற அச்சம்

94. கடலானது தன்னிடம் முகந்த நீராகிய கடனைத் திருப்பித் தா என்று கார்முகிலைத் தன் அலைகளாகிய கைகளை நீட்டிக் கேட்பது, உண்மையிற் கார்முகிலை அன்று கார்முகில் போன்ற காட்சி தந்த அம்மையின் கூந்தலைக் கார்முகில் என்று மயங்கியதால் விளைந்த விளைவு என்பது கற்பனை, மது - தேன், அளிக்குலம் - வண்டுக்கூட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்து முக்கோடி தேவரொடு கந்தருவர்
முற்றமுள கின்னரர்கள்
மூவாத மலவாதை தாவாத நந்தியொடு
முதன்மைபெறு சிவகணங்கள்
பப்பத்தெனும் நெடிய பலவாண்டு பெருந்தவம்
பலசெய்த முனிபுங்கவர்
பகர்ஞான நெறிநின்று நினையருவ நிலையினிற்
பதித்தவுளப் பெருமையாளர்
செப்புற் கரியநற் பத்தியிற் றிளைத்தேபேர்
ஸ்ரீசக்ர பூசை செய்வோர்
சேல்நெடுங் கண்ணி!யுனை வேதநெறி தவறாது
வியன்பூசை செய்யு மறையோர்
பொற்பதுமை யாயுனைக் கண்டுமே வணங்கிடப்
புகுகின்ற வர்களிக்கப்
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடியருளே. 95

செங்கதிர் பொங்கொளியின் வெய்யவர் பலகோடி
சேரினும் பொருவி லாத
செவ்வொளி முகத்திலகு பவ்வியத் திருவொளியைச்
சிறிதாய் ஒடுக்கி அடியார்
பொங்கிமல ரப்பொலியும் அங்கருணை தங்கியுறை
புவனஈச் சரியெ மன்னாய்
பூப்புனை ஆரமும் புகழ்புனை ஆரமும்
பொலியுமெம் ஆதாரமே!
துங்கமணி மின்னுமுடி தங்கமொளிர் கங்கணமும்
தொக்கபல வைரவணியும்
தோயுமெழி லுக்கழகும் ஏயவல வென்றமையும்
ஜோதிஸ்வ ரூப மதலாய்!
பொங்கிவரு கடலலைக் கௌன்னவுன் திருநாமம்
போற்றிசெய் ஒலிமிகுக்கும்
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடியருளே! 96

---

95. கந்தருவர், கின்னரர் - தேவ உலக இசைவாணர், பப்பத்து-நூறு (நூற்றுக்கணக்கான)

96. வெய்யவர்-ஆரியர், பொருவிலாத - ஒப்பிலாத, பவ்வியம்-புனிதம், மென்மை, ஆரம்-மாலை, துங்கமணி -தூய இரத்தினம், கங்கணம்-காப்பு, ஏயும் -ஒக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கணார் நெற்றியின் விழியெனுந் தீயிலே
மூவிரு முகங்களுங் கொண்டு
முத்தைய னானவன் மூடனாஞ் சூரனின்
மோகபா சங்களை அழித்தான்
சொக்கமாந் தங்கநற் றமிழிணைப் புரந்தனன்
'சொற்றனில் உயர்தமிழ்ச் சொல்லே'
தூய்கலை வாணரும் அச்சொலாற் புணைந்துமே
துதித்திடச் சூழ்ந்துநிற் கின்றார்
தக்கணந் தன்னிலே மிக்கதாம் மேன்மையில்
தரித்திடும் அம்மொழி யினிலுன்
தயைமிகு பெருமை இயைந்திடப் பான்தேன்
தந்திடச் செவிமடுத் தருந்தப்
புக்கஎம் பாவாய்! புரமெரி மடுத்திட்ட
புல்லியர்க் காய்ந்தவ ரான
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடி யருளே. 97

செந்தா மரைக்கெழில் தருமுகச் செல்வியுன்
திருமுனர் ஆடிடார் யார்?
செயம்செயமென் றுன்னடிச் சிலம்புகள் நனிமிகச்
சேர்ந்துமே கலக லென்ன
மந்தா கினிச்சடையர் தொந்தோ மெனப்பதம்
மண்ணிற் பதித்தும் ஆட
மாலுடன் திசைமுகனும் ஐங்கரன் தன்னினொடு
வள்ளிமண வாள னாடக்
கந்தார் மலர்க்குழற் பூமகள் நாமகளும்
கலைக்கரசி கூடி ஆட
களிவிழி பொழிநந்தி சுரருடன் நாரதர்
கந்தருவர் பலரும் ஆடப்
பொந்தார் அரவி னொடு மஞ்ஞையும் குருகுகளும்
பூரித்து மிகவும் ஆடப்
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசால் ஆடி யருளே. 98

---

97. முக்கணார்-மூன்று விழிகள் உள்ள சிவன், சொக்கம்-அழகு சொற்றனில்-சொல்தனில், சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே-பாரதி, தக்கணம்-தட்சணபீட பூமி, தென்னிந்தியப் பிரதேசம், மடுத்து - அழித்து.

98. நனிமிக -மிகமிக (நனி -மிகுதியைக் குறிக்கும் உரிச் சொல்), மந்தாகினி -கங்கை, பொந்து -புற்று, மரத்தடியில் உள்ள (துவாரம்) துளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லா மருங்கினில் மேகலை இலங்குவ[து]
எவ்வாறென் றயிர்க்க வைக்கும்
இருக்கும் எழிலமுதம்! நீயூச லாடுகையினில்
இருங்குழல் இல்லையென் றார்க்கும்
பொல்லாத புருவவில் விழிகள்கணை வேலெனிற்
பொருந்திநாம் நோக்க லாமோ?
புன்னகை புரியினும் பற்களின் தரளவொளி
புகுந்துவிழி கூச வைக்கும்
மல்லார்ந்த திண்டோளர் ஆனவுன் மணவாளர்
மறைந்திடப் பணித்த துண்டோ?
மாபெரிய தாயின்று மழலையுரை குழவியாய்
மாறியது யார்கு றித்தோ?
புல்லியுன் அடியிணைகள் பிடிக்க விழைஎங்களைப்
புரிந்துநீ காட்சி தந்தே
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூசல் ஆடி அருளே. 99

நலிவுசெய் தீமைகள் கொடுமைகள் நீங்கிநாம்
நன்மையில் திழைக்க என்றும்
நாய்களாய் அச்சமிகு கோழையாய் உலகினில்
நகர்ந்திடா திருக்க என்றும்
கலியுகம் விலகிநற் கிருதயுகம் உதித்திங்கு
களிப்பெமக் காக என்றும்
கடமையைப் புரிந்துபயன் உனது கடனென்னவே
களித்துநா மிருக்க என்றும்
பலியினுக் கிடவளர் கடாக்களாய் மாந்தர்கள்
பதைத்திடா திருக்க என்றும்
பாரினில் வாய்மையோ டன்பருளென் றின்னவை
பண்டுபோ லமைய என்றும்
பொலியுமருள் நிறைந்தபெண் ணமுதமே! எங்களது
புகலிடம் ஆன பொருளே!
பொன்னரின் இன்பினிய முன்னைக் கரசிநீ
பொன்னூச லாடி அருளே. 100

---

*99.* மருங்கு - இடை

*100.* நலிவு - துன்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுரை

நூலாசிரியர் எவரும் ஒரு நூலினை எழுதி நிறைவு செய்தபின் அது பற்றிக் கூறவுள்ள அமிசங்களைத் தொகுத்து எழுதும் அறிமுகவுரை, முகவுரை என்னும் பெயரால் நூலின் தொடக்கத்திலேயே இடம்பெறுவதே மரபு. இதில் நன்மையும் உண்டு. ஆசிரியர் எதிர்பாராத தீமை விளைவதும் உண்டு.

நூலைப் படிப்பவர் முகவுரையைப் படிப்பதன் மூலம் அதன் பயன்பாடுகளை உணர்ந்து நூலில் ஈடுபாடு கொள்ளத் தூண்டப்படுவது நன்மை. நூலின் உள்ளடக்கம் இவ்வளவுதானா என்று முகவுரைக்கப்பாற் செல்லாது நூலைப் புறந்தள்ளுவது தீமை.

“முன்னீச்சரத்து அருள்மிகு ஸ்ரீ வடிவழகாம்பிகை பிள்ளைத் தமிழ்” என்ற இந்நூலுக்கு நான் நிறைவுரை எழுதுவது மேற்குறித்த நன்மை, தீமையைக் கருத்திற் கொண்ட அச்சத்தினாலன்று.

அகிலாண்ட கோடிகளையும் அளித்தருளும் வடிவழகாம்பிகை மீது ஒன்றுக்கும் பற்றாத சிறியேனாகிய யான் பாடிய இப்பிரபந்தத்தினை அவளின் அடியார் கூட்டம் படிக்கும் என்பதற்கு எவ்வித ஐயமும் இல்லை. ஏனெனில்,

செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொ ருட்குரை யாவருங் கொள்வரால்

என்னும் அவையடக்கம் [சேக்கிழார் சுவாமிகள் அருளியது] இந் நூலுக்கும் நல்லரணாகும் என்பது என் நம்பிக்கை.

இந்நூல் வாயிலாகச் செப்பலுற்ற பொருள், எம்பிராட்டி முன்னையாளைப் பற்றியதாகும். எனவே அப்பொருளே இந்நூலினைப் படிக்கப் போதிய தூண்டுதலாகும்; அரணுமாகும்.

கல்லிலும் உலோகங்களிலும் தெய்விகப் பொலிவும் கலையழகும் இணைந்திடும் வகையிலே சிற்பிகள் பிள்ளையாருக்குப் படிமங்கள் அமைத்து, அவை ஆலயங்களிலே எழுந்தருளி அடியவரின் வழிபாட்டிக்கு இடமாவது உண்மையே. ஆனால் சாணகத்திலே பிடித்து வைக்கும் பிள்ளையாரை வணங்கமாட்டோம் என்று எவரும் அடம் பிடிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது முழுமையான ஆற்றலையும் வெளிப்படுத்தியது என்று வியக்கின்றேன்; பிரமிக்கின்றேன்.

தண்ணுலா மழலைப் பசுங்குதலை அமுதினிப்
தாய்வயிறு குளிரவூட்டித்
தடமார்பு நிறைகுங் குமச்சே றளைந்துபொற்
றாள்தோய் தடக்கை பற்றிப்
பண்ணுலாம் வடிதமிழப் பைந்தாமம் விரியும்
பணைத்ததோள் எருத்தமேறிப்
பாசொளிய மரகதத் திருமேனிப்
பசுங்கதிர் ததும்ப மணிவாய்.

என்றும்

பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டலே

என்றும் வருவனபோன்ற அமுதப் பாடலடிகளின் ஒரு சீர்தானும் என்னால் கற்பனை செய்யவும் முடியுமோ என்ற அச்சமும் தளர்ச்சியும் மீதூரவே இப்பிள்ளைத்தமிழ் பிள்ளைமை நிலையில் என்னால் ஆக்கப்பட்டது.

எனினும் முதலிற் கூறியாங்கு செப்பலுற்ற பொருளினால் எனது பிள்ளைப்பாட்டாகிய வெள்ளைப்பாட்டும் சிலகாலமாவது வாழவேண்டும் என்று அன்னையின் அன்புக் குழவியாகிய நல்லை முருகப்பெருமானின் மலர்ப் பாதங்களை வழுத்தி அமைகின்றேன்.

**சொக்கன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் முதற் குறிப்பகராதி


| | பாடல் எண் |
|---|---|
| அகிலம் எங்கும் | 80 |
| அங்சு தலைக்குரியர் | 83 |
| அண்டசரா சரமனைத்தும் | அவையடக்கம் |
| அணுமுதல் இமயம் | 54 |
| அமணர்கள் திகம்பரர் | 82 |
| அற்பனுக்கு குப்பவிசு | 69 |
| அன்னைத் தூவியில் | 57 |
| அன்னையிவ் வுலகினுக் | 63 |
| ஆணவம் மிகுந்திட்ட | 04 |
| ஆயிரத் தெட்டண்டம் | 71 |
| ஆயிரம் இதழ் கொண்ட | 13 |
| ஆயினுமே திருமூலர் | அவையடக்கம் |
| ஆழகடலின் | 25 |
| ஆழியின் நடுவில் | 24 |
| ஆற்றும் பூசை | 12 |
| ஆன்மா என்றிடில் | 74 |
| இதழ்களைப் பீறிமுன் | 07 |
| இந்திர கோபமென | 67 |
| இல்லா மருங்கினில் | 99 |
| உத்தம சத்திய | 28 |
| உத்தி அனைய | 52 |
| உருவை மருவி | 77 |
| ஊழி முடிவில் | 34 |
| எண்டமிசைகள் எங்கணும் | 88 |
| எந்தமிழே! எழிற்றமிழே! | 10 |
| எழிலி னுலகு | 42 |
| ஐந்துமா கடலும் | 84 |
| ஐம்பொறி எனுந்தீயில் | 72 |
| ஓம்எனும் பிரணவத் | விநாயகர் வணக்கம் |
| கத்திக் கொழிக்கும் | 41 |
| கண்ணனெனும் உன்னண்ணன் | 86 |
| கண்ணினைக் கூச | 35 |
| கரியநீர்க் கடலிடைப் | 89 |
| காதலர் வாழ்வினிற் | 62 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| காமாட்சி நிறைகாஞ்சிக் | 93 |
| கார், கூதிர், முன்பனி | 19 |
| கார்முகில் இதுவென் | 94 |
| காரிற் கருத்த | 27 |
| கால, குல, நாம | 18 |
| காலையிற் காயத் திரியாவாய் | 75 |
| கான மயிற்கெழிற் | 33 |
| குளிர்தரு நறுமலர்ப் | 36 |
| கோடுமோ கோடினுங் | 76 |
| கோவணம் துன்னமே | 01 |
| சத்தி இன்றேன் | 47 |
| சந்த மிகுந்திடு | 90 |
| சந்திரமண்டலநடுவில் | 17 |
| சிவணவன் சக்தியையுஞ் | 14 |
| சீரும் செழிப்பும் | 29 |
| செங்கதிர் பொங்கொளியின் | 96 |
| செந்தா மரைக் கெழில் | 98 |
| செம்பவள மேனியில் | 53 |
| செருவில் அசுரன் | 38 |
| சொலற் கரிய | 91 |
| தட்டிக் கேட்க | 02 |
| தத்தன தன்னை | 95 |
| தத்துவப் பித்தென | 58 |
| தாமரை மொட்டு நடு | 61 |
| தாயில்லைத் | 49 |
| திருமால் உளம் மகிழ | 09 |
| நல்லரைக் காக்கவும் | 66 |
| நலந்தி கழ்திரு | குலதெய்வ வணக்கம் |
| நலிவுசெய் தீமைகள் | 100 |
| நனையா விழியும் | 51 |
| நிற்பதும்நீ நடப்பதும்நீ | 73 |
| நீலநிற வைரவன் | 92 |
| நெருப்பனைய திருமேனி | 81 |
| பத்துத் தலையும் | 21 |
| பழவினை புதுவினை | 78 |
| பற்றற்ற பரமர்தம் | 32 |
| பற்றுதற் கின்னினிய | 11 |
| பன்னெடிய காலமாய் | 68 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பாங்கரும் முன்னைப் | 40 |
| பாசக் கடலிற் | 59 |
| பாட்டி னால்வழி | 15 |
| பாரினில் விண்ணிற் | 06 |
| பாரினிற் சிறந்தநற் | 31 |
| பாலா என்னும் | 48 |
| பாலாழி மீதன்று | 64 |
| பாலுடன் தயிர்பழம் | 85 |
| பாலே! தேனே! | 50 |
| பாலோடு தேன்கலந் | 08 |
| புண்ணி யமுன்பு | 46 |
| பொன்னினிற் செய்திட்ட | 87 |
| பொன்னும் செல்வம் | 26 |
| பொன்னைத் தீயில் | 55 |
| பொற்றா மரைத்தடம் | 79 |
| போர்முகில் வந்து | 44 |
| மஞ்சு லாவி | 45 |
| மட்டவிழ் மலர்கொடு | 30 |
| மதி,மதி என்றுன்னை | 70 |
| மாலே பரம்பொருள் | 22 |
| முக்கணார் நெற்றியின் | 97 |
| முகில் மதிவில் | 16 |
| முப்பத்து முக்கோடி | 95 |
| முன்னவர் அறியொணா | 65 |
| முன்னைப் பதியின் | 20 |
| முன்னேச் சரணார் | 23 |
| மூடிருளாம் அமாவாசை வள்ளற் பசுக்கள் | 56 |
| வரம்பிலாப் பெருமைகொள் | 37 |
| வருகுவை என்று | 60 |
| வெள்ளிப் பனிமலை | 43 |
| வேதஞானபரி | 03 |


★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேச்சரம் ஸ்ரீ வடிவாம்பிகை அம்பாள் மீது எழுந்த முன்னேச் சரம் ஸ்ரீ வடிவாம்பிகை பிள்ளைத்தமிழ் எனும் நூல் யாழ்ப்பாணம் நாயன் மார்கட்டு திருவாளர் க.சொக்கலிங்கம் அவர்களால் 1999ல் இயற்றப்பட்ட தாகும். இப்பிரபந்தம்பற்றிய ஆய்வே இந்நூல். இந்நூலை தமிழ்ப்பிரபந்த மரபில் எத்தகைய தனித்துவமும் சிறப்புமுடையது என்பதனை வெளிப்படுத்தும் வகையில் அதனை ஆய்வு செய்து வெளிப்படுத்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

இலங்கையின் புராதன ஈச்சரங்களுள் ஒன்றான முன்னேச்சரத்தின் இறைவியே ஸ்ரீவடிவாம்பிகை அம்பாள் இறைவன் ஸ்ரீ முன்னைநாதப் பெருமான் முன்னேச்சரத்தின் இறைவிமீது எழுந்த பலவகை இலக்கியங்களுள் செந்தமிழ்ச் செழுமைமிக்க இலக்கியமே இந்நூலாகும்.

முன்னேச்சரத்தின் ஸ்ரீ வடிவாம்பிகை அம்பாள் இப்பிரதேசத்தினதும், இலங்கையில் சக்தி வழிபாட்டு மரபிலும் மிகுந்த முக்கிய தத்துவயதாகும். இலங்கையில் சாக்த வழிபாட்டு மரபில் முக்கியத்துவம்பெறும் தனித்துவத்தை யும் சிறப்பையும் விளங்கிக் கூறும் நிலையில் இப்பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னேஸ்வர வரலாற்றுடன் இணைந்த பண்பாட்டம்சங்களும் அம்பிகையின் வரலாறுசார்ந்த பெருமைகளும், வழிபாட்டு மரபுகளும் இப்பிரபந்தத் தில் சிறப்புடன் ஆவணமாக்கப்பட்டுள்ளது. அழகின் வடிவமாக விளங்கும் ஸ்ரீ வடிவாம்பிகையின் பெருமை எவ்வளவு தூரம் இப்பிள்ளைத்தமிழ் பிரபந்தத்தில் காணப்படுகின்றது என்பதனை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

- ஆய்வாளர்

ISBN 978-955-0877-71-3

9 789550 877713

MATHI COLOURS
Nallur 021 2229265

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org